www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 | ஏப்ரல்/மே 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 68

## 57 ஆண்டுகளில் பாராளுமன்றத்திற்கு 13 தடவைகள் வாக்களித்தோம் கண்ட பலன் என்ன? ஆட்சி நடத்துவது யார்? ஆளப்படுவது யார்?



## புதிய ஆட்சி நிலைக்குமா? அடுத்த தேர்தல் எப்போது?

கடந்த 12வது பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து ஏப்ரல் 2ம் திகதி 13வது பொதுத் தேர்தலுக்கு நாள் குறித்த போதே அதனைப் புதியபூமி மிக வன்மையாகக் கண்டித்தது. ஜனாதிபதியின் நடவடிக்கை ஆளும் வர்க்க அதிகாரத்திற்கானதே அன்றி நாட்டின் பிரச்சினைகளுக்கோ மக்களின் நலன்களுக்கோ பயன்தரமாட்டாது எனச் சுட்டிக் காட்டினோம். அர்த்தமற்ற இத்தேர்தலில் பங்கு பற்றாது அதனை நிராகரிக்கும்படியும். புதியபூமி கேட்டுக் கொண்டது. அது மட்டுமன்றி தேர்தலுக்குப்பின் நிலையான ஆட்சிக்குரிய பெரும்பான்மை பலம் எந்தவொரு ஆளும் வர்க்கக் கட்சிக்கும் கிடைக்கமாட்டாது என்பதையும் எடுத்துக் காட்டியது.

நாம் கூறியது போன்று தேர்தல் அர்த்தமற்றதாகிக் கொண்டதுடன் அறுதிப் பெரும்பான்மையற்ற ஒரு அரசாங்கத்தையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்க வேண்டியதாயிற்று. அதன் பலவீனத்தை ஏப்ரல் 22ம் திகதியன்று13வது பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பித்தவேளை காணமுடிந்தது. முதலாளித்துவப் பாராளுமன்றத்தின் ஏமாற்றும் இயலாமையும் அதன் அசிங்கத்தன நடத்தைகளும் அங்கு நாற்றமெடுத்தன. இவர்கள் தான் நாட்டை நிர்வகித்து மக்களுக்கு விமோசனம் காட்டப் போகின்றார்களா என மக்கள் சிரித்துக் கொண்டனர்.

பாராளுமன்ற அரசியலில் தொடர்ச்சியாக சிங்களத், தமிழ், முஸ்லிம், மலையக நிலைப்பாடுகள் என்றவாறே விடயங்கள் கையாளப்பட்டு வந்தன. அவற்றுடன் இப்போது பௌத்த மத அடிப்படைவாதமும் பாராளுமன்ற அரசியலில் நேரடியாகப் புகுந்து விட்டது. பௌத்த துறவிகள் எனப்படும் காவி உடை தரித்த பிக்குமார் இருக்க வேண்டிய இடம் மடாலயங்களும், அரச மரங்களுடன் கூடிய விகாரைகளுமாகும். ஆனால் அவர்களில் ஒன்பது பேர் பௌத்த அடிப்படைவாதமும் பேரினவாத வெறியும் பேசிக்கொண்டு பாராளுமன்றம் வந்து விட்டார்கள். தர்ம இராட்சியம் பற்றிப் பேசிக் கொண்டே அவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்தை நிறுவனப் படுத்தி அதனை ஹெல உறுமய கட்சி மூலம் அரசியலில் ஆதிக்கம் பெற வைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

பாராளுமன்ற அரசியலை எடுத்துப் பார்த்தால் எல்லோரும் தத்தமது இனம், மொழி, மதம், பிரதேசம் பற்றி உரத்துக் கூறி அரசியல் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவற்றின் மறைவிலே வர்க்க சுரண்டலும் சுயநலச் சொத்துச் சேகரிப்புகளும் ஒடுக்குமுறைகளும் கெட்டியாகவே இருந்து வருகின்றன. இதன் வழியிலேயே இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளும் பேரினவாதத்தை வளர்த்து தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் மீது ஒடுக்குமுறைகளைப் புரிந்து வந்துள்ளார்கள். இதில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒருவரு க்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை. இவர்களுடன் புதிதாக ஜே.வி.பி.யும் இணைந்துள்ளது. இவர்களின் கடந்த கால அரசியல் வரலாற்றைப் பக்கசார்பின்றி நேர்மையான நிலையான அரசியல் நிலைப்பாட்டின் ஊடே பார்ப்பவர்கள் எவரும் இருபேரினவாதக் கட்சிகளின் பக்கமும் சாரமாட்டார்கள். இவர்கள் இருவரில் ஒருவர் சற்றுப் பறவாயில்லை என எவராவது கூறுவார்களேயானால் அது அவர்களின் சுயநலமும் வர்க்கத் தேவையும் மட்டுமே காரணமாக இருக்க முடியும். நிரந்தர மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சிந்தனையின் வலிமையும் ஏகாதிபத்திய சார்பும் நம்மை அறியாமலே பேரினவாத மக்கள் சார்பை வெளிப்படுத்தியும் கொள்கின்றன. அன்றும் இன்றும் இதுவே பாராளுமன்ற அரசியலில் தொடர்கின்றன.

இவை ஒருபுறமிருக்க கடந்த தேர்தலுக்குப் பின் அரசியல் உறுதிப்பாடு வந்துவிடும் என்றே சிலர் தவறான கணக்குப் போட்டனர். ஆனால் மீண்டும் சிறுபான்மைப் பலத்துடனான ஆட்சியே வந்துள்ளது. முன்னைய ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்திருந்த கட்சிகளும் அவர்களுடன் தமிழ் கூட்டமைப்பும் இணைந்து நின்று பாராளுமன்ற சபாநாயகர் தெரிவில் ஆட்சியமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் மோதிக் கொண்டதைக் காண முடிந்தது. இப் பலப்பரீட்சையில் மூன்றாவது தடவையில் எதிர் கட்சியின் சபாநாயகர் வேட்பாளரே ஒரு மேலதிக வாக்கினால் வெற்றிபெற்றார். கூச்சல் குழப்பங்கள் மத்தியில் இடம்பெற்ற இரு அணிக் கயிறு இழுவையில் தமிழர் கூட்டமைப்பு இது அவர்களின் பிரச்சினையல்ல என நடுநிலை எடுத்து வாக்களிப்பில் கலந்து கொள்ளமாட்டாது என எதிர்பார்த்திருந்த பலர் ஏமாற்றம் அடைந்தனர். வெளிப்படையாகவே வழிவழிவந்த ஐக்கியத் தேசியக் கட்சிச் சார்பை அவர்கள் எடுத்துவிட்டார்களே என பலர் ஆதங்கப்பட்டனர். பாராளுமன்ற அரசியல் போற்றும் முறைமைக்காட்பட்டு இன்னும் பலவிநோதங்களை காண வேண்டியே வரும்.

கடந்த அரசாங்கம் 110 ஆசனங்களுடன் இரண்டரை வருடங்கள் ஆட்சி நடாத்தி வந்தபோது அதனைக் கலைத்து தேர்தல் நடாத்திய ஜனாதிபதியால் தற்போது 109 ஆசனங்களக்கு மேல்போக முடியாது திண்டாடும் நிலை தோன்றியுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.க, ம.ம.முன்னணி என்பனவற்றை ஆசனத்தூண்டில்களில் படவைத்து ஐக்கிய தேசியக் கட்சி மறுபக்கம் பாய்வதைத் தடுத்து வைத்திருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆசனப் பலத்தைக் கூட்டும் இந்திய முயற்சியும் வெற்றி பெறவில்லை. அமெரிக்காவின் பின்புலச் செல்வாக்கு வேலை செய்தவண்ணமே உள்ளன.

தொடர்ச்சி 4ம் பக்கம்.

புரட்சிகர மேதினத்தில் அணிதிரள்வீர்
* யுத்த நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடரவேண்டும் * பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டும்
* இடைக்கால நிர்வாக கட்டமைப்பு முயற்சிகளிலிருந்து பேச்சுவார்த்தை தொடரவேண்டும்
* அரச, தனியார், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.
* அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய, இந்திய மேலாதிக்க தலையீடுகளை தடுக்கவேண்டும்.

புதிய ஜனநாயக கட்சி மே தினம்

ஊர்வலம் : காலை 10 மணிக்கு நடுக்கணக்கு பஜாரிலிருந்து இராகலை நோக்கி செல்லும்.

யாழ்ப்பாணம்
கூட்டுறவு சங்கமண்டபம்
காலை 10 மணிக்கு கூட்டம்
பொதுச்செயலாளர்
தோழர் சி.கா.செந்திவேல்
தலைமையில் நடைபெறும்

இராகலை
நகரத்தில் காலை
11 மணிக்கு கூட்டம்
தேசிய அமைப்பாளர்
தோழர் இ.தம்பையா
தலைமையில் நடைபெறும்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# வடபுலத்து கல்விச் சீரழிவுகளுக்கு துணை நிற்கும் ஆதிக்க சக்திகள்

பேரினவாத ஒடுக்கு முறையின் தொடர்ச்சியும் அதன் காரணமான யுத்தமும் வடபுலத்தின் கல்வியை சின்னா பின்னப்படுத்தி வந்துள்ளமை பகிரங்கமானதாகும். பல பாடசாலைகள் இன்று யுத்த இடிபாட்டுச் சின்னங்களாகவே காட்சி தருகின்றன. உயர் கல்வியும் வேண்டாம், இடைநிலைப் படிப்புக் கூடத் தேவையில்லை. உயிர் தப்பிப் பிழைத்தால் போதும் என வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் எண்ணிக்கை பல லட்சங்களாகும்.

இன்றும் கூட கையிழந்து போன கல்வித் தரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியாது வடபுலத்து கல்விச் சமூகம் திணறிக் கொண்டே இருக்கிறது. உண்மையான சமூக அக்கறையாளர்களான ஆசிரியர்கள் அதிபர்கள் பெற்றோர் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் ஒவ்வொரு பாடசாலையிலும் கடும் முயற்சிகள் செய்து வருகின்றனர். மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தவும் பாடசாலை வளங்களைப் பெருக்கிப் பாதுகாக்கவும் நேர்மையுடன் செயற்புரியும் ஆசிரியர்கள் அதிபர்களையும் காணமுடிகிறது. அதேவேளை அக்கறையற்று ஏனோ தானோ என்ற நிலையிலும் அல்லது ஏதாவது அடித்துக் கொள்வதை அடித்துக் கொள்ளும் சிலரையும் வடபுலத்து கல்விச் சமூகத்திலே காண முடிகின்றது.

இவை ஒரு புறமிருக்க மற்றொரு போக்கு வடபுலத்து கல்விச் சூழலிலே தொடர்ச்சியாக இருந்து வருவதை அவதானிக்கலாம். பெரும் பாடசாலைகள் நடுத்தரப் பாடசாலை நிர்வாகங்களில் பழமைவாத ஆதிக்க சக்திகள் தமது பிடிகளை இறுக்கி வைத்து கல்வி நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்தி தலையீடுகள் செய்து வருவதாகும். வடபுலத்தின் பெரும்பாலான இந்துப் பாடசாலைகளைத் தோற்றுவித்துக் கொண்டவர்கள் நிலவுடமை ஆதிக்கமும் சாதிய உயர் நிலையும் கொண்ட மேட்டுக் குடிக் கனவான்கள் எனப்பட்டவர்களாகும். அவர்களது கல்வித் தருமம் கூட அன்று நாவலர் வழிவந்த சாதிய ஆசாரத்திற்கு உட்பட்டே அமைந்திருந்தது. இருப்பினும் இன்றைய நிலையில் அச்சாதிய கட்டுப்பாடு உடைந்து மேற்படி பாடசாலைகளில் சாதாரண மக்களின் பிள்ளைகளும் கல்விகற்கும் நிலை மாற்றம் பெற்று விட்டது. சில பாடசாலைகளில் இன்றைய சூழல் காரணமாக சாதிப்படி நிலையில் கீழே வைக்கப்பட்ட மக்களின் பிள்ளைகள் கூடுதலாகக் கல்வி கற்கும் நிலை காணப்படுகின்றது. அவ்வாறே ஆசிரியர்களும் ஓரளவுக்கு வந்து விட்டார்கள். இது வடபுலத்து கல்விச் சூழலில் காணப்படும் ஒரு புதிய

## மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரின் திடீர் இடமாற்றம் ஒரு உதாரணம்

வளர்ச்சியாகவும் காணப்படுகின்றது. இதனை உள்வாங்க முடியாத பழமைவாத ஆகிக்கப் பரம்பரையில் வந்த சக்திகள் உள்ளார்ந்த குமுறல்களைக் கொண்டிருக்கின்றன.

இத்தகையோரும் ஏனைய சுயநல ஊழல் பேர்வழிகளும் சில பாடசாலை நிர்வாகங்களில் குறுக்கீடுகள் தலையீடுகள் செல்வாக்குச் செலுத்துதல் போன்றவற்றைச் செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது. தங்களின் பாட்டன் பூட்டன் கட்டிய பாடசாலைகள் என்று கூறிக் கொண்டே பொது நலத்திற்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் குறுக்கே நின்று வரும் பிரகிருதிகளை வடபுலக் கல்விச் சூழலில் காணமுடிகின்றது.

இத்தகையவர்கள் பாடசாலை நிர்வாகம், அதிபர்கள் நியமனம், மாற்றம், ஆசிரியர்கள் மாற்றம் போன்றவற்றில் தத்தம் செல்வாக்கை செலுத்திக் கொள்கின்றனர். இதற்காக இத்தகையவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் செல்வாக்கினால் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளின் மூலமான கைங்கரியங்களை நிறை வேற்றிக் கொள்கின்றனர். இச் சந்தர்ப் பங்களில் சாதிய, சமய, ஊர், பிரதேசம் போன்றவற்றின் ஊடான செல்வாக்குகளைப் பயன்படுத்தத் தவறுவதில்லை. இதனால் சில பாடசாலைகளின் வளர்ச்சி கவனிக்கப் படாது அதிபர்கள் ஆசிரியர்கள் என்போரது இருப்பும் நீடிப்புமே கவனிக்கப்படுகிறது. அதேவேளை தத்தமது சுயநலத்துக்கும் ஆதிக்க தலையீட்டுக்கும் தடையாக இருக்கும் அதிபர்கள் ஆசிரியர்களை மாற்றத்திற்கு உள்ளாக்கவும் இச் சக்திகள் தவறுவதில்லை. அதே வேளை தமது விருப்பத்திற்கும் பிற்போக் குத் தனங்களுக்கும் தலையாட்டும் தரம் குறைந்த அதிபர்களோ கல்வியில் அக்கறை கொள்ளாத ஆசிரியர்களோ இருப்பின் அவர்களைப் பாதுகாத்து வைத்திருப்பதிலும் முன்னிற்பார்கள்.

மேற் கூறியவற்றுக்கு ஒரு பதச் சோறு போன்ற உதாரணத்தை அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காணக் கூடியதாக இருந்தது. அக்கல்லூரியின் அதிபராகக் கடந்த ஏழு வருடங்களாகக் கடமை புரிந்து வந்த குமாரசுவாமி சண்முகநாதன் திடீரென மாற்றப் பட்டார். ஏன்? எதற்காக? இந்த இடமாற்றம் நடைபெற்றது. மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் மத்தியில் அதிபரின் இடமாற்றம் பலத்த அதிருப்தியையும் கவலைகளையும் ஏற்படுத்தியுள்ளது. ஒரு நல்ல அதிபரை ஏன் இடமாற்றம் செய்ய வேண்டும் என்பது பெரும் கேள்வியாகவே காணப்படுகிறது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தரத்தை சகல வழிகளிலும் உயர்த்து வதிலும் தேசியப் பாடசாலை என்ற நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கிலும் பணிபுரிந்து வந்த அதிபர் சண்முகநாதன் சில சுயநல சக்திகளின் பழி சுமத்தல்கள் மூலம் பழிவாங்கப்பட்டுள்ளாரா

தொடர்ச்சி 11ம் பக்கம்

# கண்ணிவெடி அகற்றுவதில் சுயநலம்

நிலக்கண்ணிகளை அகற்றுவது மக்களின் பாதுகாப்புக்கும் மீள் குடியேற்றத்திற்குமே அன்றி அமைச்சர்களின் அல்லது அதிகாரிகளின் பிரல்யத்துக்காக அல்ல. அல்லது பணம் சம்பாதிப்பதற்கல்ல. அத்துடன் கண்ணிவெடி அகற்றுவதிலும் இராணுவ நலன் பேணப்படுகிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

வவுனியா- ஓமந்தைப் பகுதியில் நிலக் கண்ணி அகற்றுவதற்குச் பொறுப்பாக இந்திய நிலக்கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் பிரிகேடியர் பரா தலைமையில் செயற்படுகின்றனர். இவர்களை அமெரிக்க விசுவாசி என புகழப்பட்ட முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட அழைத்தது வந்தார் என அறிய முடிகிறது. இந்த இந்திய இராணுவத்தினரால் கெப்டன் அமரசிங்க தலைமையிலான ளுவகு இனருக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது.

மிலிந்த மொரகொடவின் MIP (மொரகொட இன் டஸ்ரி க போர் பீப்பிள் என்பவர்மென்ற்) முற்று முழுதாக சிங்களவர்களுக்கே வேலை வாய்ப்பு அளிக்கிறது. இந்திய கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் சர்வத்திரா என அழைக்கப்படுகிறது. இங்கு குறைந்தளவு தமிழர்களே வேலை செய்கிறார்கள். இவர்களையும் சில காரணங்களைக் காட்டி வேலையில் இருந்து நீக்கி விடுகிறார்கள். இவற்றுக்குப் பொறுப்பாக இருப்பவர் தமிழரான கப்டன் ரட்ணம் என்பவர். இவர் அமைச் சரின் ஆசீர்வாதம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரே தமிழரின் ஆட்குறைப்பு சம்பளக் குறைப்புக்கு காரணமானவர் என்றும் கூறப்படுகிறது. தற்பொழுது கூட 12 தமிழர்களை எடுத்துள்ளனர். ஆனால் பயிற்சி இன்னமும் வழங்கவில்லை. சர்வத்திரா நிறுவனத்தில் உள்ளவர்களின் குழுப்போட்டி காரணமாகப் பல இடங்களில் கண்ணி வெடிகளை எடுக்காமல் விட்டு விட்டார்கள். அத்துடன் பாதுகாப்பற்ற பகுதிகளில் பொதுமக்களைப் பயன்படுத்தி காடுகளை அழிக்கின்றனர். U.N.H.C.R வாகனங்கள் வரும் போது மறைந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறார்கள்.

இவர்களைக் கண்காணிக்கும் அரச அதிபரின் விழிப்புக் குழுவானது உணவு தேனிரோடு காலத்தைக் கழிக்கிறார்கள்.

மேலும் ஓமந்தைப்பகுதியில் மீட்கப்பட்ட செயலிழந்த கண்ணிவெடிகளை சாளம்பைக் குளத்தில் உள்ள MIP காரியாலயத்தின் முன்பு வைத்து இந்திய கண்ணிவெடிஅகற்றும் பிரிவில் உள்ள ஜயசிங் தலைமையில் MIP ஊழியர்கள் வெடி அகற்றுவதாகப்படம் போட்டுள்ளார்கள்.

இவையாவும் கண்ணி வெடி அகற்றும் பணி என்பதன் ஊடே இடம் பெற்று வரும் சம்பவங்களாகும். ஆனால் இவ்விடயத்தில் விளம்பரமோ, மேலதிக வருமானமோ வேறு உள்நோக்க நலன்களோ முக்கியப்படுத்தப்படாது மக்களின் உயிர் வாழும் உரிமையை முக்கியப்படுத்தி கரிசனையோடு இதில் சம்பந்தப்பட்ட பகுதியினர் அனைவரும் செயல்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பாப்பாகும் . ஊருக்குப் பெயருக்கு கண்ணிவெடி அகற்றுவது மக்கள் பணியாகக் காட்டப்படுகிறது. ஆனால் அதில் புதைந்து கிடக்கும் ஊழல் சுயநலம் உள்நோக்கங்களை கண்டு பிடித்து அகற்றுவது யார்? என்றே மக்கள் கேட்கிறார்கள்.

வவுனியா - வி. துரை

# தேயிலையின் தரம் உறுதி செய்யப்பட வேண்டுமாம்

இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் உண்ணும் கோதுமை தரமானதா என்பது பற்றி இலங்கையர்களுக்கோ. அரசாங்கத்திற்கோ அக்கறை இல்லை. ஆனால் எமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் தரத்தை சுகாதார அமைச்சு உறதி செய்த பின்னரே ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று தேயிலையை வாங்கும் நாடுகள் நிபந்தனை விதித்துள்ளதாக அறிய முடிகிறது. அதன்படி தேயிலைக்கான புதிய தரக் கட்டுப்பாட்டை விதிக்கப் போவதாக இலங்கையின் சுகாதார அமைச்சு வாக்குறுதி அளித்துள்ளது. நமக்கொரு நீதி அவர்களுக்கு வேறொன்று.

தேயிலை தரமான்தாகவே இருக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமிருக்க முடியாது. ஆனால் எமது நாட்டு தேயிலை வர்த்தகர்களும், ஏற்றுமதியாளர்களும் கலப்படத்தில் ஈடுபட்டுள்ளதற்கான சாட்சியங்கள் நிறையவே இருக்கின்றன. இது முறையற்ற வர்த்தக நடவடிக்கை ஆகும். இது பணம் பண்ணுவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ள திறந்த. தாராள வர்த்தக நடவடிக்கைகளின் விளைவாகும்.

# நாலும் நடக்கும் நற்குணன் உலகிலே

## பரிசு கெட்டவர்கள்

இப்போது வெங்கட் சாமிநாதன் என்கிற மாக்ஸிய விரோத உளறுவாயருக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. வழங்கியது கனடா ற்றொறான்ற்றோ பல்கலைக்கழகத்தின் தென்னாசியப் பண்பாட்டுப் பிரிவு எனப்படுகிறது. இப்படி ஒரு பரிசு சுந்தரராமசாமி என்கிற இன்னொரு மாக்ஸிய விரோத எழுத்தாளருக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டது.

கனடாவின் பல்கலைக்கழகக் கவுரவம் என்றால் பெரிய விடயம் என்று எல்லாரும் நினைத்துக் கொள்ள இடமுண்டு. உண்மை என்ன வென்றால் இது அங்கே தொழில் பார்க்கிற ஒரு ஈழத்து முன்னாள் இலக்கியவாதியின் கைவண்ணம். அங்கே 'தேடல்' என்ற பேரில் இடதுசாரி எதிர்ப்பாளர்கட்குத் தேடிச் சிறப்புமலர் வெளியிடுகிற ஒரு சிறு வட்டத்தின் ஆதிக்கமும் உண்டு. இது தான் பரிசின் லட்சணம். தனக்கு வேண்டாத எவருக்கும் தமிழகத்தில் பரிசு கிடைத்தால் அதைப் பற்றி கண்டனமாகப் பேசிவந்துள்ள சுந்தர ராமசாமியும் அவரது குடும்பத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சஞ்சிகையான காலச்சுவடும் இந்தப் பரிசை மெச்சுகிறார்கள்.

வெங்கட் சாமிநாதன் எத்தகைய வெற்று வேட்டுப் பேர்வழி என்று நம் பேராசிரியர் நுஃமானுக்குத் தெரியும். காலச் சுவட்டின் இலக்கிய ஊழல் மிக்க போக்கும் அவருக்குத் தெரியும். தெரிந்தும் அவர் தன்னை அந்த ஏட்டின் இலங்கை ஆலோசகராக அறிவிக்க இடமளித்துள்ளார். இது ஏன்?

## நேற்று அவர்களுக்கு இன்று நமக்குள்

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட போது மனச்சாட்சியுள்ள எந்தத் தமிழரும் தலைகுனிந்து மனம் வருந்தாமல் இருந்திருக்க முடியாது. எனினும் நமது அறிஞர் பெருமக்கள் பலர் அதையிட்டுக் கண்டனம் தெரிவிக்காதது மட்டுமல்லாமல் நியாயப்படுத்தவும் முயன்றார்கள். காலஞ் சென்ற பேராசிரியர் துரைராஜா அதையிட்டுத் தன் அதிருப்தியை நோர்வேயில் தெரிவித்து விட்டு நாடு திரும்பு முன்பே அதனை அவருக்கு எதிராகப் பாவிக்கும் நோக்கில் அவரது அதிருப்தியைப் பற்றிப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிடச் செய்த பிரமுகர்களும் உள்ளனர். இன்று மட்டக்களப்பிலிருந்து தமிழரைத் தமிழர் வெறுங் கையுடன் வெளியேற்றுகிற நிலை வந்து கொண்டது. இது பற்றி நாம் என்ன நினைக்கிறோம்.

முன்னாள் யாழ்ப்பாணப் பேராசிரியர் ஒருவர் இந்நாள் மட்டக்களப்புப் பேராசிரியரிடம் யாழ்ப்பாண மாணவர்கள் மட்டக்களப்பு வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதைப் பற்றிக் கவலைப்பட்டு நீங்கள் எல்லாம் இதைத் தடுக்க ஏதாவது செய்திருக்கலாகாதா என்று கேட்டதற்கு மற்றவர் கருணா அம்மான் சொல்கிறதையும் கேட்கத் தானே வேண்டும் என்று பதில் கொடுத்தாராம். இது பற்றி முன்னாள் பேராசியருக்கு மிகுந்த மனவருத்தம். ஆனால் இந்நாள் பேராசிரியர் வீட்டில் வைத்து யாழ்ப்பாண விரோத சுவரொட்டிகள் பத்தாண்டுகட்கு முன்பு எழுதப்பட்டன. அதற்கு அவர் பொறுப்பில்லை எனப்பட்டது. அப்போது யாரோ ஒருவர் கண்வைத்த பதவியை யாழ்ப்பாணத்தவர் யாரோ பெற்றுவிட்டது தான் யாழ்ப்பாண விரோதத்தின் நியாயம். இப்போது? அம்மானின் அருளா?

## அந்த நாள் ஞாபகம்?

ஞானம் என்ற மாசிகையில் பேராசிரியர் சிவத்தம்பியின் நேர்காணலில் இடதுசாரிகட்கு எதிராக வசை பாடிப் புகழ் பூத்தவரான கோள் மூட்டியார் சிவத்தம்பி போன்றவர்கட்கு இன்றைய மாக்ஸியப் போக்குக்கள் பற்றி ஒன்றுமே தெரியாது என்று பேசி வந்ததாகக் குறிப்பிடப்பட்டது. பேராசிரியரின் நேர்காணலில் பல்வேறு கவனப் பிசகுகளும் திரிப்புக்களும் இருந்ததைப் பயன்படுத்தி இந்தக் குற்றச் சாட்டை மறுக்க முயன்றிருக்கிறார் கோவன்னா மூவன்னா. கோவன்னா மூவன்னா அந்த நாளில் தன்னை "நவ மாக்ஸியவாதி" என்று நக்கலடித்துத் திரிந்ததும் தமிழகத்தின் நவ மார்க்ஸியவாதிகளாகத் தம்மைக் காண்பிக்க முற்பட்டுப் பின்பு இந்து பாஸிஸவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தவர்களுடனும் குலாவித் திரிந்த நாட்கள் இப்போது நினைவிலில்லாமலிருக்கலாம். நமக்கு நினைவிலிருக்கிறதே!

## விலை மகளிரும் அரசியல் வியாபாரிகளும்

தேர்தல் என்பது வியாபாரம் என்று நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். அது பச்சையான விபசாரம் என்பது தான் உண்மை. யூஎன்.பியுடன் பகைத்துக் கொள்ளாமல் தனக்குக் கிடைத்த ஆசன ஒதுக்கீடு போதாது என்பதற்காக நுவரெலியாவில் மட்டும் தனித்துப் போட்டியிட்ட சந்திரசேகரன் தனக்கு ஒரு ஆசனம் கிடைக்கும் என்பதை அறிந்த கணமே பேரம் பேசுவதற்காகக் கொழும்புக்கு ஓடோடி வந்துவிட்டார். விடுவாரா ஆறுமுகனார்? கைநிறையப் பாராளுமன்றச் சீட்டுக்களை வைத்துள்ள அவர் யூஎன்.பியோடு கூட்டாகக் கேட்டாலும், பதவி என்று வரும் போது ஒற்றைச் சீட்டுக்காரருக்காக ஒதுங்கி நிற்க அவர் என்ன இளிச்சவாயரா? அவர் பங்காளியாவதற்கு யார் தடைசொல்ல முடியும்? பதவிகட்காக எதையுமே விலைபேச ஆயத்தமான இந்தத் தலைவர்கள் விலைமகளிர் போன்றவர்கள்ல்லவா?

## வேட்டும் வோட்டும்

வடக்கில் போட்டியிடப் பயந்து கொழும்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனைச் சுட்டுக் கொல்ல முயன்றவர் யாரோ தெரியாது. அவர் யாராக இருந்தாலும் அவரால் முன்னாள் அமைச்சருக்குச் சாதகமான ஒரு சிறு அனுதாப அலை எழுந்து அவருக்குப் பாராளுமன்றப் பாக்கியம் மீண்டும் கிட்டியுள்ளது. இரண்டே ஆண்டுகளில் கொழும்பில் இப்படி ஒரு அரசியல் வளர்ச்சியா என்று யாரும் வியக்கலாம். அனுதாபத்துக்கும் மேலாக அமைச்சருக்கு இந்துத்துவப் பெரு வணிகர்களின் ஆதரவுமல்லவா உள்ளது.

## மூன்று யாத்திரிகர்கள்

தேர்தல் முடிந்த பின்பு ஆறுமுகன் தொண்டமான் ரணிலுடன் பேசினார். அது மரியாதைக்கு. சந்திரிகாவுடன் பேசினார். அது வியாபாரத்துக்கு. எத்தனை மந்திரிமார் என்ற பேரம் சரியாக அமையவில்லை. விட்டுப்பிடிப்போம் என்று இருந்த ஆறுமுகனை அவசர அவசரமாக இந்தியாவுக்கு அழைத்தது யார்? ஹக்கீமின் தனிப்பட்ட அயற் பயணத்துக்கு இது ஏன் தருணமாகிறது? அவரது எசமானர்கள் எங்கிருக்கிறார்கள்?

இந்தியத் தூதர் நிருபம் சென் ஏன் அவசரமாக இங்கிருந்து புறப்பட்டுச்செல்ல வேண்டும்? இவற்றுக்கிடையில் ஏதாவது தொடர்புண்டா?

அரசியலில், தற்செயலாக நிகழ்வன மிக அரிதானவை.

இது அவ்வளவு அரிதான ஒரு உடன் நிகழ்வல்ல.

## இந்தப்பூனையும் பால் குடிக்குமா?

விடுதலைப் புலிகளின் பிளவின் பின்னால் அமெரிக்காவின் கை இருப்பதாக இப்போது எல்லாருமே ஐயப்படுகிறார்கள். அதுபற்றிக் கேட்கப்பட்டபோது அமெரிக்கத் தூதரகம் "கருணாவா? அது யார்? கேள்விப்படவே இல்லையே" என்று சொன்ன பதில் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவும் சி.ஐ.ஏ.யும் எதையும் செய்யும். அது தெரிந்த விடயம். அமெரிக்காவின் முகவர் மிலிந்த மொறகொடவின் பங்கு என்ன? ரணிலுக்குத் தெரியாமலா இதெல்லாம் நடந்தது? தென்னிலங்கைத் தமிழ் மக்கள் விழித்தெழுவது எப்போது?

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மரங்களையும் சூறையாடும் தோட்டக் கம்பெனிகள்

பெருந்தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ள கம்பெனிகளும், முகாமை செய்ய பொறுப்பேற்றுள்ள கம்பெனிகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கேட்கும் போதெல்லாம் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக கணக்கு காட்டுகின்றன. அவர்களின் நட்டக்கணக்கு சரியானதா என்று பரிசோதனை செய்து உண்மை நிலையை அறிவதற்கு இலங்கை அரசாங்கமோ அல்லது பொது நிறுவனங்களோ அதிகாரம் கொண்டவையாக இல்லை. அதனால் கம்பெனிகள் காட்டும் நட்டக்கணக்கின் அடிப்படையில் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கை தொடர்ந்து நிராகரிக்கப்பட்டே வருகின்றன.

பெருந்தோட்டக் கம்பெனிகள் நேரடியாக தேயிலை, றப்பர் உற்பத்தியில் மட்டுமன்றி தோட்டங்களில் நீண்ட நாட்களாக இருந்து வரும் வேறு வளங்களையும் சூறையாடி வருகின்றன. தோட்டங்களில் இருக்கும் மண், கற்கள், மாணிக்க கற்கள், என்பவற்றை விற்று வருகின்றன. தொழிற்சாலைகள், களஞ்சிய அறைகள் என்பனவற்றை உடைத்து அகற்றி அவற்றின் இயந்திரங்கள், இரும்பு, பலகை, கற்கள் போன்ற கட்டிடப் பொருட்களையும் ஏலத்தில் விற்று வருகின்றன.

அத்துடன் மண் பாதுகாப்பிற்காகவும், பெருந்தோட்ட பயிர் பாதுகாப்பிற்காகவும் நீண்ட நாட்களாக வளர்க்கப்பட்டு வருகின்ற மரங்களை வெட்டி விற்று வருகின்றன. தோட்டங்களை அண்மித்துள்ள காடுகளிலிருக்கும் மரங்களையும் வெட்டி விற்று வருகின்றன. தலவாக்கொல்லை பெருந்தோட்டக் கம்பெனி தோட்ட மரங்களை விற்று வருகின்றது. கடந்த வருடம் மரங்களை ஏற்றுமதி செய்து 1.3 பில்லியன் ரூபாய் பணத்தை அக்கம்பெனி சம்பாதித்துள்ளது.

மரங்களை வெட்டி விற்கும் கம்பெனிகள் மரங்களை மீளநடுவதில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் மண்சரிவு மண்ணரிப்பு போன்ற அபாயங்கள் ஏற்பட்டு பெருந்தோட்ட நிலத்திற்கு மட்டுமன்றி பெருந்தோட்டப் பயிர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு பெருந்தோட்ட வளங்களை சூறையாடிக் கொண்டிருக்கும் பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் குறுகிய காலத்தில் பெருந்தோட்ட நிலப்பரப்பில் மிஞ்சப் போவது ஏதுமில்லை. இது பற்றித் தொழிலாளர்களும் மலையக அமைப்புக்களும் தமது கவனத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

# அரிசி இப்போது ஒறிசா சின்ஜென்டா கைகளில்!

## அன்று ORYZA SATIVA இன்று

உலகம் முழுவதும்2004ம் ஆண்டை அனைத்துலக அரிசி ஆண்டாக கொண்டாடப்படவிருக்கும் வேளை சுவிற்சிலாந்தின் பல்தேசிய கம்பனியான சின்ஜென்டா (syngenta) அரிசிக்கான உரிமையை கோரியுள்ளது.

சுமார் 15000 வருடங்களுக்கு முன்பே இமயத்தின் வடதென் அடிவாரத்தில் காட்டுப் பயிராக இருந்த ஒறிசா சற்றிவா (Oryza Sativa) எனப்படும் அரிசி சீனா, இந்தியா, இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 250 கோடி மக்களின் முக்கிய உணவாகியுள்ளது. அரிசிக்கு தாவரவியல் விஞ்ஞானிகள் இட்ட பெயர் தான் ஒறிசா சற்றிவா.

உலகின் அரைவாசிக்கு மேற்பட்ட மக்களின் முக்கிய உணவு அரிசி ஆகும். உலக அரிசி உற்பத்தியில் 97வீதம் ஆசியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. 92 வீத அரிசி ஆசியாவிலேயே உண்ணப்படுகிறது.

ஆசியாவின் பண்பாட்டில் அரிசியும் ஒரு பகுதி ஆகும். ஆசியாவின் பெயர் குறிப்பிடப்படாத மதமாக அரிசி விளங்குகிறது. ஆசியாவின் வாழ்க்கையே அரிசி தான். சுமார் 200 வருடங்களாக பல்வேறு இன அரிசி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இக்காலப் பகுதியில் அரிசி விவசாயிக்கும், நுகர் வோருக்கும் விஞ்ஞானிகளுக்கும் என அனைவருக்கும் பொதுவாக கிடைத்து வந்தது.

2004ம் ஆண்டான இந்த ஆண்டு உலக அரிசி ஆண்டாக கொண்டாடும் வேளை விவசாய வர்த்தகத்தின் விருட்சம் எனப்படும் பல்தேசியக் கம்பனியான சின்ஜென்டா அரிசிக்கான ஆக்க உரிமையைக் கோருகிறது.

இயற்கையின் சொத்தான அரிசி பல்லாயிரம் வருடங்களுக்கு முன் இமயமலையிலிருந்து தென் சீனா ஊடாக யப்பான் சென்று ஆபிரிக்கா மூலமாக மத்திய கிழக்கிற்கும் மத்திய தரைக்கும் வியாபாரப் பொருளாகி மெச்சிக்கோ, அமெரிக்காவுக்கு கப்பல் மூலம் சென்றது. அது இன்று றைன் நதிக்கரையிலே சுவிற்சர்லாந்தின் நகரான பாசெல்லில் சின்ஜென்டா என்ற கம்பனியின் ஏகபோக விற்பனைப் பொருளாக மாறி விட்டதுதான் கவனத்திற்கும் கவலைக்குரியதுமாகும்.

இந்த விவசாய வியாபார கம்பனிகள் அரிசி, கோதுமை மற்றும் தானியங்கள் தங்களுக்கு வர்த்தக அக்கறை அற்ற பொருள்கள் எனக் கூறி வருகின்றன. ஆனால் சுமார் 900 வகைப்பட்ட அரிசி வகைகள் ஏற்கனவே ஆக்கவுரிமைக்கான பதிவைப் பெற்றுவிட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். 'தானியம்' என்ற பெயரில் இயங்கும் ஒரு அரசசார்பற்ற நிறுவனம் 609 ஆக்கவுரிமைப் பதிவுகளை பட்டியலிட்டுள்ளது. இது 2000ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடியும் வரை எடுக்கப்பட்ட தகவல் ஆகும். இதில் 56 வீதமானவை மேற்கு நாடுகளின் ஆய்வு நிறுவனங்களினாலும், தனியார் கம்பனிகளாலும் உரிமை கொண்டாடப்படுகிறது.

அமெரிக்க இராட்சத கம்பனியான டியூபொன்ட் 95 வகைப்பட்ட அரிசி இனங்களுக்கு உரிமை கொண்டாடுகிறது. யப்பானின் மிற்சுபி கம்பனி 45 வகைகளை உரிமை கொண்டாடுகிறது. அடுத்த மூன்று வருடங்களில் ஏகப் பெரும்பான்மையான ஆக்க உரிமை விவசாய வியாபார பல்தேசியக் கம்பனிகளின் கைகளில் இருக்கும். இதன் மூலம் உலகின் அரைவாசிக்கும் மேலான மக்களின் உணவாக இருந்து வரும் அரிசியின் உற்பத்தி, நுகர்வு என்பனவற்றைத் தீர்மானிக்கும் இரும்புப் பிடி, ஆக்கவுரிமை என்ற பெயரில் மேற்குலக ராட்சத பல்தேசிய நிறுவனங்களின் கைகளிலேயே இருக்கப் போகின்றது.

– சிறி –

# கோதுமை பாவனையாளர்களின் கவனத்திற்கு?

அவுஸ்ரேலியாவிலிருந்து மத்திய கிழக்கு நாடொன்றுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பெருந்தொகையான கோதுமை தரம் குறைவானது என்ற காரணத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அதாவது அந்த கோதுமை பல ஆண்டுகளாக களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருந்ததால் உண்பதற்கு தகுந்ததல்ல என்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

அக்கோதுமையை ஏற்றிக் கொண்டு அவுஸ்திரேலியா நோக்கி சென்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றபோது அக்கோதுமை இலங்கை அரசாங்கத்திற்கு கடந்த மாதம் விற்கப்பட்டுள்ளது. வழமையை விட குறைந்த விலைக்கு வாங்கப்பட்ட அக்கோதுமை உண்பதற்கு தகுந்தது என்று அரசாங்க தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் சான்றிதழ் வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது.

மத்திய கிழக்கு நாட்டு மக்கள் உண்பதற்கு தகுதியற்றதாக இருந்த கோதுமை எவ்வாறு இலங்கை மக்கள் உண்பதற்கு உகந்ததானது என்பது தான் விளங்கவில்லை.

உலகமயமான, தாராளமயமான வர்த்தகத்தில் பொருட்கள் தரமாக இருக்க வேண்டியதில்லை. தரம் குறைவானதெனினும் பணம் பண்ணப்பட்டால் எல்லாம் சரியாகி விடுகிறது. எப்படியாவது வறிய நாட்டுமக்களின் தலையில் கட்டிவிட்டு செல்வந்த நாடுகளுக்கு பணம் போய் சேர்ந்தால் போதும் என்பது உலகமயமாதலின் வர்த்தக நியதியாகி விட்டது.

எனவே உண்பதற்கு உகந்ததல்லாத கோதுமையை இலங்கை மக்களுக்கு விற்கப்படாது தடுக்க எதிர்ப்பு அவசியமாகிறது. இல்லாவிட்டால் உண்பதற்கு தகுதியற்ற கோதுமையை உண்டு விட்டு பலவிதமான நோய்களுக்கு உட்பட வேண்டி வரும். அது மட்டுமன்றி இலங்கை மக்களின் தலைகளில் எல்லாவற்றையும் இலகுவாக கட்டிவிட்டு பணம் சம்பாதிக்கலாம் என்ற வெளிநாட்டுக்காரர்களின் எண்ணத்தை தவிடுபொடியாக்க வேண்டும்.

நகரப்புற மக்களும், தோட்டப்புற மக்களும் அதிகமாக கோதுமை மாவினால் செய்யப்படும் ரொட்டி, பாண் போன்ற உணவுப் பொருட்களை அதிகமாக உண்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசியவாதத்தின் தோல்வி

கியூபெக் மாகாணம் கனடாவின் ஒரு பகுதியாக தற்போதுள்ளது. அங்கு பிரன்சு மொழியே பிரதான மொழியாக விளங்குகிறது. ஆங்கிலம் பேசும் கனேடியர்கள் தங்களைப் புறக்கணித்து வருவதாக கியூபெக் மக்கள் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

இப்போது கியூபெக்கின் நிர்வாகம் தேசியவாதிகளின் கைகளிலேயே இருக்கிறது. கியூபெக்கின் தேசியவாத அரசியல் சூழலைப் பயன்படுத்தும் அமெரிக்கா சிறிது சிறிதாக தனது ஆதிக்கத்தை அங்கு நிலை நாட்டுகிறது.

ஆங்கிலக் கனேடியரின் ஆதிக்கத்தை வெறுத்த கியூபெக் மக்கள் இன்று ஆங்கில அமெரிக்கரின் ஆதிக்கத்தின் கீழ் வந்து கொண்டிருப்பதானது சிறு முதலாளித்துவ தேசிய வாதத்தின் தவிர்க்க முடியாத அவலத்தையே எடுத்துக் காட்டுகிறது. கியூபெக் மக்கள் அடுப்பிலிருந்து நெருப்புக்குள் விழுந்துள்ளார்களா?

புதிய பூமி

வட புலத்தில்
ஏக விநியோகம் விற்பனை
வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பூமியின் வளர்ச்சிக்கு
- நிதி உதவுங்கள்
- சந்தா அனுப்புங்கள்
- விற்பனைப் பணத்தை அனுப்பிவையுங்கள்
- கட்டுரைகள் - செய்திகள் - கருத்துக்கள் அனுப்புங்கள்

ஆசிரிய பீடம் / நிர்வாக பீடம் :
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை.
Tel: 2435117, 2335844 Fax : 01-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.

# தமிழர் கூட்டமைப்பு தனித்துவத்தை இழந்து கொண்டது

## பழைய பல்லவியில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள்

பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவான போது தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான லொக்கு பண்டாராவிற்கு வாக்களித்தனர். தமிழ்க் கூட்டமைப்பினர் இவ்வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பர் என்று எதிர் பார்க்கப்பட்டது. பலர் அவற்றை நம்பி இருந்தனர். ஆனால் இறுதி நேர முடிவின்படி ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து தமது முன்னோர்களின் யூ.என்.பி விசுவாசத்தை வெளிப்படுத்தி விட்டனர் என்றே மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. தமது வாக்களிப்பிற்கு ஒவ்வொரு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் ஒவ்வொரு நியாயம் கற்பித்து கருத்து வெளியிட்டனர். சந்திரிகா அம்மையார் சமாதான முயற்சிக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் ஒரு எச்சரிக்கையாக எதிர்க்கட்சிக்கு வாக்களித்தோம் என்றும், ஜே.வி.பி இணைந்துள்ள அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்தோம் என்றும் கூறியிருந்தனர். இவையெல்லாம் ஏற்றுக் கொள்ளகூடிய காரணங்கள் அல்ல என்றே கூறப்படுகிறது. யூ.என்.பி எந்தவிதத்திலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கோ, ஜே.வி.பிக்கோ குறைந்த பேரினவாத கட்சியல்ல. அத்துடன் சபாநாயகர் வேட்பாளர்களை பொறுத்த வரை அரசாங்க முன் நிறுத்திய டி.யூ குணசேகரவை ஒரு இனவாதியாக காணமுடியாது. அவர் பாராளுமன்ற இடதுசாரி. பொதுவுடமை கொள்கைகளிலிருந்து சீரழிந்தவராக இருப்பினும் தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை என்றுமே கொள்ளாதவர். அதேவேளை லொக்கு பண்டாரா தனது 25 வருட பாராளுமன்ற வாழ்வில் தீவிர பேரினவாதியாக இருந்து வருபவர். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவர் ஆற்றிய பேரினவாதப் பேச்சுக்கள் தகுந்த உதாரணங்கள் ஆகும். இதனை கூட்டமைப்பின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அப்படி இருந்தும் ஏன் இவ்வாறு முடிவு செய்தார்கள் என்பதில் தான் வர்க்க பெரும்பான்மையின் உள்ளார்ந்த தன்மை வெளிப்படுகிறது. எவ்வாறாயினும் பாராளுமன்ற முதல் அமர்விலேயே தமிழ் கூட்டமைப்பினர் யூஎன்.பி சார்பாக எடுத்த நிலைப்பாடு பல்வேறுவித பாதிப்புக்களை ஏற்படுத்தவே செய்யும். பழைய பாராளுமன்ற கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு ஒரு தனித்துவ நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு முளையிலேயே பழுதடைந்து விட்டது. முதல் கோணல் முற்றும் கோணல் ஆகுமா? அடுத்த நகர்வுகளிலாவது பொறுத்திருந்து பார்ப்போம். எல்லாவற்றுக்கும் தமிழ் மக்கள் வெறும் தலையாட்டும் பொம்மைகளாக இருக்க முடியாது தானே.

# கொள்கை பேசும் மனிதர்கள்

கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்கள், மலையக மக்கள் முன்னணியினர், இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்தோர் இன்று கொள்கைக்காகவும் தாம் சார்ந்த மக்களுக்காகவும் பேசுவதாகப் பாசாங்கு காட்டி வருகின்றனர். இந்தப் புனிதர்களான ரவூப் ஹக்கீம், பெ.சந்திரசேகரன், ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் ஏழுவருட சந்திரிகா அம்மையாரின் பொதுசன முன்னணியில் இருந்த இனப் பாதுகாப்பு வீரர்களாவர் என்பதைப் பலர் மறந்து விடுகின்றனர். தாம் சார்ந்த மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்காது தங்களையும் தம்மைச் சார்ந்தவர்களையும் வளப்படுத்திக் கொண்ட கதைகளை நாடே அறியும். இவர்களே அவசரகாலச் சட்டத்திற்கு தவறாது வாக்களித்த வரலாறுப் பழிக்குரியவர்கள். சந்திரிகா அம்மையாரின் சமாதான யுத்தத்திற்கு சாமரை வீசித்தமது பதவிக் கதிரைகளைப் பாதுகாத்து வந்தவர்கள்.

ஆனால் இன்று புனிதர்களாக நின்று கொள்கை பேசுகிறார்கள். அதற்கு இரண்டு காரணம். ஒன்று யூஎன்.பி இவர்களுக்கு தேசியப்பட்டியலில் இடம் கொடுத்து கொழுக்கி போட்டுள்ளது. இரண்டாவது, விரைவில் அரசாங்கம் கவிழ்ந்து தாங்கள் வந்தால் கொழுத்த அமைச்சர் பதவிக்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் ஆறுமுகமும் சந்திரசேகரனும் கொழும்பில் சந்திரிகா அம்மையார் பக்கத்தை எட்டிப்பார்க்காது இருக்க முடியவில்லை. அதனால் இந்த கொள்கை பேசும் மனிதர்கள் இடம் மாறமாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஜப்பானிலும் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிர்ப்பு

மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிராக பலவிதமான எதிர்ப்புப் போராட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அப்போராட்டங்கள் ஜப்பான் நாட்டிலும் எதிரொலித்துள்ளன. அத்திட்டத்திற்கு ஜப்பான் இலங்கைக்கு கொடுக்கவிருக்கும் நிதியுதவியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை ஜப்பானியர்களாலேயே விடுக்கப்பட்டுள்ளது. மேல் கொத்மலை நீர்தேக்கத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் அடுத்தே மேற்கண்டவாறு ஜப்பானிய புத்திஜீவிகள் ஜப்பானிய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

தென்னாசிய விவகாரங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் பேராசிரியர் கொஜி ஜப்பானிய பத்திரிகையொன்றுக்கு மேல்கொத்மலைத் திட்டம் பற்றி கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அதில் இலங்கையில் அத்திட்டத்திற்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் ஜப்பான் அத்திட்டத்திற்கு நிதியுதவி செய்யக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் தன்னிடம் கேட்டுக் கொண்டதாக எழுதியுள்ளார். அவர் இலங்கைக்கு வந்திருந்தபோது மேல்கொத்மலை திட்டத்திற்கு தெரிவிக்கப்படும் எதிர்ப்புகள் பற்றி நேரடியாக அறிந்து கொண்டதாகவும் அவர் எழுதியுள்ளார்.

மேல்கொத்மலைத் திட்டத்தினால் பெரும் நிலப்பரப்பு நீரில் மூழ்கடிக்கப் படவிருப்பதாகவும், பல நீர் வீழ்ச்சிகள் இல்லாமலாக்கப்பட இருப்பதாகவும், அதனால் சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட இருப்பதாகவும் எழுதியுள்ளார்.

'ஜப்பானியர்கள், சூழலை நேசிப்பதுடன் பாதுகாக்கிறார்கள். ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் போன்றவற்றை கடவுளுக்கு இணையாக மதிக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இலங்கையில் ஆறுகளையும், நீர்வீழ்ச்சிகளையும் இல்லாமலாக்கி சூழலை பாதிக்கும் மேல் கொத்மலைத் திட்டத்தை முன்னெடுக்க இலங்கை அரசாங்கத்திற்கு நிதியுதவி வழங்குவதேன்? என்று இலங்கையர்கள் கேள்வி எழுப்பியதாகவும் பேராசிரியர் கொஜி அவரது கட்டுரையில் எழுதியுள்ளார்.

மலையகத்தில் அதிகமான தொழிற் சங்கங்கள் எதிர்த்து வருகின்றன. மலையக மக்கள் முன்னணி தலைமை பல்வேறுபட்ட உண்மையற்ற சாட்டுக்களை சொல்லிக் கொண்டு அழிவு நிறைந்த இத்திட்டத்தை ஆதரிக்கிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்பதாக பாசாங்கு செய்து வருகிறது. இனப்பிரச்சினை தீர்வு பற்றி பேச்சுவார்த்தை நடத்திவந்த ஜப்பானிய அரச தூதுவர் அகாசியை சந்தித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் தாங்கள் அத்திட்டத்தை எதிர்ப்பதாக ஜப்பானிய அரசாங்கத்திற்கு தெரிவிக்கும்படி கூறினர். அதற்கு பதிலளித்த அகாசி தான் சமாதான நடவடிக்கைகளுக்கே பொறுப்பாக இருப்பதாகவும், நீர்த்தேக்கத்திட்டம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் அதில் தான் தலையிட முடியாது என்றும் தெரிவித்து விட்டார்.

பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான தமது நிலைப்பாட்டை அகாசியூடாக ஜப்பானிய அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாக தெரிவித்திருந்தனர். ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை என்பதே உண்மை.

மேல் கொத்மலைத் திட்டத்தை முற்றாக கைவிட வேண்டும் என்பதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்சின் நிலைப்பாடு என்று கூறவந்த போதும் அண்மைக் காலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான யோகராஜன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அத்திட்டத்திற்கு மாற்றுத் திட்டமொன்றை முன்வைத்துள்ளதாகவும் அதனை அரசாங்கம் பரிசீலித்தால் தமது முடிவை மாற்றிக் கொள்ளலாம் என்று கூறிவந்தார்.

அத்திட்டத்தை புதிய அரசாங்கம் கைவிடப் போவதில்லை. அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு என்பதை அவர் ஏற்கனவே கூறியிருந்தார்.

அண்மையில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் போஸ்டர் இயக்கத்தை நடத்தியது. தலவாக்கொல்லையில் போஸ்டர்கள் ஒட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஆதரவு தெரிவித்தனர். மலையக மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் என்று நம்பப்படும் சிலர் போஸ்டர் இயக்கத்தில் ஈடுபட்ட சில செயற்பாட்டாளர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டபோதும் மக்களின் ஆதரவுடன் தலவாக் கொல்லை தோட்டத்தில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

மேற்படி இயக்கம் பலவிதமான ஐக்கியப்பட்ட போராட்டங்களை முன்னெடுப்பதுடன், சர்வதேச ரீதியாக ஆதரவையும் திரட்டி வருகிறது. ஜப்பானிய புத்திஜீவிகளினதும், சர்வதேச சூழலியலாளர்களினதும், இந்தியாவில் இயங்கும் நர்மதா நீர்த்தேக்கத்திற்கு எதிரான இயக்கம் தென்னாசிய நாடுகளில் இயங்கும் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் அரசியல் கட்சிகள் என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

# சாராயக் கடைகளை மூடு!

# மக்கள் போராட்டம்!

மலையகத்திலுள்ள சிறிய சிறிய கடைவீதிகளிளெல்லாம் கூட மது விற்பனை கடைகளும் (Wine shops) மது அருந்தும் கடைகள் (Bar) இருக்கின்றன அதைவிட தோட்டங்கள் தோறும் சட்டவிரோதமாக சாராயக்கடைகள் நடத்தப்படுகின்றன. கசிப்பு விற்பனையும் தாராளமாக நடத்தப்படுகிறது.

சில தோட்டங்களில் (சட்டவிரோதமாக) மது அருந்தும் கடைகள் நடத்தப்படுகின்றன. மாலை நேரங்களில் அவ்விடங்களில் தொழிலாளர்களும், இளைஞர்களும் நிரம்பி வழிகின்றனர். மக்கள் குடியிருக்கும் லயக்காம்பிராக்களிலும் அதற்கு அருகாமையிலும் மதுஅருந்தும் கடைகள் நடத்தப்படுகின்றன. இவ்வியாபாரத்திற்கு பொலிசாரும், மதுவிற்பனைக்கு பொறுப்பான அரச அதிகாரிகளும் உதவி செய்து வருவதாக மக்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

இதற்கெல்லாம் பின்னணியில் சில அரசியல் கட்சித்தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்களும் இருக்கிறார்கள். சிலர் அவ்வியாபாரங்களில் நேரடியாக ஈடுபட்டுவருகின்றனர்.

அண்மைக்காலமாக தோட்டங்களின் எல்லைகளிலும், தோட்டங்களினுள்ளும் பியர் கடைகள் (Beer Shops) திறக்கப்பட்டு வருகின்றன. குடியிருப்புகள், கோயில்கள், பாடசாலைகளுக்கும் அருகில் மதுக்கடைகள் திறக்கப்படக் கூடாது என்று சட்டம் கூறினாலும் அதற்கு மாறாகவே மதுக்கடைகள் பியர்கடைகள் திறக்கப்படுகின்றன. அவற்றில் பியர் மட்டுமே விற்க அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் எல்லாவகையான மதுவகைகளும் விற்கப்படுகின்றன. இதனால் இளைஞர்கள் மேலும் மேலும் மதுவிற்கு அடிமையாகி வருகின்றனர்.

மது பாவனையால் பெரும் எண்ணிக்கையான தோட்டத் தொழிலாளர்களும் இளைஞர்களும் உடல் ரீதியாகவும் மனோரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். உழைப்பின் பெரும்பகுதியை மதுவிற்காக செலவிடுகின்றனர். அவர்கள் ஏற்கனவே 'மது' என்ற பொறிக்குள் மாட்டப்பட்டு சீரழிக்கப்பட்டுள்ளனர். இதனை மது வியாபாரிகளும் அரசியல்வாதிகளும் திட்டமிட்டே செய்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் பியர் கடைகள் திறக்கப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர். அட்டன், வட்டவளை, றோசல்ல, தலவாக்கொல்லை, டயகம போன்ற பகுதிகளில் திறக்கப்பட்டுள்ள பியர் கடைகளை மூடவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் திறக்கப்பட்ட பியர் கடைகளில் எதுவுமே மூடப்பட்டதாக இல்லை.

எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளோர் திட்டமிட்டு செயற்பட வேண்டியவர்களாகிறார்கள்.

**புதிய ஆட்சி.**

1ம் பக்க தொடர்ச்சி

நாம் கூறி வந்ததுபோல் அமெரிக்க இந்தியப் போட்டி எமது நாட்டின் பாராளுமன்ற அரசியலில் புகுந்து விளையாடவே செய்கிறது. புலிகள் இயக்கத்தைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்த அண்மையில் கிழக்கிலிருந்து கருணா மூலம் எடுக்கப்பட்ட முயற்சி முதல் பாராளுமன்றக் கட்சிகளின் தலைமைகளை தமது செல்வாக்கிற்குள் கொண்டுவந்து அடுத்தவர்கள் கொடுத்து வருவதுவரை இந்த அமெரிக்க இந்தியப் போட்டியானது திரைமறைவில் நடந்து கொண்டே இருக்கிறது.

இன்று நாட்டில் நடைமுறையில் இருக்கும் ஜே.ஆர். உருவாக்கிவிட்டுச் சென்ற மோசமான அரசியலமைப்பு முறை மாற்றப்படாதவரை யுத்தமாக மாறி தற்போது யுத்த நிறுத்தத்தில் இருந்து வரும் தேசிய இனப்பிரச்சினைக்குரிய சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சித் தீர்வு காணப்படாதவரை நிலையான அரசாங்கமோ அன்றி நிம்மதியான ஆட்சி என்பதோ இயலாத காரியமாகவே இருந்து வரும்.

தற்போதைய புதிய ஆட்சி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு ஒன்றில் இ.தொ.கா.வை தன் பக்கம் இழுக்க வேண்டும். அல்லது ஹெல உறுமயவைக் கொண்டுவர வேண்டும். இவை இலகுவானவையாக இருக்க மாட்டாது. இருப்பினும் தொடர்ந்து பேரப் பேச்சுக்களும் புற அழுத்தங்களும் அயல் தலையீடுகளும் இடம்பெற்றே வருகின்றன. இவற்றின் நகர்வுகளே இந்த புதிய அரசாங்கத்தின் நிலைப்பையும் நீடித்தலையும் தீர்மானிக்கப் போகின்றன. அல்லாது விடின் மீண்டும் ஒரு அர்த்தமற்ற தேர்தல் வரவே செய்யும். அப்படியானால் அது எப்போது என்பதே மேலும் தெரிய வரும். அவ்வாறு தேர்தல் வந்தால் மக்களே அனைத்தையும் சுமப்பர் என்பதே அதன் உண்மையாகும்.

# சிறிபாத கல்வியியல் கல்லூரியை உடனடியாக திறக்கவும்

காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கும் சிறிபாத கல்வியியல் கல்லூரியை உடனடியாக திறக்க வேண்டும் என அக்கல்லூரியின் விரிவுரையாளர்கள் கல்வியியல் கல்லூரிகளின் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்லூரியின் ஊழல், மோசடியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்கு எதிராகவும், அலுவலர்களுக்கு எதிராகவும், நடவடிக்கை எடுக்கும்படி ஆசிரிய பயிலுனர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அவ்வதிகாரிகளும், அலுவலர்களும் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த முரண்பாடுகளின் வளர்ச்சியாக ஆசிரியர் பயிலுனர்களுக்கும் அந்த குறிப்பிட்ட அலுவலர்களுக்கும் இடையே பகையுணர்வு வளர்ந்து தாக்குதல் இடம்பெற வழிவகுத்தது. அச்சம்பவத்தை அடுத்து கல்லூரியில் அமைதியின்மை என்ற காரணம் காட்டி காலவரையின்றி கல்லூரி மூடப்பட்டுள்ளது.

அவ்வாறு கல்லூரி மூடப்பட்டமைக்கு எதிராக ஆசிரியர் பயிலுனர்களும் முன்னாள் ஆசிரிய பயிலுனர்களும் இயக்கங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேபோன்று கல்லூரி விரிவுரையாளர்கள் கல்லூரியை உடனடியாக திறக்குமாறு 21-04-2004ம் திகதியிடப்பட்ட மேற்படி எழுத்து மூல கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஊழல் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள், அலுவலர்களில் பெரும்பாலோனோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்களுக்கு எதிரான மாணவர்களின் போராட்டத்தை சிங்களவர்களுக்கு எதிராக தமிழினவாதமாக அவர்கள் காட்டி வருகின்றனர். அந்தப் போக்கை கண்டித்து கல்லூரியில் நிலவும் பிரச்சினை கல்லூரியின் வளங்களை பிழையாக பயன்படுத்தியவர்களுக்கு எதிரான போராட்டமே என்று சுட்டிக் காட்டியுள்ள விரிவுரையாளர்கள் மோசடி, ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பாரபட்சம் அற்ற விசாரணைகளை மேற்கொள்ளும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் ஓட்டுப் பொறுக்கும் அரசியல்வாதிகள் எதையும் கண்டுகொள்ளாதவர்கள் போல் இருக்கின்றனர்.

# இன்னும் இருக்கின்றது பூமி

நினைவுகள் தடம் மாறி தடம் மாறி
போன போதும்
கசந்து போய்
இன்னும் கிட்டாத சமாதானம் போல்
அவளுக்கு...விடிவு வெகு தூரம்
அவளது சுமைகள் மட்டும் அப்படியே
கூடை சுமக்கும் கொழுந்து பெண்போல்
கூன் விழுந்த முதுகு
கொழுந்து பறித்த கரங்களென
தடம் வெடித்த விரல்கள்
பனி விழுந்து பாதம் வெடித்து
இரத்தம் சிந்தும் கால்கள்
ஒவ்வொரு இயந்திரமாய் வாழ்வு

பூச்சிகளை ரசிப்பதும் - கவிதைகள் எழுதுவதும்
பாட்டு கேட்பதும் - பரதம் ரசிப்பதும்
நிலா பார்ப்பதும் - நீரோடை காண்பதும்
நிலவு சொட்ட சொட்ட
நெஞ்சம் நிறைந்த காதல் கணவனோடு
நிம்மதியாய் நடப்பதும்
பனிபூத்த புல்லின் இதழை
பறித்து கொஞ்சியதும்
அவளுக்கு மறந்தே போயின

நினைவில் இருப்பதெல்லாம்
ஒவ்வொரு பொழுதும் மாறி மாறி வரும்
ஏச்சிகளும் பேச்சிகளும்

இழிவான வார்த்தைகளும்
இழுத்துக்கோனும் முகங்களும்
வார்த்தை வழுக்கி விழுந்தாலும்
பலிபோடும் பாலங்களும்
எப்பொழுதும் லஞ்சம்
வாசலில் விற்கும் என்ற வக்கிரமும்
சுதந்திரமாய் சுகங்களைக் கூட
சுமக்க முடியாத கட்டுகளும்
கனவுகளைக் கூட
கட்டவிழ்த்து
ரசிக்க முடியாத ரணங்களும்

இன்னும் நீண்டு போகின்றன அவைகளும்.
எத்தனை கோசங்கள்
எத்தனை கூட்டங்கள்
எத்தனை கொடிகள்
எத்தனை அமைப்புகள்
எத்தனை கூட்டணிகள்
எட்டாத சமாதானம் போல்
இவளுக்கு இதுவும் அப்படித்தான்
விடிவு வெகு தூரம்
அவளது சுமைகள் மட்டும் அப்படியே

பெண்ணே எதையும் இழந்து விடாதே
இன்னும் இருக்கிறது பூமி
எல்லைக் கோடு வரை
உன் கோசங்கள் ஒலிக்கட்டும்
உன் போராட்டங்கள்
நெருப்பு பூக்களாய் பூக்கட்டும்
உன்னால் தானே
இன்னும் இந்த பூமி
இப்படி அழகாய் இருக்கிறது.

**சந்திரலேகா கிங்ஸ்லி**

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 ஏப்ரல்/மே 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 68

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## அரசியலமைப்பு நிர்ணயசபை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்றங் பொதுத்தேர்தலில் அதிகமான ஆசனங்களை பெற்றதிலிருந்து தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும் விகிதாசார தேர்தல் முறையையும் மாற்றியமைக்கும் வகையில் 1978 அரசியலமைப்பு மாற்றப்படவிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க கூறிவருகிறார். அதற்காக பாராளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணயசபையாக மாற்றப்படவிருப்பதாகவும் அவர் கூறிவருகிறார்.

எதிர்கட்சியான ஐ.தே.கட்சி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு இணக்கம் தெரிவிப்பதாக இல்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்ற வேண்டும் என்பது ஜனதிபதி சந்திரிகாவிற்கு விருப்பமாக இருக்கலாம் இலங்கை மக்கள் அதனை மாற்ற வேண்டுமென்று விரும்பவில்லை என்று ஐ.தே.கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமருன ரணில் விக்கிரமசிங்ஹ கூறியுள்ளார் சந்திரிகாவின் இரண்டாவது பதவி காலம் முடிந்த பிறகு அவர் அரச பதவியில் இருப்பதற்கு விரும்புவதால் ஜனாதிபதி முறையை மாற்றி அதற்கு பதிலாக பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள திட்டமிட்டு செய்ற்பட்டு வருகிறார் அதற்காகவே அவர். ஜனதிபதிமுறையை மாற்ற வேண்டும் என்று கூறிவருகிறார் என்றும் ரணில் விக்கிரமசிங்ஹ தெரிவித்துள்ளார்.

1978 அரசியலமைப்பினுடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி ஆட்சிமுறையை ஜே.ஆர் ஜவர்த்தன அறிமுகம் செய்தார் அவர் நிறைவேற்று அதிகரங்களை பிரயோகித்து நடைமுறையில் மக்களுக்கு இருந்த குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளுக்கும் ஆப்பு வைத்தார். தாராள பொருளதார கொள்கையின் கீழ் தேசிய பெருளாதாரத்தை சீரழித்தார். தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமை வேலை நிறுத்த உரிமை என்பவற்றை பறித்தார். 1980 யூலை மாதம் வேலை நிறுத்தம் செய்த அரச ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். நாட்டை நீண்டகாலம் அவசரகால பிரமானங்களின் கீழேயே ஆட்சி செய்தார் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு யுத்தத்தை திணித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பியக்க உரிமைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதாவது மாணவர் போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன அவசரகால சட்டத்துடன் பயங்கரவாதச்சட்டத்தையும் அமுல்படுத்தினார் அவற்றின் கீழ் அரசியல் தொழிற்சங்கத்தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் சுதந்திரமும் உரிமைகளும் கட்டுப்படுத்தப்பட்டன்.

ஜே.ஆர் ஜவர்த்தனவை தொடர்ந்து ஜனாதிபதி பதவி வகித்த பிரேமதசா,விஜேதுங்க ஆகியேரை விட தற்போது ஜனதிபதியாக இருக்கும் சந்திரிக்கா் நிறைவேற்று அதிகாரத்தை உச்சமாக பயன்படுத்தி வருகிறார். என்று கூறமுடியும் அவர் 2000 ஆண்டு பாராளுமன்ற கூட்டத்தொடரை காலவரையரை இன்றி ஒத்திவைத்தார் பின்பு காரணமின்றி அவ்வருடமே பாராளுமன்றத்தை கலைத்தார் 2000 ஆம் தேர்தல் நடந்தது 2001 ஆம் ஆண்டு மீண்டும் பாராளுமன்றத்தை கலைத்தார் 2004 ஆம் ஆண்டும் பாராளுமன்றத்தை மீண்டும் கலைத்தார் இப்போதும் தேர்தல் ஒன்று நடைபெற்றுள்ளது அதாவது 4 வருடங்களில் மூன்று பொதுத்தேர்தல்கள் நடத்தப்படும் அளவிற்கு அவர் நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தியுள்ளார் ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு உள்துறை, ஊடகம் ஆகிய அமைச்சுக்களை மீளப்பெற்றுக் கொண்டார் இவ்வாறு நிறைவேற்று அதிகாரங்களை அவர் பயன்படுத்தி வருகிறார்.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரையின்படி ஒருவர் ஜனதிபதியாக இரண்டு முறை மட்டுமே பதவி வகிக்க முடியும் அதற்குப் பிறகு ஜனதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை. இந்த 1978 அரசியலமைப்பை அரசியலமைப்புச்சட்டப்படி மாற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு தேவை அத்துடன் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஆதரவு பெறப்பட வேண்டும். நடைமுறையில் இருக்கின்ற விகிதாசார தேர்தல் முறையின் கீழ் எந்தவோரு கட்சியோ அணியோ பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பெறமுடியாது இவ்வாறான நிலையில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணங்கப்பாட்டிற்கு வந்தாலன்றி அரசியலமைப்பை மாற்றியமைக்க முடியாது.

1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு என்ற சொல்லப்படுகின்ற அரசியலமைப்பை ஆக்குவதற்கு பாராளுமன்றம் அரசியல்மைப்பு நிர்ணய சபையாக இயங்கியது அப்போது சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பாமை பலம் இருந்தது. 1947 சோல்பரி அரசியலமைப்பில் புதிய அரசியலமைப்பொன்றை ஆக்குவதற்கான வழிவகைகளோ ஏற்பாடுகளோ இல்லாதபடியாலேயே1970 தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியலமைப்பை ஆக்குவது பற்றி ஐக்கிய கூட்டணி தெரிவித்திருந்ததுடன் அரசியலமைப்பு நிர்ணய சபையை ஏற்படுத்தி 1972 அரசியலமைப்பை ஆக்கியது. அந்த அரசிலமைப்புடன் பௌத்த மத, சிங்கள, இன, மேலாண்மை உயர்ந்தபட்ச சட்டவடிவத்துடன் நிறுவமையமாக்கப்பட்டது. அதனை 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு மேலும் வலுப்படுத்தி தனியாள் சர்வாதிகாரத்தை- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை என்ற வடிவில் நிலை நிறுத்தியது.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேசிய இனங்களின் உரிமை கோரிக்கைகளுக்கு எதிரான ஏகாதிபத்திய சார்பு அரசியலமைப்பே என்பதில் எவ்வித சந்தேகம் கொள்ளத்தேவை இல்லை. அதனால் அதனை இல்லாமலாக்கி ஆகக்குறைந்தளவாவது தேசிய, ஜனாநயக உரிமைகள் உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்பை ஆக்க வேண்டும் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் ஜனதிபதி சந்திரிகா புதிய அரசியலமைப்பு பற்றியும் அதனை ஆக்குவதற்கான அரசியலமைப்பு நிர்ணயசபை பற்றியும் பேசுகிறார் என்று யாரும் ஏமாற்றமடைய தேவை இல்லை. அவர் தொடர்ந்து. நாட்டின் உயர் அரசபதவியில் இருக்க வேண்டும் என்ற அவரின் விருப்பத்தினாலேயே செயற்படுகறார் என்பதே உண்மை அவரது கட்சியும் ஐ.தே.கட்சியும் இணைந்தால்தான் 1978 அரசியலமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க முடியும் தற்போதைய சூழ்நிலையில் அவை இணைந்து செயற்பட வாய்ப்பில்லை. அவை இணைந்து ஒரு அரசியலமைப்பை ஆக்கினாலும் அது முதலாளித்துவ ஏகாதிபந்திய சார்பு. தேசிய இனங்களினதும் தொழிலாளர் விவசாயிகளினதும் உரிமைகளுக்கு எதிரானதாகவும் ஜனநாயக விரோதமானதுமாகவுமே இருக்கும் என்பதிலும் சந்தேகம் கொள்ளத்தேவை இல்லை. மக்கள் போராட்ட இயக்கங்களினுடாக கொடுக்கப்படும் அழுத்தத்தினாலேயே ஆகக்குறைந்தள்வான உரிமைகளுடனான புதிய அரசியலமைப்பை ஆக்க அக்கட்சிகள் நிர்ப்பந்திக்கப்படும்.

புதிய அரசியலமைப்பு பற்றியும் அரசியலமைப்பு நிர்ணயசபை பற்றியும் பேசும் ஜனாதிபதி சந்திரிகா எரியும் பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை எவ்வாறு அரசியலமைப்பில் இணைப்பது என்பது பற்றி எதுவும் பேசுவதாக இல்லை. ஐ.ம.சு. கூட்டமைப்பின் ஜே.வி.பி. அரசியலமைப்பு நிர்ணயசபை பற்றி ஆர்வம் கொள்வதாக இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியலமைப்பு நிர்ணயசபை யோசனைக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் கவனஞ்செலுத்தப்படாத அரசியலமைப்பு நிர்ணயசபையால் பிரயோசனம் இல்லை என்று அது தெரிவித்தாலும் ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போக வேண்டும் என்பதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடக இருக்கிறது முஸ்லிம் கட்சிகளும் மலையத்தமிழ் கட்சிகளும் ஏனைய சிறிய கட்சிகளும் ஜனாதிபதி ஆட்சிமுறையையும் விகிதாசார தேர்தல் முறையையும் மாற்றுவதை ஏற்றுக்கொள்ளவில்லை அக்கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்வதாக கூறப்படும் மக்கள் கூட்டத்தின் அபிலாஷைகளுக்கு பாதுகாப்பளிக்கிறது என்ற அடிப்படையிலன்றி இரு பிரதான கட்சிகளுடன் பேரம்பேசி பட்டம் பதவிகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வதற்காகவே அக்கட்சிகள் ஜனதிபதி முறையையும், விகிதாசார தேர்தல் முறையையும் ஏற்றுக்கொள்கின்றன.

எனவே தற்போதைய நிலையில் ஜனாதிபதி சந்திரிகா எவ்வளவுதான் பேசினாலும் புதிய அரசியலமைப்பை ஆக்கமுடியாது அவரின் அதிகார உள்நோக்கம் கொண்ட பம்மாத்துக்களால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

மக்கள் சார்பான அரசியலமைப்பை ஆக்க வேண்டுமென்றால் மக்கள் நோடியாக பங்கெடுக்கக் கூடிய அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட புரட்சியின் மூலமே சாத்தியமாகும் அவ்வரசியலமைப்பு மக்களுக்கு அதிகாரத்தையும் தேசிய இனங்களுக்கு சுயாட்சியையும் சமத்துவத்தையும், தொழிலாளர்கள் ,விவசாயிகள், பெண்கள், ஒடுக்கப்பட்டேருக்கு உரிமைகளையும் உறுதி செய்வதாகவும் ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்கப்படியிலிருந்து இலங்கையை மீட்டு அதன் சுதந்திரத்தை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும்.

- ஆசிரியர் குழு -

# ஏகாதிபத்திய மேலாதிக்க விரிவும் விடுதலைப் போராட்டங்களின் நிலையும்

ஐக்கிய அமெரிக்கா உலகின் முதல்தர ஏகாதிபத்தியமாகவும் உலக மக்களின் பிரதான எதிரியாகவும் வளர்ந்து நிற்கிறது. ஏனைய ஏகாதிபத்திய நாடுகள் வெவ்வேறு அளவுகளில் ஐக்கிய அமெரிக்காவோடு இணைந்தும் போட்டியிட்டும் உலகைத் தமது ஆதிக்கத்தின் கீழ் தொடர்ந்தும் வைத் திருக்க சதா முயன்று வருகின்றன. ஆதலால் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை மென்மேலும் வேகப்படுத்தி முன்னெடுக்க வேண்டும். இதற்கு உலகின் பொதுவுடமைக் கட்சிகள், இடதுசாரி அமைப்புக்கள், முற்போக்கு ஜனநாயக தேசிய சக்திகள் ஐக்கியப்பட்டு நின்று போராடி ஏகாதி பத்தியத்தை முறியடிக்க வேண்டும். இவ்வாறு நான்கு தசாப்தங்கள் முன்பாக துரநோக்குடன் அறைகூவல் விட்டவர்கள் உலகின் மாக்சிச லெனினிசவாதிகள்.

அதன் அடிப்படையில் உலகின் ஒவ்வொரு நாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வெவ்வேறு அளவுகளிலும் நிலைகளிலும் இடம் பெற்றும் வந்தன. சாதாரண உழைக்கும் மக்கள் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றி அறிய முற்பட்ட அளவுக்கு படித்த அறிவு ஜீவிகள் எனப்பட்டவர்கள் பலர் அறியவில்லை. ஏகாதிபத்தியம் எனக் கூறுவது பொதுவுடமைவாதிகளின் வாய்ப்பாடு என்றும் ஐக்கிய அமெரிக்கா வைத் திட்டுவது இவர்களின் வழமை யான வக்கிரப் போக்கின் வெளிப்பாடு என்றும் இந்த மெத்தப்படித்தவர்கள் மிகப் பாமரத்தனமாகக் கூறிக் கொண்டனர். இவர்களது மண்டை ஓட்டின் கீழ் உறைந்திருந்தவை வழி வழிவந்த ஆதிக்க கருத்தியலாகவும் அடிமை விசுவாசமாகவும் காணப்பட்டது. இந்த வகையினர்தான் இன்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஏகாதிபத்திய உலக மேலாதிக்கத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சாமரை வீசிப் பாத பூஜை செய்து வருகின்றனர். இந்த வகையினர் தான் இன்றைய ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை கண்டித்து எதிர்க்காது அதற்கு மௌன ஆதரவு வழங்கி வருகின்றனர்.

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது பரம எதிரியான சோஷலிசத்தை முறியடித்து மாக்சிச லெனினிசத்தை உடைத்துப் பின்னடையச் செய்துவிட்ட தாக எக்காளமிட்டு நிற்கிறது. அதே வேளை தமது ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலான உலகமயமாதல் திட்டங்களை உலக நாடுகளில் புகுத்தி வருகின்றது. விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்பு கள் வளர்ச்சி என்பனவற்றைத் தமது ஏகாதிபத்திய விரிவுபடுத்தலுக்குப் பயன்படுத்துவதில் புதுப்புது வழிமுறை களைக் கையாண்டு வருகின்றது. தகவல் தொழில் நுட்பத்தின் பன்முக வளர்ச்சியும் கணனி மயமாக்கப்பட்ட துறைகளும் மனித ஆற்றல் முயற்சி என்பனவற்றின் அதி உயர் வெளிப் பாடாகும். அவற்றை மனித குல முன் னேற்றம் அபிவிருத்தி வளர்ச்சி விமோ சனம் என்பனவற்றுக்குப் பயன்படுத்தப் படக்கூடியனவாகும். ஆனால் அவை யனைத்தும் ஒரு சிலரது பெரு லாபம் பணக்குவிப்பிற்கு உரியதாகவே இருந்தும் வருகின்றது. இதன் ஊடாக ஏகாதிபத்திய உலக மேலாதிக்க நோக்கங்கள் பல முனைகளிலும் முன் தள்ளப்படுகின்றது. முதலாளித்துவ அடிப்படையிலான உற்பத்தியும் அதற்கு இசைவான சமூக அமைப்பும் ஏனைய கருத்தியல் பண்பாட்டு அம்சங்களும் நிலை நிறுத்தப்படுகின்றன. "முதலாளித் துவ வளர்ச்சியின் உச்சகட்டமே ஏகாதிபத்தியம்'' என லெனின் வரையறுத்துக் கூறிச்சென்றார். அதனை உலக ரீதியில் ஏகாதிபத்தியம் நடைமுறை வழிகளில் எடுத்துக் காட்டி நிற்கின்றது. இதன் மற்றொரு அம்சமான "ஏகாதிபத்தியம் என்றால் யுத்தம்" என ஸ்டாலின் எடுத்து விளக்கி யிருந்தார். முதலாவது, இரண்டு உலக யுத்தங்களையும் அவற்றுக்குப் பின்னான கொரிய ஆக்கிரமிப்பு யுத்தம் முதல் இன்றைய ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் வரை ஏகாதிபத்தி யத்தின்

**வெகுஜனன்**

கேடுகெட்டதும் கோரத்தன மானதுமான இயல்பை உலக மக்களுக்கு உணர்த்தி நிற்கின்றது.

சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சோஷலிச வீழ்ச்சியும் உலக மாக்சிச லெனினிச இயக்கங்களின் தற்காலிகப் பின்னடைவுகளும் ஏகாதிபத்தியத்திற்கு ஒரு தற்காலிக வெற்றியையும் பலத்தையும் வழங்கி உள்ளமை உண்மையே. இத்தகைய சூழலிலேயே ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் தாராளமயம், தனியார் மயம், உலகமயம் ஆகிய நிகழ்ச்சி நிரல் திட்டமிடப்பட்டு அதனை உலகளாவிய

> பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் அனைத்தையும் உலக அளவில் தமதாக்கி அவற்றின் மூலமான வளங்களை உறுஞ்சிக் கொள்ளையிட்டு முழு ஆதிக்கம் செலுத்துவதே ஏகாதிபத்தியக் கனவாகும்.

அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஊடாக முதலாளித் துவ அமைப்பு முறை பாதுகாக்கப் படுவதுடன் ஏகாதிபத்திய நலன்களும் அதன் உலக மேலாதிக்க நோக்கங் களும் விரிவுபடுத்தப்படு கின்றன. உலகின் வளங்களைச் சுரண்டி லாபமாகக் கொள்ளையடிப்பதில் ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகள் எதையும் விட்டு வைக்காத போக்கினை கொண்டுள்ளன. தனிமனித சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை, பல கட்சி ஆட்சி முறை போன்ற பகட்டான வார்த்தைகளின் ஊடாகவும் வறுமை ஒழிப்பு, அபிவிருத்தி, கல்வி, சுகாதார மேம்பாடு என முழக்கமிட்டு அரசுசார் பற்ற நிறுவனங்கள் வழியாக முதலாளித் துவ அமைப்பு முறை பாதுகாக்கப்படு கின்றன. அதேவேளை பஞ்ச பூதங்கள் எனப்படும் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகாயம் என்பனவற்றை உலக அளவில் தமதாக்கி அவற்றின் வளங்களை உறுஞ்சி முழு ஆதிக்கத்தி னைக் கொண்டிருப்பதே ஏகாதிபத்தியக் கனவாகும்.

இத்தகைய ஏகாதிபத்திய உலக மேலாதிக்க விரிவுக்கு எதிராக இருந்து வருவதே விடுதலைப் போராட்டங் களாகும். எங்கே ஒடுக்குமுறை உண்டோ அங்கே போராட்டம் இருக்கவே செய்யும். சுரண்டலும் ஒடுக்கு முறையும் கொண்ட ஏகாதிபத்தியம் உலகின் வளங்களைச் சுரண்டி மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி வருவதால் அதனுடன் நட்புறவோ இணக்கமோ ஏற்பட இடமிருக்க முடியாது. ஆதலால் விடுதலைப் போராட்டங்கள் தவிர்க்க முடியாதவாறு வெடித்தெழுகின்றன.

ஏகாதிப்பத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டங்கள் இன்று பல்வேறுபட்ட வைகளாக இருக்கின்றன. ஒன்று நேரடியாகவே ஏகாதிபத்திய ஆக்கிர மிப்பை எதிர்த்துப் போராடும் விடுதலைப் போராட்டங்களாக உள்ளன. இரண்டாவது உள்நாட்டு ஆளும் அதிகார வர்க்கங்களின் மறைவில் இருந்து வரும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கும் விடுதலைப் போராட்டங்களாக காணப்படுகின்றன. முன்னையதற்கு உதாரணமாக ஆப்கானிஸ்தானையும், ஈராக்கையும் காண முடியும். பின்னயதற்கு நேபாளம், பிலிப்பீன்ஸ், இந்தியா, பாலஸ்தீனம், குர்திஷ் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை விட ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறு நிலைகளில் ஏகாதி பத்தியத்தை எதிர்த்த விடுதலைப் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

இவ்விடுதலைப் போராட்டங்கள் சிலகாலங்களில் எழுச்சி பெற்று பற்றிப் பரவியவைகளாகவும் சிலகால கட்டங் களில் தொய்வு பெற்று பலவீனமான நிலைகளிலும் இருந்து வந்துள்ளமையை வரலாறு எடுத்துக்காட்டி வந்துள்ளன. ஒவ்வொரு காலகட்டங்களிலும் விடுதலைப் போராட்டங்களை நசுக்கு வதற்கு ஏகாதிபத்திய சக்திகள் முழுமூச் சுடன் செயற்பட்டு வந்திருக்கிறது. மாக்சிச லெனினிச அடிப்படையில் சோஷலிசத்தை வென்றெடுக்கும் இலக்கில் போராடிய விடுதலை இயக்கங்களை அந்தந்த நாடுகளின் ஆளும் பிற்போக்கு வர்க்க சக்திகளுடன் இணைந்து நின்றும் அதுவும் முடியாத விடத்து நேரடியாக இறங்கி நின்றும் ஏகாதிபத்தியவாதிகள் மிலேச்சத்தன மான யுத்தங்களை நடாத்தி வந்துள் ளனர். சீன, வியட்நாமிய, கொரிய, கம்போடிய நாடுகளில் யப்பானிய, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நீண்ட ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடாத்தி விடுதலை இயக்கங்களை அழித் தொழித்துவிட முயன்று இறுதியில் தோல்வி கண்டன. இங்கெல்லாம் கம்யூனிச பூதம் பற்றியும் சிகப்புப் பயங்கர வாதம் என்றும் பிரச்சாரம் செய்தனர். இன்று இஸ்லாமிய பயங்கரவாதம் எனக்கூறி எண்ணெய், இயற்கைவாயு போன்ற வளங்களைக்

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கைத்தீவில் இந்திய இராஜதந்திரம்

~ ச.தொல்காப்பியன் ~


இலங்கையின் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பிலிருக்கும் இந்திய தூதுவர் நிருபம் சென் வாழ்த்தியிருக்கிறார். பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்று இந்திய அரசின் வாழ்த்துக்களை கூறியிருக்கிறார். அவர் இலங்கையின் புதிய பிரதமராக ஏப்ரல் 6ஆம் திகதி காலை பதவிப்பிரமானம் செய்தார். அன்று மதியம் இந்திய தூதுவர் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இந்திய வாழ்த்துக் களுக்கு நன்றி செலுத்தும் முகமாக இலங்கை யின் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இந்தியாவின் தலையீடு அவசியம் என மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் கடந்த நான்கு வருடங்களில் நடைபெற்ற 3வது தேர்தல் ஆகும். இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா அவருக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைத்தார். அதனை அமெரிக்காவோ ஐரோப்பிய நாடுகளோ ஏற்றுக் கொண்டிருக்க வில்லை. அவற்றின் தலையீட்டால் தமது பூகோளமயமாதல் கொள்கையை இலங்கையில் முன்னெடுப்பதற்காக ஐ.தே.கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்ஹ மேற்கொண்ட சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சந்திரிக்காவின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளவே விரும்பின. ஜனாதிபதி ஆட்சியையும் பாராளுமன்ற ஆட்சியை யும் இணக்கத்திற்கு கொண்டு வரவே அந்நாடுகள் விரும்பின.

ஆனால் இந்தியா அதற்கு நேர்மாறாக நடந்து கொண்டது இலங்கையின் பாராளுமன்றத்தை கலைந்து தேர்தலை நடத்த ஜனாதிபதி சந்திரிகாவிற்கு தெம்பையும் ஆசீர்வாதத்தையும் இந்திய அரசு கொடுத்தது அந்தத்துணிவிலேயே சந்திரிகா பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்தினார்.

தேர்தல் முடிவுகளை பார்த்தால் ஐ.தே.கட்சிக்கு பெரும்பான்மை இல்லை. சந்திரிகா தலைமையிலான ஐ.ம.சு. முன்னணிக்கும் பெரும்பான்மை இல்லை. ஆனால் ஐ.தே.கட்சியை விட கூடுதலான ஆசனங்களை ஐ.ம,சு.மு. பெற்றுள்ளது. அதனை வைத்துக் கொண்டு பாராளுமன்றத்தில் நம்பிக்கையாக ஆட்சி நடத்த முடியாது என்பது தெளிவாக தெரிகிறது.

கொழும்பிலிருக்கும் இந்திய தூதுவர் நிருபம் சென் இலங்கையின் பொதுத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்கப் பட்ட பின்பு ஏப்ரல் 5ஆம்



பிரதமர் பதிவியேற்றதும் முதலில் சென்று வாழ்த்துக் கூறியவர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென் ஆவார்

திகதி மாலை இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகாவை அவரது ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து இரண்டு மணித்தி யாலயங்கள் வரை கலத்துரையாடி யுள்ளார். அச்சந்திப்பின் போது ஜனாதி பதியின் ஐ.ம.சு.முன்னணி பாராளு மன்றத்தில் ஏனைய சிறு கட்சிகளின் ஆதரவை பெற்று ஆட்சியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ள்ளார். அவ்வேளை ஐ.ம.சு.மு ஆட்சி யமைப்பது பற்றி புதுடெல்லியின் அபிப்பிராயத்தை அறிய விரும்புவதாக ஜனதிபதி சந்திரிக்கா இந்திய தூதுவரிடம் கூறியுள்ளார். புதுடெல்லியின் அபிப் பிராயத்தை அறிவதற்காக இந்திய தூதுவர் ஏப்ரல் 6ஆம் திகதி மாலை புதுடெல்லிக்கு பயணமானார்.

இலங்கையில் வாழும் மலையகத் தமிழ்களான இந்தியவம்சாவழியினரின் தலைவர்களில் ஒருவராகக் கொள்ளப் படும் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவை ஐ.ம.சு. முன்னணி க்கு பெற்றுக் கொடுப்பதற்கு அவருடன் இந்தியதூதுவர் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார் (இ.தொ.விற்கு பாராளுமன்றத்தில் எட்டு ஆசனங்கள் இருக்கின்றன) இந்திய அரசுடன் நெருங்கிய உறவை வைத்திருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம்மின் ஆதரவை பெற்றுக்க கொடுப்பதற்கும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் முயற்சிகளை எடுத்துள்ளார். (முஸ்லிம் காங்கிரசிற்கு 5 ஆசனங்கள் இருக்கின்றன).

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் நோர்வேயின் மத்தியஸ்துவத்தை, இந்திய ஆளும்வர்க்கம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கை யின் விவகாரங்களில் அமெரிக்கா ஜப்பான் ஆகியவற்றின் தலையீட்டையோ ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டையோ இந்திய ஆளும் வர்க்கம் மனப்பூர்வமாக அங்கீகரிக்கவில்லை. இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்ஹவிற்கும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திற்குமிடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்த உடன்பாடு புரிந்துணர்வு உடன்பாடு என்பவற்றை ஆதரிப்பதாக இந்தியத் தலைவர்கள் உச்சரித்த போதும் அவற்றில் எவ்வித நேர்மையும் இருந்ததில்லை. இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது இந்திய தலைவர்கள் கூறிய கருத்துக் கள் 'இந்து' போன்ற பத்திரிகைகள் வெளியிட்ட கருத்துக்களும் இந்திய அரசின் நேர்மையீனத்தை வெளிப்படுத்தின.

சமாதான முயற்சிகளினால் விடுதலைப் புலிகள் இயக்கம் கூடிய சலுகைகளை பெற்றுக்கொண்டதாக இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா கூறிவந்தார். அதே கருத்தையே இந்திய தலைவர்களும் கூறினர். இலங்கையின் இனப் பிரச்சினை தீர்விற்கு வடக்கு கிழக்கு மாகாணங்ள் இணைந்த சுயாட்சியே தேவை என்று இலங்கை தமிழர் தரப்பில் விடுக்கப்பட்டுவரும் கோரிக்கைக்கு மாறாகவே இந்தியாவிலிருந்து கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இலங்கையில் இந்திய தூதுவராக இருந்து தற்போதும் இந்திய இராஜதந்திர விவகாரங்களில் செல்வாக்கை செலுத்தி வரும் டி.என் திக்ஷித் போன்றவர்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பிற்கான தேவை தற்போது எழவில்லை என்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்களவர்களும். வடக்கு தமிழர்களுடன் இணைந்திருக்க விரும்பவில்லை என்றெல்லாம் கூறிவந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் தலைமை யுடன் கிழக்கு மாகாண புலிகள் இயக்கத்தலைவர் கருணா அம்மான் முரண்பட்டுக் கொண்டதன் பின்னணி யிலும் அவர் எழுப்பும் கிழக்கு பிரதேச வாதத்திற்கு பின்னணியிலும் இந்திய உளவு நிறுவனமான 'RAW' இருப்ப தாகவே பாரிய சந்தேகம் கொள்ளப் படுகிறது. இந்தியாவிலிருந்து சென்ற சில உளவு பிரிவினர் கருணா அம்மானை சந்தித்துள்ளதாகவும் பேசப்படுகிறது. கருணா அம்மானின் பிரிவினை அடுத்து புலிகள் இயக்க கட்டுப்பாட்டு பகுதியான வன்னியில் 16 பேர் புலிகள் இயக்கத்தால் கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அவர்கள் இந்திய உளவு பிரிவிற்கு தகவல்களை கொடுத்து வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிய முடிகிறது.

கொழும்பிலிருக்கும் இந்துப் பத்திரிகை நிருபர் விஷேட பயணஒழுங்குகளுடன் கிழக்கு மாகாணத்திற்கு சென்று கருணா அம்மானிடம் விஷேட செவ்வியை எடுத்துள்ளார். புலிகள் இயக்க தலைமையகம் இருக்கும் வன்னிக்கு சென்று செவ்வி எடுப்பதில் அந்த அக்கறையை காட்டப்படவில்லை. இவை இந்திய ஆங்கில சஞ்சிகையான (frortline) ஃரண்ட்லைன் பத்திரிகையில் வெளியாகி உள்ளன. எனினும் புலிகள் இயக்க கட்டுப்பாட்டில் தேர்தலில் போட்டியிட்ட த.தே.கூட்டமைப்பு பாராளு மன்றத்தில் 22 ஆசனங்களை பெற் றுள்ளது. வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்ய பட்டவர்களும் ஐக்கியப்பட்டு செயற்படுவ தென தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரியின் நிலைப்பாடும் நடவடிக்கைகளும் அவர் கடந்த பொதுத் தேர்தலில் சுயேட்சையாக போட்டி யிட்டதும் இந்திய ஆளும் வர்க்க நிலைப் பாட்டிற்கு உரம் சேர்ப்பவையாக அமைந்தன. ஈ,பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) இந்திய ஆளும் வர்க்க அக்கறைகளை பாதுகாப்பனவாகவே செயற்பட்டு வருகின்றன என்பது தெரிந்ததே.

அதேவேளை கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திற்கு மிகவும் நேசமான அரசியல் அணியொன்றை மலையக பெருந்தோட்டப் புறங்களில் வளர்ப்பதில் இந்திய தூதரகம் முயற்சித்து வருகிறது. அதாவது மலையகத்தமிழ் மக்களாகிய இந்திய வம்சாவளியினர் மத்தியில் இந்திய விசுவாசம் மிக்க அரசியல் அணியை கட்டிவளர்ப்பதில் ஆர்வம் காட்டிவருகிறது.

அம்முயற்சி கடந்த தேர்தலின் போதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய தூதரகத்திற்கு விசுவாசமான அணி யொன்றை தேர்தலில் போட்டியிட வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. மலையகத்தி லுள்ள படித்தவர்கள் பலரை அணுகி முயற்சிகள் செய்யப்பட்டன. அம்முயற்சி களை செய்தவர் கொழும்பிலுள்ள தொலைக்காட்சி நிறுவனமொன்றின் தமிழ் அறிவிப்பாளராவார். அவர் அணுகிய மலையக படித்தவர்கள் அவரது விருப்பத்திற்கு இணங்க வில்லை. எனினும்

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# ஒரு அமெரிக்க விசுவாசியின் வாக்கு மூலம்



சென்ற மார்ச் 19ம் திகதி பண்டார நாயக்கா சர்வதேச விவகாரங்களுக் கான ஆய்வு மன்றத்தில் "தென் ஆசியாவில் அமெரிக்காவின் பாத்திரம்" என்ற தலைப்பில் இடம் பெற்ற ஆய்வரங்கில் வரவேற்புரையை திரு. லக்ஸ்மன் கதிர்காமர் நிகழ்த்தினார். குறித்த ஆய்வரங்கில் பங்குபற்றிய பிரமுகர்களில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ் லன்ஸ்ரட், ஜோர்ச் வாசிங்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும் தென் ஆசியாவுக்கான அமெரிக்கச் செயலாள ராக முன்பிருந்தவருமான பேராசிரியர் கார்ல் இன்டர்பர், நியூயோக் ரைம்சின் தென் ஆசியாவுக்கான பிரதம ஆசிரியரும், முன்னாள் அமெரிக்க தூதுவருமான பீட்டர் பேர்லி, நேபாள ரைம்ஸ் பத்திரிகையுடன் தொடர்புடைய குண்டாடிக்சிற், இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார செயலாளர் கன்வால் சிபால் உட்பட மற்றும் பலர் இருந்தனர். கதிர்காமர் தனது உரையின் ஆரம்பத்தில் அமெரிக்க இலங்கை புல்பிறைட் ஆணைக்குழு 1952ல் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை அமெரிக்கா ஒரு கோடி இருபது இலட்சம் டொலர்களைச் செலவிட் டுள்ளதெனத் தெரிவித்தார்.

கதிர்காமர் ஆற்றிய உரையின் சாராம்சம் பின்வருமாறு அமைந்தது.

"அமெரிக்க மக்களுக்கு உலகம் பூராவும் எண்ணற்ற நண்பர்களும் நலன் விரும்பிகளும் உள்ளனர். தென் ஆசிய மக்களாகிய எங்களுக்கும் அமெரிக்க மக்களுக்குமிடையில் எப்போதுமே சிறந்த நட்பு நிலவிவந்துள்ளது. அவர்களும் அவர்களது அரசாங்கமும் எங்களுக் கெதிராக கொலனித்துவ நோக்கங்களைக் கொண்டிருக்க வில்லை.

எமது சுதந்திரத்திற்கான முயற்சியில் அவர்கள் குறுக்கே நிற்கவில்லை. அமெரிக்கா அதன் முழுச் சுதந்திர காலத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு தஞ்சம் வழங்கி வந்துள்ளது. ஒரு நல்ல வாழ்வை எதிர்பார்ப்பவர்களுக்கு அந்த நாடு நம்பிக்கையையும் சந்தர்ப்பத்தையும் கொடுத்து வருகிறது. அங்கு திறமை ஏற்றுக் கொள்ளப்பட்டு அது விருத்தி பெற ஊக்கமளிக்கப்படுகிறது. அங்கு கடின உழைப்புக்கு பலன் கிடைக்கிறது. அமெரிக்காவின் தாராளத் தன்மையை நாம் மறந்து விடலாகாது. அமெரிக்கா பலமுடனும் ஜனநாயகத்தின் பாதுகாவ லாகவும் இருக்க வேண்டுமென்று அதன் நண்பர்கள் விரும்புகிறார்கள். அமெரிக்காவின் நியாயமான நிலைப்பாடு ஈராக்கில் இடம்பெறும் சம்பவங்களால் பாதிக்கப்படுவது குறித்து பலர் குழப்பமடைந்துள்ளனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவின் தலைமையை ஏற்று ஜனநாயக சமூகம் ஒன்றிணைந்து நிற்க வேண்டும். அல்லாவிடில் ஒவ்வொரு ஜனநாயக நாடும் தனித்தனியே வீழ்ந்துவிடும்.

2000ம் ஆண்டு வோர்சாவில் இடம் பெற்ற அமைச்சர்கள் மகாநாட்டில் நான் பின்வருமாறு கூறியிருந்தேன். "தனித்து நின்று ஒரு ஜனநாயக நாடு தொடர்ச்சியான பயங்கரவாதத் தாக்கு தலுக்கு தாக்குப் பிடிக்க முடியாது. ஜனநாயக நடைமுறை, பாரம்பரியம் என்ற வரையறைகளால் யுத்த காலத்தின் போதும் சட்டம், ஒழுங்கு, பத்திரிகைச் சுதந்திரம் என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. எனது வேண்டுகோள் மிகவும் தெளிவானது. உலக ஜனநாயக நாடுகள் ஒன்று சேர்ந்து போராடாவிட்டால் ஜனநாயகம் நிலைக்காது."

செப்டம்பர் 11ம் திகதிய சம்பவம் அமெரிக்க மக்கள் மனதில் இன்றும் பசுமையாய் உள்ளது. தமது நாட்டில் இது போன்ற பயங்கரத்தை அவர்கள் என்றுமே எதிர் நோக்கவில்லை. அமெரிக்க அரசின் வெளிநாட்டுக் கொள்கையானது செம்டம்பர் 11ம் திகதிய சம்பவத்தின் விளைவால் நெறிப்படுத்தப்படுகிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1850ல் இருந்து இலங்கையில் ஒரு வர்த்தக ஏஜன்சியை அமெரிக்கா கொண்டுள்ளது என்பது பலருக்குத் தெரியாது. ஆரம்பத்தில் அது அமெரிக்க கப்பல்களின் நலன்களை கவனிக்க ஏற்படுத்தப்பட்டது.

1810ல் அமெரிக்க மிசனரிமார்கள் மாசாசூசெற்ஸ்சிலிருந்து இலங்கைக்கு வந்தனர். இலங்கையின் கல்வித் துறையை உலகின் எந்தப்பகுதியைச் சேர்ந்த கிறிஸ்த்தவ மிசனரிமார்களிடமும் ஒப்படைக்க பிரிட்டிஷ் அரசு தீர்மானித்தது. அவர்களின் நடவடிக்கை யை மேற்பார்வை செய்ய பாராளுமன்ற ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கவில்லை. கேள்விப்பத்திரங்கள் கோரப்படவுமில்லை.

பிரிட்டனிடமிருந்து சுதந்திரமடைந்த அமெரிக்கர்கள் மீது உள்ளூர வெறுப்புக் கொண்டிருந்த பிரிட்டிஷ் அரசு அமெரிக்க மிசனரிமார்களை இலங்கையின் வடபகுதிக்குப் போகுமாறு பணித்தனர். வரண்ட, வசதிகள் அற்ற வடபகுதிக்கு செல்லும் அமெரிக்கர் பாதியில் நாட்டை விட்டுப் போவார்கள் என பிரிட்டிஷ் அரசு எண்ணியது.

ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை. 1816-1848 வரை 105 தமிழ் பா சாலை களும் 16 ஆங்கில பாடசாலைகளும் நிறுவப்பட்டன. 1823ல் வட்டுக் கோட்டையில் ஒரு செமினரி நிறுவப் பட்டது. அது பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியானது. 1824ல் திருமதி ஹரியட் வன்ஸ்லோ என்பவரால் உடுவில் பெண்கள் கல்லூரி நிறுவப் பட்டது. அப்போது ஆசியாவிலேயே பெண்கள் தங்கும் வசதியுடைய ஒரே பாடசாலை யாக அதுவே விளங்கியது.

அமெரிக்க அரசியல் வாதிகளுக்கும் இலங்கை அரசியல் வாதிகளுக்கும் இடையில் பொதுவான ஒருமைப்பாடு இருக்கிறது. இரண்டு பேருமே வாக்குறுதிகளை வழங்குவார்கள். ஆனால் அதை நிறைவேற்றும் எண்ணம் இருப்பதில்லை. இரண்டு நாட்டிலுமே அரசாங்கத் தரப்பு அங்கத் தவர்களும் எதிர் தரப்பு அங்கத்தவர் களும் பாடசாலைப் பிள்ளைகள் போல றவுடித்தனம் செய்கிறார்கள்.

இவ்வாறு ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை துதிபாடி அதற்கு சேவகம் செய்வதில் முன்னைய பொதுசன முன்னணி ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சராகவிருந்த இதே கதிர்காமர்தான் மீண்டும் தற்போதைய ஐ.ம.சு. முன்னணி ஆட்சியிலும் வெளிவிவகார அமைச்சராகி உள்ளார். எத்தகைய நாசங்களும் அழிவுகளும் நாட்டிற்கு வந்து சேரப் போகிறதோ!

- சிறீ -

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

கொலனி ஆட்சியிலிருந்து 'சுதந்திரம்' வழங்கப்படுவதற்கு முன்னரே கல்வியைப் பரவலாக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டு விட்டன. இலவசக் கல்வி நாடளாவிய முறையில் யூஎன்.பி. பிரமுகரான சி.டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா கல்வி அமைச்சரான போது சட்டமாக்கப்பட்டது. அதனுடைய நோக்கம் சமூகத்தில் எல்லாருக்கும் சமத்துவத்தை இயலுமாக்குவது அல்ல. ஒரு புறம், வடபிரதேசத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரால் வழங்கப்பட்ட கல்வி வசதிகட்கு ஈடாகத்தெற்கிலும் வசதிகளை வலுப்படுத்துவது. இதில் என்ன பேரினவாத நோக்கம் இருந்தாலும், இது வரவேற்கத்தக்க நடவடிக்கை என்பதிற் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

மாகாணந் தோறும் ஒரு மத்திய மகா வித்தியாலயத்தையாவது நிறுவுவது என்ற கொள்கையும் துரிதமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் மூலம் கிராமிய நடுத்தர வர்க்கத்துப் பிள்ளைகட்கு தரமான உயர் பாடசாலை வாய்ப்புக்கள் கிட்டின. இந்த முயற்சி பின்னரும் அதே வேகத்திற் தொடரப் பட்டிருந்தால் இலங்கையிற் கல்வி வசதிகள் பரவலாகச் சம அளவிற் கிடைத்திருக்கும். எல்லாருக்கும் நல்ல கல்வி வேண்டுமாயின் அது எல்லாப் பாடசாலைகளையும் மத்திய மகாவித்தியாலயங்களின் தரத்துக்கு உயர்த்துவதன் மூலமும் புதிய பாடசாலைகளைத் தோற்றுவிப்பதன் மூலமுமே இயலுமாகியிருக்கும்.

இந்த நாட்டை ஆண்ட எந்த அரசாங்கத்திடமும் அந்த நோக்கம் இருந்ததாகக் கூற இயலாது. அதற்கும் மேலாக, அதைக் குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடியளவுக்குப் பொருள் வசதி இல்லாமையும் ஆசிரியர் பற்றாக் குறையும் தடையாக இருந்தன. எனினும், 1960களின் நடுப்பகுதி வரை இலங்கையில் உயர் பாடசாலை வரையிலான கல்விப் பரவலாக்கம் துரிதமாக முன்னேறியது எனலாம்.

இக் கல்விப் பரவலாக்கத்துக்குப் பெருந் துணையாக இருந்தது தாய்மொழிக் கல்விக் கொள்கை எனலாம். தாய் மொழி மூலம் கல்வி என்ற கொள்கை கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1952ல் பாடசாலைகளில் நடைமுறையிற் புகுத்தப்பட்டு விட்டது. எனினும் விஞ்ஞானப் பாடங்களையும் கணிதம் உட்பட வேறுஞ் சில பாடங்களையும் தாய் மொழி மூலம் கற்பிப்பதற்கான பாடநூல்களோ ஆசிரியர்களோ இல்லாத காரணத்தால் நடைமுறையில் ஆங்கில மூலமே இப்பாடங்கள் உயர் பாடசாலைகள் பலவற்றிற் கற்பிக்கப்பட்டு வந்தன.

தாய்மொழிக் கல்வி, கலைப்பாடங்கள் எனக் கூறப்பட்ட வரலாறு, குடியியல், புவியியல் போன்றவற்றில் முதலில் இயலுமாயிற்று. விஞ்ஞானப் பாடங்களை முற்று முழுதாகத் தாய் மொழியிற் கற்பிக்க மேலுஞ் சில காலம் எடுத்தது. பாடசாலைகளிற் தாய் மொழிக்கல்வி என்பதன் தவிர்க்க இயலாத அடுத்த கட்டம் தாய் மொழியில் உயர்கல்வி என்பதாகும். இதற்குத் தாய்மொழிக் கல்வியைத் திட்டமிட்டவர்கள் எவ்வளவு தூரம் ஆயத்தமாக இருந்தார்களோ தெரியாது. எனினும் 1956ம் ஆண்டு சிங்களம் அரச கரும மொழியாகிய பின்பு. தாய் மொழி மூலம் பல்கலைக்கழகக் கல்வி என்ற தேவை பற்றிப் பகிரங்கமாகவே பேசப்பட்டது. அதை விடவும் தாய் மொழி மூலம் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்றவர்கள், பல்கலைக்கழகத்திலும் அம் மொழியிலேயே மேற்படிப்பைத் தொடர விரும்பினர்.

இதற்கும் மேலாகத் தாய்மொழி மூலம் பெரிய காரியங்களைச் செய்யலாம், செய்ய வேண்டும் என்றவாறான நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் எழுச்சி பெற்ற ஒரு காலமாக 1956க்குப் பிற்பட்ட காலம் இருந்தது. இது சிங்களத் தேசியத்தின் ஒரு முக்கியமான பண்பாக இருந்த அதேவேளை தமிழ்த் தேசியத் தலைமையின் அணுகுமுறை சற்று வேறுபட்டதாக இருந்தது.

ஆங்கிலத்தினிடத்தில் சிங்களம் ஆட்சி மொழியாவது பற்றிய அவர்களது அச்சங்கள் காரணமாகத் தமிழ்மொழியை நவீன கல்வித் தேவைகட்கேற்ற மொழியாக வளர்ப்பதை விடப் பழமை பேணும் நோக்கில் மொழித் தூய்மை பற்றிய அக்கறையையே அவர்கள் காட்டினார்கள். உள் மனத்தில் ஆங்கிலமே தொடர வேண்டும் என்ற ஆதங்கம் உயர் நடுத்தரத் தமிழரிடையே, குறிப்பாகப் படித்த மேல் தட்டு வர்க்கத்தினரிடையே கூடுதலாக இருந்தது. இவ் விடயம் பற்றிப் பின்னரும் எழுத நேரும் என்பதால் இப்போதைக்குப் பாடசாலைக் கல்வியின் பரவலாக்கம் பற்றிய விடயத்தைக் கவனிப்போம்.

இலவசக் கல்வி, கட்டாயமான பாடசாலைக் கல்வி என்ற கொள்கைகள் ஒரு சமூகத்தின் முழுமையான அங்கீகாரம் இல்லாமற் செயற்படுத்தக் கூடியனவல்ல. இதை நாங்கள் இலவசக் கல்வி முறை சட்டமாக்கப்பட்ட பின்பும் எத்தனை பேருக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது என்பதைக் கவனித்தாற் தெரிய வரும்.

இலவசக்கல்வி என்பது மலையகத்தைப் பொறுத்த வரை வெறும் கண்துடைப்பு மட்டுமே. தோட்டப் பாடசாலைகள் என்பன மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளை நிரந்தரமாகவே கூலிகளாக வைத்திருக்கும் நோக்கத்திற்காகவே நடத்தப்பட்டன. இதில் ஆசிரியர்களாக வந்தவர்களிற் பெரும்பாலோரின் அசட்டையான போக்கைத் தோட்ட நிர்வாகம் ஒரு போதுமே பொருட்படுத்தியதில்லை. மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளின் கல்வி உரிமையை மறுப்பதை இலகுவாக்கியது. தோட்டங்கள் பெரும் நிலப்பரப்பையொட்டி அமைந்துள்ளதோடு நகரங்களினின்றும் தூரத்தில் அமைந்திருந்ததால், விரும்பினாலுங் கூடத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளால் நகரில் உள்ள பாடசாலைகட்குப் போக அவர்கட்கு இயலாதிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆதிக்கஞ் செலுத்தி வந்த சாதியம் தாழ்த்தப்பட்ட சாதியினரின் குழந்தைகள் அடிப்படைக் கல்விக்கு மேல் முன்னேறாமல் தடுக்கத் தன்னாலான அனைத்தையும் செய்ததும் பல்வேறு சமூக நிர்ப்பந்தங்களும் ஆசிரியர்களதும் அலுவலர்களதும் உயர் சாதி மாணவர்களதும் சாதித் தடிப்பின் பயனான நிந்தனைகளும் போகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் படிப்பில் முன்னேறாமல் மறிப்பதற்கான பல வேறு கெடுபிடிகளும் நடைமுறையிலிருந்தன. இவற்றை எதிர்த்துப் போராடியே சாதியாற் பிற்படுத்தப்பட்ட மக்கள் தமது கல்வி வாய்ப்புக்களைப் பெற முடிந்தது.

1956க்குப் பின்பு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் சாதகமான ஒரு அம்சம் ஏதெனில் ஸ்ரீ.ல.சு.க அரசாங்கத்தில் தமிழ்த் தேசியவாதிகளாகத் தம்மைக் கூறிக் கொண்ட உயர் சாதிப் பிரமுகர்களின் செல்வாக்குக் குறைவாக இருந்ததாகும். இதைத் தாழ்த்தப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகளும் அவர்கட்கு ஆதரவான முற்போக்குச் சக்திகளும் பயன்படுத்தினார்கள். இதன் விளைவாகக் கல்வித் துறையில் வெளிவெளியாகச் சாதித் துவேஷம் காட்டுவது கடினமாயிற்று.

எனினும் சாதியாற் பிற்படுத்தப்பட்டவர்களது குழந்தைகள் உயர் சாதியினர் எனப்படுவோரின் குழந்தைகளுடன் போட்டியிடத் தடையாக அவர்களது குடும்பத்தினரின் பொருளாதார நிலைமை, பெற்றோரும் உறவினரும் கல்வியறிவு குறைந்தவர்களாக இருந்தமை, நல்ல பாடசாலைகளைத் தெரிந்து அனுமதி பெறுவதற்கு இருந்த சமூகத் தடைகள், அவ்வாறு நல்ல பாடசாலைகளிற் சேர்ந்த போதும் அவர்களை மேலும் பலகாலம் பின்தங்கிய நிலையில் வைத்திருக்குமாறு கட்டாயப்படுத்தின. எவ்வாறாயினும் 1956க்குப் பின்பு படிப்படியாக எழுச்சி கண்ட உரிமைப் போராட்டத்தின் பயனாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் குழந்தைகள் தமது கல்வி வாய்ப்புக்களைப் பெற இயலுமாயிற்று. எனினும் இன்றுங் கூடக் கடுமையான பாரபட்சம் பல இடங்களிலும் தொடர்கிறது.

**பேராசிரியர் சி. சிவசேகரம் (8)**

> **நமது கல்வித்திட்டம் எத்தகைய நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் அதன் சமூக இலக்கு என்ன என்பதையும் நாட்டின் அரசியல் தலைமைகளின் அரசியல் சிந்தனை ஊடே நோக்குவது அவசியம்**

சாதிப்பாகுபாடும், அப்பட்டமான கல்வியுரிமை மறுப்பும் இல்லாத சூழல்களிற் கூட உழைக்கும் மக்களின் குழந்தைகளின் கல்வியுரிமை முறையாகப் பேணப்பட்டதாகக் கூற முடியாது. எனினும் இலவசக் கல்வியும் தாய் மொழிக் கல்வியும் கீழ் நடுத்தர வர்க்கத்தினரில் ஒரு பகுதியினருக்கேனும் உயர் கல்வி வாய்ப்பையும் அதன் மூலம் உயர் உத்தியோக வாய்ப்பையும் பெற்றுத்தந்தன. அதை விடக் குறைவான அளவில் ஏழைப்பட்ட, பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்தோரும் கூலி உழைப்பையே ஆதாரமாகக் கொண்டவர்களும் 1956க்குப் பிற்பட்ட பத்தாண்டுகட்கேனும் கல்வி மூலம் சமூக மேம்பாடு காண இயலுமாயிற்று.

எவ்வாறாயினும் நமது கல்வித்திட்டம் எத்தகைய நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் அதன் சமூக இலக்கு என்ன என்பதையும் கவனித்தால் நமது நாட்டின் அரசியற் தலைமையின் அரசியற் சிந்தனையின் போதாமையையும் நாம் காணலாம்.

கல்வி வளர்ச்சி என்பது சமூகத்தின் தேவைகளுடன் இணையாது கல்விப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும் போது அது புதிய நெருக்கடிகளையும் கொண்டு வருகிறது. அது பற்றி இனிவரும் பகுதிகளிற் கவனிக்கலாம்.

# ஸ்டாலினைக் கண்டு அஞ்சுவோர் யார்?

'சோவியத் யூனியனின் தலைமையை ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்னர் மாபெரும் பயங்கரவாத ஆட்சி ஆரம்பமாகியது. கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிலிருந்த 139 உறுப்பினர் களில் 98 பேர் கொலை செய்யப்பட்டனர் கட்சியின் பேராசை பிடித்த அடக்கு முறையாளரின் ஆதிக்கம் நிலவியது. நாட்டில் பெரும்பன்மையான மக்கள் வறுமையில் வாடினர். உக்ரெயினில் பட்டினியால் லட்சக்கணக்கான மக்கள் செத்து மடிந்தனர். பல்லாயிரக் கணக்கான மக்கள் தடுப்புமுகாம் களுக்கு அனுப்பப்பட்டு கட்டாய வேலை வாங்கப் பட்டனர். அங்கேயும் பலர் இறந்தனர். ஸ்டாலினைப் போற்றும் தனிநபர் வழிபாடு ஊக்குவிக்கப்பட்டது. மக்கள் மூளைச்சலவை செய்யப்பட்டனர்.

20ம் நூற்றண்டின் மாபெரும் படுகொலைகள்:-

| | | |
|---|---|---|
| ரஷ்ய கம்யூ னிஸ்டுகளால் கொல்லப்பட்டோர் | - | 61900000 |
| சீனக் கம்யூ னிஸ்டுகளால் கொல்லப்பட்டோர் | - | 38700000 |
| ஜேர்மனிய நாஸிகளால் கொல்லப்பட்டோர் | - | 20900000 |
| ஜப்பானியர்களால் கொல்லப்பட்டோர் | - | 5900000 |

மேலே தரப்பட்ட மேற்கோள்கள் ஐரோப்பிய நாடுகளின் பாடசாலை மாணவர்களுக்கான வரலாற்றுப்பாட புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டவை. இங்குள்ள வரலாற்று பாட புத்தகங்களில் ரஷ்யாவைப் பற்றி வரும் அத்தியாயத்தின் பெரும்பகுதி ஸ்டாலினின் "சர்வாதிகார" ஆட்சியைப் பற்றி சொல்கின்றன. ஜனநாயகம் சுதந்திரம் என்றால் அது மேற்கு ஐரோப்பாவில் மட்டும் தான். கிழக்குஐரோப்பாவில் 1989 வரை(பேர்லின் மதில் உடைப்பு)சர்வாதிகார ஆட்சி நிலவியதாகத்தான் பாடசாலை மாணவர்கர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. அதிலும் ஸ்டாலின் என்றாலே ஒரு கொடுங்கோலன் ஹிட்லரைப் போல இலட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்தவன் என்று ஸ்டாலினுக்கு இன்னும் ஒரு படி முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. குருச்ஷேவின் ஆட்சி ஸ்டாலினை விட எவ்வளவோ பரவாயில்லை என்று சொல்லி தாம் நடுநிலை காப்பதாகக் காட்டிக் கொள்கின்றனர். இன்றும் கூட பாடசாலை பொதுப் பரீட்சைகளில் ஸ்டாலினின் கொடுமைகளை விபரிக்குமாறு கேள்விகள் கேட்கப் படுகின்றன. கிழக்கு ஜேர்மனிக்கு எப்போது ஜனநாயகம் வந்தது என்ற கேள்விக்கு 1989 என பதில் சொல்ல வேண்டும். இவற்றுக்கு மாறாக ஒரு பாடசாலை மாணவனோ அல்லது ஆசிரியரோ கதைத்தால் அவர்கள் சந்தேகத்தோடு பார்க்கப்படுகின்றனர். படுகொலைகள் பட்டினிச்சாவுகள் இவற்றை யாரும் ஆதரிக்க முடியாது என்று சொல்லி அடக்கப்படுகின்றனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ எதிர்ப்பு பிரச்சாரம் பாடசாலைகளிலேயே ஆரம்பிக்கின்றது. அது பின்னர் பத்திரிகை வானொலி தொலைக்காட்சி என விரிவுபடுத்தப்படுகின்றது. இந்தப் பின்னணியை வைத்துக்கொண்டு தான் நாம் ட்ரொஸ்கிஸ வாதிகளையும் நோக்கவேண்டியுள்ளது. ஸ்டாலினிஸ்டுகளை விட தாம் "தூய்மையானவர்கள்"



'இதுவரை சோஷலிசம் உலகில் எந்த நாட்டிலும் இருக்கவில்லை'. '1989ல் ஸ்டாலினிஸம் வீழ்ச்சியடைந்தது போன்ற கோஷங்களுடன் இவர்கள் தாம் தான் இனி நிஜமான சோஷலிசத்தை படைக்கப் போகும் உண்மையான மாக்ஸிஸ்டுகள் என கூறிக்கொள்கின்றனர். தம்மை ஸ்டாலினிஸ்டுகள் இல்லை என்று சொல்வதன் மூலம் கம்யூனிஸ எதிர்ப்பு பிரச்சாரத்தில் இருந்து தப்பிக்கொண்டாலும் எதிர்கால சோஷலிஸ கட்டுமானத்தைப்பற்றி என்ன சொல்கிறர்கள்?

சோஷலிசத்தை மேலேயிருக்கும் கட்சியினால் கிழேயுள்ள மக்களுக்கு திணிக்க முடியாது. அது அடிமட்டத்தில் இருந்து வரவேண்டும் என்று சொல்கின்றனர். ஆனால் பல்வேறு பிற்போக்கு கலாச்சாரங்களில் மூழ்கியிருக்கும் மக்கள் எப்படி சோஷலிசத்தை கண்டுபிடிப்பார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. அதேநேரம் ட்ரொஸ்கிஸ்டுகள் கூட கட்சிக் கட்டுப்பாடுகள் தனிநபர் அதிகாரத்தைப் பிரயோகிப்பதாகக் கூறி அதிலிருந்து விலகியோர் பலர் மேலும் 'பாட்டாளிவர்க்க சர்வதிகாரம்' என்பதை ஸ்டாலினிச சர்வாதிகாரத்துடன் ஒத்ததாக்க கருதியோ என்னவோ 'பாட்டாளிவர்க்க ஜனநாயகம்' என்ற சொல்லைப் பவிக்கின்றனர். இவர்களது பாட்டாளிவர்க்க ஜனநாயக ஆட்சியில் முதலாளிகளும் இருக்கலாம். இப்படிப் பட்ட கருத்துகள் இவர்களை சமூக ஜனநாயக வாதிகளின் பக்கம் கொண்டு வந்து சேர்க்கின்றது. ஆனால் ஐரோப்பாவில் ஏற்கனவே இருந்து வரும் சமூகஜனநாயக கட்சிகளின் ஆட்சியில் நாடு சுபீட்சம் அடையாததாலோ அல்லது மெல்லமெல்ல இடதுசாரி கொள்கைகளை சமூக ஜனநாயகக் கட்சிகள் கைவிடுவதாலோ ட்ரொட்ஸ்கிஸ வாதிகளால் மாக்ஸிஸ முலாம் பூசிய சமூக ஜனநாயக கொள்கைகளை பரப்பமுடிகின்றது. சமூக ஜனநாயக வாதிகளும் ஆரம்பகாலங்களில் மார்க்ஸிஸ்டுகளாகவிருந்து பாராளுமன்றப் பாதையை தேர்ந்தெடுத்தவர்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இவற்றை விட தாம் ஸ்டாலினிஸ்டுகள் இல்லை என ட்ரொட்ஸ்கிஸ்டுகள் சொல்வது தான் அவர்களை பிற கம்யூனிஸ்டுகளில் இருந்து வேறுபடுத்துகின்றது. ஆகவே ஸ்டாலினைப் பற்றி இவர்கள் எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றர்கள் என்று கேட்பது அவசியம். ஸ்டாலினின் பெயரைக் கேட்டாலே காததூரம் ஓடுபவர்கள் லெனினை போற்றி ஏற்றுக்கொள்கின்றனர். அதற்குக் காரணம் லெனின் எந்தவொரு அரசியல் கொலையும் செய்யவில்லை யென்றால் ட்ரொட்ஸ்கி லெனினோடு சேர்ந்து இருந்தது தான் காரணம். அப்படியாயின் ட்ரொட்ஸ்கி கொலையே செய்யாத சமாதான வாதியா? அதுவும் இல்லை. அக்டோபர் புரட்சியின் பின் சோவியத் யூனியனின் ஒரு சோவியத் (தொழிலாளர் பேரவை) அராஜகவாதிகளின் (அனார்க்கிஸ்டுகள்) கட்டுப்பாட்டில் இருந்தபோது அதை குண்டு போட்டு அழித்தது ட்ரொட்ஸ்கியின் உத்தரவின் பேரில் தான். ஆம் அப்போது செம்படையின் தளபதியாகவிருந்தவர் தான் ட்ரொட்ஸ்கி. இதையெல்லாம் ட்ரொட்ஸ்கிசவாதிகள் வசதியாக மறந்து விடுகின்றனர்.

புரட்சி தொடரும்

# ஏகாதிபத்தியமும் பெண்களும்



நோர்வேஜிய தொழியாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் (APK) தலைமைத் தோழரான கியர்ஸ்ற்ரி எரிக்ஸன் (KJERSTIO ERICSSON) எழுதிய "தோழர்கள் சகோதரிகள்" என்ற கட்டுரைத் தொடர் சென்ற இதழுடன் முடிவுற்றுள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

- ஆசிரியர் குழு -

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# இந்தியத் தேர்தலும் ஈழத்துக் கனவுகளும்

இந்தியத் தேர்தல் பற்றி இப்போது இங்கே கூடியளவு கவனம் திரும்பியுள்ளது. பாரதிய ஜனதா ஆட்சி மீண்டும் ஏற்படுவது தென்னிந்தியத் தேர்தல் முடிவுகளிற் பெருமளவும் தங்கியுள்ளது என்ற கருத்துப் பரவலாகவே உள்ளது. பாரதிய ஜனதா கட்சி தென்னிந்தியாவில் வேரூன்றியுள்ளதற்குக் காரணமான கட்சிகளே இன்று அக்கட்சியை என்றும் ஆட்சியில் அமர முடியாதபடி செய்ய வேண்டும் என்று பேசி வருகிறார்கள். பாரதிய ஜனதா கட்சி ஒரு மதவாத ஃபாஸியக் கட்சி என்பதும் அது இந்து உயர்சாதி நலன்களை முக்கியமாக பிராமணிய நலன்களை வற்புறுத்துகிற ஒரு கட்சி என்பதும் அதன் பின்னாலிருந்து இயக்கும் முக்கிய சக்தி ஆர்.எஸ்.எஸ் எனப்படும் இந்து குண்டர் படை என்பதும் பற்றி எவருக்கும் தெரிய வேண்டும். இது தென்னிந்திய அரசியல்வாதிகட்குத் தெரியாததல்ல.

இந்தியாவை அமெரிக்க மூலதன ஊடுருவலுக்கு ஆட்படுத்துவதில் ராஜீவ் காந்தியின் காலத்திலிருந்து காங்கிரஸ் ஆற்றிய பங்கைவிடப் பன்மடங்கு பெரிய பங்கை இந்துத்துவமும் கிறிஸ்துவ விரோதமும் பேசும் பாரதிய ஜனதா ஆற்றிவருகிறது. அமெரிக்காவின் ஏகாதிபத்திய எசமானர்கட்கு இதில் எதுவிதமான சங்கடமுமில்லை. ஏனெனில், எந்த வகையான ஃபாஸிஸமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு உடந்தையானது தான்.

ஆந்திர தேசியவாதத்தின் பேரில் மாநில ஆட்சியைப் பிடித்த தெலுங்கு தேசம் இப்போது அந்த மாநிலத்தை அமெரிக்க மூலதனத்தின் தொழிற் பேட்டையாக மாற்றுவதில் மும்முரமாக உள்ளது. அது போலவே தான். தி.மு.க பிரமுகரான காலஞ்சென்ற முரசொலி மாறனின் நிலைப்பாடும் இருந்தது. வை. கோபாலசாமியானாலும் கருணாநிதியானாலும் ராமதாஸானாலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரானவர்களல்ல. இந்த விடயத்தில் இவர்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் எள்ளவு வேறுபாடும் இல்லை. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கை உலகமயமாதலுக்கும் தேசிய பொருளாதாரச் சிதைவுக்கும் இட்டுச் செல்வது பற்றிக் கொள்கையளவிற் கூட இந்த மாநிலக் கடசித் தலைமைகட்கு மன வருத்தமில்லை.

இடதுசாரிகள் என்று கூறப்படும் இந்திய கம்யூனிஸ்ட்டுக்களும் அவர்களை விட மோசமாக இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக்களும் அயல் மூலதனத்தை வரவேற்பதற்கு வளைந்து கொடுக்க ஆயத்தமாக இருக்கிற போது மற்றக் கட்சிகளிடமிருந்து எதை எதிர்பார்க்க முடியும்? இந்தியாவின் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாகும் வரை இந்தக் கட்சிகள் எதையும் கண்டு கொள்ளப் போவது இல்லை. இக்கட்சிகளுக்கு எந்த விதமான மாற்றுவழி பற்றிய சிந்தனையும் இல்லை. அதனாலேயே தான் எதிரும் புதிருமான கொள்கையுடைய இந்திய அரசியற் கட்சிகளுடன் மாநிலக் கட்சிகளால் மாறி மாறிக் கூட்டணிகளை ஏற்படுத்த முடிகிறது.



ஈழத்துத் தமிழ் அரசியல் அவதானிகள் தமிழ் நாட்டு அரசியலையும் இந்திய அரசியலையும் பெருமளவுக்கும் ஈழத் தமிழ்த் தேசிய நலன்களை முன்னிறுத்தியே நோக்குவதால் கோபாலசாமி போன்றவர்கள் மீது அபார நம்பிக்கையும் அதே அளவுக்கு ஜெயலலிதா மீது வெறுப்பும் காட்டுகின்றனர். இந்தியாவின் அடக்குமுறைச் சட்டமான பொடா கொண்டுவரப்பட்ட போது அதற்குப் பெரும் ஆதரவு வழங்கிப் பாராளுமன்றத்தில் முழங்கியவர் கோபாலசாமி. அதே பொடாவை அவருக்கே மாறாகப் பாவித்தவர் ஜெயலலிதா. இருவருக்குமிடையில் என்ன வேறுபாடு?

இந்தியா இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் குறுக்கிட வேண்டும். கச்ச தீவை மீள எடுக்க வேண்டும் என்று கோபாலசாமி பேசி வருகிறார். ஜெயலலிதா மனதில் உள்ள குறுக்கீடு வேறு. ஆனால் இந்தியா குறுக்கிடுமானால் அது நிச்சயமாக கோபாலசாமி வேண்டுகிற விதமான குறுக்கீடாக இராது.

உண்மையில் பழைய திராவிட இயக்கத்திலிருந்து உருவான பாராளுமன்றக் கட்சிகளுக்கு மாநில சுயாட்சி என்பது தங்களது சிற்றரசுகள் மீது கருணையுடன் நடந்து கொள்ளும் இந்தியப் பேரரசு அதன் அண்டை அயல் நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு வல்லரசாக வேண்டும் என்ற ஆவல் மிகுதியாகவுள்ளது. அந்த அதிகாரத்தில் தாமும் பங்காளிகளாக வேண்டும் என்பதற்காகவே அவர்கள் பலவேறு கூட்டணிகளையும் அமைக்க உடன் படுகிறார்கள்.

தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க ஆகிய யாவுமே தமிழகத்தில் பாரதிய ஜனதா வேரூன்ற உதவிய கட்சிகள் தாம். ஜெயலலிதா காலத்திலிருந்து அ.தி.மு.க வெளிவெளியாகவே பாரதிய ஜனதாவுடனும் இந்துத்துவ சக்திகளுடனும் நல்ல உறவைப் பேணி வந்துள்ள கட்சி. அதே வேளை, பாரதிய ஜனதாவுடன் தமிழகத்தில் பெரிய சமரசங்களைச் செய்தவைதான் தி.மு.கவும், ம.தி.மு.கவும். இவர்களது



ஜெயலலிதாவின் அரசியல் அடாவடித்தனம் பகிரங்கமானதும் சிறு பிள்ளைத்தனமானதுமாகும். தி.மு.கவில் ஜனநாயகம் இருப்பதாகவோ அதில் அடாவடித்தனம் இல்லையென்றோ எவரும் கூற முடியுமா? கருணாநிதியின் குடும்ப அரசியலே தி.மு.க அரசியலாகியுள்ளது. குடும்பப் பூசல்களே உட்கட்சிப் பூசல்களாகும் அளவுக்கு வாரிசு முறையையும் அங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனவே கருணாநிதி இன்று அமைத்துள்ள கூட்டணி தன்னைப் பதவிக்கு மீட்பதற்காக மட்டுமே என்பதை நாம் மறக்கலாகாது.

ஜெயலலிதா பாரதிய ஆட்சியைக் கவிழ்க்க உதவியபோது. அக்கட்சியை மீள அரசபீடம் ஏற்றக் கைகொடுத்தவர்கள் தி.மு.கவினர். இன்று பாரதிய ஜனதாவைச் சாடுகிற தி.மு.க. ம.தி.மு.க, பா.ம.க யாவுமே நாளை இன்னொரு காரணங் கூறி பா.ஜ.கட்சியை ஆதரிக்கலாம் என்பதை யாரும் மறக்கலாகாது.

ஒத்துழைப்பு இல்லாமல் பாரதிய ஜனதா கட்சிக்குத் தமிழகத்தில் ஒரு அரசியல் தளம் உருவாகியிருக்க முடியாது.

ஈ.வே.ரா (பெரியார்) தலைமையில் கட்டியெழுப்பப்பட்ட சுயமரியாதை பகுத்தறிவு இயக்கங்களின் முக்கியமான சாதனைகளுள் பார்ப்பனிய மேலாதிக்கம் முறியடிக்கப்பட்டது ஒன்றாகும். சாதியத்தை எதிர்த்த பெரியாரால் சாதி அடிப்படையிலான அரசியல் விருத்தியடைவதற்கு எதிராக அதிகம் செய்ய இயலவில்லை. எனினும் மதப் பூசல்களும் சாதிப் பூசல்களும் பிற மாநிலங்களை விடத் தமிழகத்தில் ஓரளவு குறைவாக இருந்ததென்றால் அது பகுத்தறிவு இயக்கத்தின் பங்களிப்பின் பயனானது.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போது தன்னைத் தமிழக அரசில் நிலைநிறுத்தச் சமரசங்களுக்கு ஆயத்தமானதோ அப்போதே பிளவுகளும் சீரழிவும் வேரூன்றி விட்டன. அதன் பின்பு நடந்தது நாடறிந்த கதை.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# இந்தியா ஒளிர்கிறது

*தனது இருப்பை வெளிக்காட்ட
பகவான் பல அவதாரமெடுப்பதாய்ப்
புராணமுண்டு
மீன்......நரசிம்மம்...... வராகம்
இப்போது வாஜ்பாய்.*

*பகவான் இரண்டு அடியில்
உலகை அளந்தான்
வாஜ்பாயோ ஒரே பொய்யில் உலகை
அளக்கிறார்,
'இந்தியா ஒளிர்கிறது'*

*உண்மைதான்
ஐந்து கோடிக்கும் மேல்
இந்திய வேலைவாய்ப்பு அலுவலகத்தில்
பதிவு செய்து காத்திருக்கும் இந்திய
இளைஞர்களின்
வேதனைப் பெருமூச்சில்,*

*ஒருவேளை உணவுக்கும் கூட வழியின்றி
தெருவிலே வீசியெறியப்பட்டுள்ள
இருபத்தாறு கோடிக்கும் மேலான ஏழை
இந்தியர்களின்
வயிற்றெரிச்சலில்,*

*இதனினும் கொடுமையாக
பாதிக்கும் மேலாக வேலை இழந்து
பராமரிக்க வழியின்றி
கருவிலேயே கொலை செய்யப்படும்
ஏழை இந்தியர்களின் கர்ப்ப வெப்பத்தில்
இந்தியா ஒளிர்கிறது என்பது
உண்மைதான், உண்மைதான்.*

*நம் உயிராதாரமான பிரச்சினை விவசாயம்:
ஆனால், நாட்டில் இயங்க முடியாமல் கிடக்கும்
விளைநிலங்கள் அறுபத்தைந்து சதவீதம்.
நம் மானத்தின் இசை நெசவு:
ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்
ஓசையின்றி ஒடுங்கிக் கிடக்கும் தறிகளின்
எண்ணிக்கை
இரண்டு லட்சம்*

*வைப்பதற்குத் தீனியில்லை: மேய்ச்சலுக்கு
நிலமில்லை:
வாங்கி அய்ந்தாண்டுகளாகியும்
கன்று ஈனாத கறவை மாடுகள்.
இரண்டே ஆண்டுகளில்
இலட்சக்கணக்கில் சினைப்பிடித்து ஒடும்
ஹூண்டாய் கார்கள்.
வருணபகவானுக்கும் ஈரமில்லை:
வாஜ்பாய்க்கோ இதைப்பற்றிச் சிந்திக்க
நேரமில்லை:
இருந்தாலும், அடுப்பெரிக்க வழியில்லாத
குடும்பங்களிடம்
அவர் ஆறுதலாகச் சொல்கிறார் "இந்தியா
ஒளிர்கிறது"*

*இனிக்க இனிக்கச் செய்யப்படும்
"இந்தியா ஒளிர்கிறது" விளம்பரத்துக்கு
இரண்டே வாரத்தில் 400 கோடி*

*பத்து சதவீதம் பணக்காரர்களுக்கான
இந்தியா–
பகட்டாக ஒளிர்வது மட்டுமல்ல பிரச்சினை
அவர்கள்தான் மக்கள். அவர்களே தேசம்.
அவர்கள் சிரித்தால் நாடே சிரித்தமாதிரி
அவர்கள் அழுதால் நாடே அழுதமாதிரி.
சுருங்கச் சொன்னால்,
அவர்களையொத்த வாங்கும் சக்தி
இல்லாதவர்களே
மனிதக் குப்பைகளாய் மரித்துப் போங்கள்.*



*நீயே கடவுள் நீயே சகலமும் என
ஒளிர்கிற இந்தியாவைப் பார்த்து
நம்மையும் கன்னத்தில் போட்டுக்
கொள்ளச் சொல்கின்றன
காட்சி, செய்தி ஊடகங்கள்.*

*இனி, பன்னாட்டுக் கம்பெனிகளின்
விதைகளை
புணரத் தெரிந்த புத்திசாலியே விவசாயி:
எல்லா இறக்குமதிகளையும்
நக்கிப் பிழைக்க முடிந்தவனே
நாலும் தெரிந்த குடிமகன்*

*பன்னாட்டுக் கம்பெனிகள்
படைத்துத் தள்ளும் பொருட்களை
வாங்கி அனுபவிக்க வக்கில்லாதவன்
தென்னாடுடைய சிவனாயிருந்தாலும்
தீர்த்துக்கட்டு:தேவையில்லை.
இருப்பவனுக்கு இந்தியா ஒளிர்கிறது!
பசப்பில்லாமல் பட்டவர்த்தனமாக
அறிவிக்கிறது அவர்களின் இந்தியா.*

*இனி இப்படித்தானா? வேறு வழியே
இல்லையா?
பக்தி பரிகாரம் எதுவும் பலிக்காது இனி.
ஆட்டு ரத்தத்தை அப்படியே உறிஞ்சிக்
குடிக்கும் பூசாரியால்
ஆளும் வர்க்கத்தின் இரத்தத்தைக்
குடிக்க முடியுமா?
அதிர்ஷ்டக்கல் மாட்டிக் கொண்டால்
ஏகாதிபத்திய மலைகள் நொறுங்கிடுமா?*

*ஒரே வழி–
வெற்றி ரேகை
உழைக்கும் மக்களின்
உள்ளங் கைகளில் ஓடுகிறது,
ஓட்டுப் போடாதே புரட்சி செய்!
மக்கள் சர்வாதிகார மன்றங்களைக்
கட்டியமைப்போம் என்ற
மாற்றுத் திசையில் குவியட்டும் சக்தி!
உலக வங்கி அடிவருடிகளின்
உயிர் வரைக்கும் பறிமுதல் செய்யும்
இயக்கமாய் எழுந்து பாருங்கள்.
இப்போது–
இந்தியா பழிவாங்கும்*

**துரை.சண்முகம்.**

நன்றி: புதிய கலாச்சாரம.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பொதுத் தேர்தல் சில குறிப்புகள்

-நமது அரசியல் நிருபர்-

## தென்னிலங்கையின் தெரிவு

நடந்து முடிந்த தேர்தல் நாட்டுக்குத் தேவையற்றது என்பது நம்மிற் பலரும் ஏற்றுக் கொண்டது. எனினும் எல்லாராலும் அதைப்புறக்கணிக்க இயலவில்லை. இத் தேர்தலுக்குக் காரணமான பிரச்சனைகள் சனாதிபதி சொன்ன வற்றுள் எவையுமேயல்ல. அதே வேளை, இத்தேர்தல் தேவையில்லை என்பதற்காகப் பழைய பிரதமர் கூறுகிற காரணம் எதுவுமே செல்லாது, அவர் அமைதியை காக்கவும் பிரச்சனையைத் தீர்க்கவும் ஏதுவுமே செய்யவில்லை. சனாதிபதி நாட்டைக் காக்க வேண்டிப் பாராளுமன்றத்தைக் கலைக்கவுமில்லை.

இம் முறை சிங்களப் பேரினவாத ஊடகங்கள் யூஎன்.பி.க்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குமிடையே நடுநிலை பேணின. அரச ஊடகங்களின் கீழ்த்தரமான பிரசாரத்துக்கு ஈடு கொடுக்க யூஎன்.பி சார்பு தனியார் ஊடகங்கள் முன்வரவில்லை. எனவே பிரசாரப் போரில் ஜே.வி.பி. - ஸ்ரீ.ல.சு.க. கூட்டணி எப்போதுமே ஆதிக்க நிலையில் இருந்தது. எனினும் சென்ற தேர்தலில் இரண்டு கட்சிகளும் தனித்தனியே பெற்ற வாக்குக்களைக் கூட்டினால் வருகிற தொகையை அவர்களது கூட்டணி மீறவில்லை. இதற்கு ஜே.வி.பி.யை ஏற்காத ஸ்ரீ.ல.சு. கட்சி ஆதரவாளர்களது பங்களிப்பு ஒரு காரணம். அதைவிடவும், ஜே.வி.பியினர் பெற்ற தெரிவு வாக்குக்களின் அடிப்படையில் அவர்கள் கூட்டணயின் மொத்த வாக்குக்களில் 40ழ அளவிற் பெற்றுள்ளனர். இது எப்படி?

ஹெல உறுமய வேடத்தில் கேட்ட பிக்குமாரை முன்னிறுத்தி ஹெல உறுமய வென்றுள்ள ஆசனங்களின் தொகை பெரிதல்ல. எனினும் அவர்கள் பெற்ற வாக்கு விகிதம் பல விடயங்களை நமக்கு உணர்த்துகிறது. அவர்கள் ஆசனங்களை வென்ற மாவட்டங்களில் படித்த வசதிபடைத்த நடுத்தர வாக்கத்தினர் அதிகமாக உள்ள பகுதிகளில் அவர்கள் அதிக வாக்குக்களைப் பெற்று ஒரிடத்தில் யூஎன்.பியை விட அதிக வாக்குக்களைப் பெற்றுள்ளது. இது எப்படி?

இரண்டு பெரிய கட்சிகளையும் பற்றி மக்கள் மேலும் அதிருப்தியும் அவநம்பிக்கையும் அடைந்து வருகின்றர். இதன் விளைவாகவே, தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் விதமாவும் தாம் வழக்கமாக எதிர்த்து வாக்களிக்கும் கட்சியை ஆதரிக்காமல் மாற்று வழியாக, யூஎன்.பியின் ஆதரவாளர்கள் ஹெல உறுமயவுக்கும் ஸ்ரீ.ல.சு.க ஆதரவாளர்கள் ஜே.வி.பிக்கும் வாக்களித்துள்ளனர் என்றே தெரிகிறது. இதனால் யூஎன்.பி. நட்டப்பட்டது. ஆனால் ஸ்ரீ.ல.சு.கட்சியின் நட்டம் ஜே.வி.பியின் லாபமாகியது. கூட்டணிக்கணக்கிலும் சிறிய லாபம் கிட்டியது.

போர் நிறுத்தம் அமைதிப் பேச்சுக்கள் மக்கள் வறுமையிலிருந்து மீளத் தவிக்கிற அதே வேளை, கள்ளத்தனமகச் சம்பாதித்த பணத்துக்கு வரி விலக்கும் மன்னிப்பும் வழங்கியது போன்றவை தேர்தல் காலத்தில் யு.என்.பிக்கு மாறான உணர்வுகளை வலுப்படுத்தின.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் கடந்த காலத்தையோ ஜே.வி.பியின் அட்டகாசத்தையோ மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் அவர்கள் முன்னால் உருப்படியான மாற்றுவழி வேறு எதுவுமே இல்லை என்பது வருந்தத்தக்க உண்மை.

எவ்வாறாயினும் குறிப்பிடத்தக்க இன்னொரு விடயமும் நடந்துள்ளது.

> **தெற்கிலும் வடக்கிலும் தேர்தலில் நின்ற கட்சிகளின் கடந்த காலத் தவறுகள் மக்கள் விரோதம் துரோகம் என்பனவற்றை மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் மாற்று இல்லாமையால் வாக்களிக் நிர்ப்பத்திக் பட்டனர்.**

அயல் ஆதரவு என்ற கதை மட்டும் தேர்தலை வெல்ல உதவாது என்பது இனியேனும் யூஎன்.பி தலைமைக்கு விளங்குமோ தெரியாது. ஆனாலும் பொதுவான விலைவாசி உயர்வும் குறிப்பாக விவசாய உரங்களின் விலை உயர்வும் கிராமிய மக்களிடையே யூஎன்.பிக்கு மாறாக உணர்வுகளையே துண்டியுள்ளன. மக்களின் அன்றாட வாழ்வு பற்றிச் சிறிதேனுங் கவலை காட்டிய தலைவராக பிரேமதாசவுடன் இன்றைய தலைமையை ஒப்பிட்டு மக்கள் பேசிக்கொண்டதைப் பலர் வாயிலாகவும் கேட்க முடிந்தது. சாதாரண

இம்முறை பழுதாக்கப்பட்ட வாக்குக்களின் விகிதம் சராசரியா 6 சத வீதத்தை எட்டியுள்ளது. சில இடங்களில் பத்துச் சதவீதம் பழுதாக்கப்பட்டுள்ளன. சிக்கலான தோற்றமுள்ள வாக்குச் சீட்டுக்கள் அவை பழுதாக்கப்படும் வாய்ப்பை அளிக்கின்றன. எனினும் மிக நீளமான வாக்குச் சீட்டைக் கொண்ட அம்பாறையை விட அதிகமாக வேறு இடங்களில் கூடியளவு விகிதத்தில் வாக்குச்சீட்டுக்கள் பழுதாக்கப்பட்டுள்ளன. மூன்று சத வீகிதமானோராவது வேண்டுமென்றே பழுதாக்கினர் என்பது நம்பிக்கைக்கான ஒரு நல்ல அறிகுறி.

என்றைக்கு 15-20 சத வீகித மக்கள் தமது வாக்குச் சீட்டுக்களை வேண்டுமென்றே பழுதாக்குகிறார்களோ அன்றைக்குப் பாராளுமன்ற அரசியலுக்கு முழுக்குப் போட முழு நாடும் ஈயத்தமாக இருக்கும். எனினும் இந்த விரக்தியை ஒரு ஆக்கமான மாற்று வழியாகக் கட்டி யெழுப்ப இடதுசாரிகள் ஆயத்தமாக இல்லாது போனால், ஃபாஸிஸ சக்திகள் தான் தலைதூக்க நேரும்.

தேர்தல் வாக்களிப்பின் அடிப்படையில் நோக்கும் போது தென்னிலங்கை மக்களின் போரை நிராகரிக்கும் மக்களின் தொகை இன்னமும் பெரும் பான்மையாக உள்ளது. எனினும் போரை வெளிவெளியாக ஆதரிக்கிற வர்கள் கூடிய ஆதரவைப் பெறத் தொடங்கி விட்டதும் உண்மை. இன்னமும் பேரினவாத அரசியலே தெற்கில் ஆதிக்கஞ்செலுத்துகிறது. எனவே பாராளுமன்ற அரசியலை ஒதுக்கி வெகுசன அரசியலில் தென்னிலங்கை இடதுசாரிகள் தீவிரமாக ஈடுபட வேண்டிய நாளை மேலும் ஒத்திப்போட முடியுமா?

## தமிழ்த் தேசிய ஒற்றுமையும் வாக்களிப் பின் பாடங்களும்

புதிய ஜனநாயகக் கட்சி தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கோரிக்கை விடுத்திருக்கிறது. விடுதலைப் புலிகளே இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்க வேண்டும் என்ற கருத்தும் பரவலாகக் காதில் விழுந்தது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கூட இவ்வாறு கருத்துத் தெரிவித்ததற்குக் காரணமில்லாமல் இல்லை.

எனினும் மக்கள் போருக்கு எதிராகவும் சமாதான முயற்சிகட்கு ஆதரவாகவும் தமிழரின் ஒற்றுமையை எடுத்துக் காட்டவும் தமிழரசுக்கட்சியின் சின்னத்துக்கு வாக்களித்தனர். கள்ள வாக்குக்கள், மிரட்டல்கள் என்பன பற்றிய முறைப்பாடுகளில் எவ்வளவு உண்மை இருந்தாலும் பொதுவான போக்கை மீறி ஆனந்த சங்கரி வென்றிருப்பதோ ஈ.பி.டி.பி. மேலும் ஒரு ஆசனத்தை வென்றிருப்பதோ அசாத்தியம் என்றே கூறலாம்.



இவ்வளவு தூரம் ஏமாற்று நடப்பதாக முறைப்படுகிற ஆனந்த சங்கரியும், டக்ளஸ் தேவானந்தாளவும் தேர்தலுக்கு ஒரு வாரம் முன்பே தாம் ஒதுங்குவதாக அறிவித்திருந்தால் அது அவர்களது கூற்றுக்களுக்கு அதிக வலிமை தந்திருக்கும். அவர்களது நிலை, கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற விதமாகவே அமைந்தது. பாராளுமன்ற அரசியலில் அவர்கள் அளிக்கக் கூடிய பங்கு புறக்கணிக்கத்தக்கதாகி விட்டதற்கு அவர்களது கடந்த காலத் தடுமாற்றங்களும் ஒரு காரணம்.

அதேவேளை வடக்கில் கிழக்கில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காதது போன்று தேர்தல் தினத்தன்றும் வாக்களிப்பில் பெருமளவில் மக்கள் கலந்து கொள்ள வில்லை. பதிவுசெய்யப்பட்ட

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# ஹெல உறுமயவின் வரவு ஒரு அபாய அறிவிப்பு

அண்மைய தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஒன்பது ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் முக்கிய ஒரு இடத்தை வகிக்கின்றது. முற்றிலும் பௌத்தசிங்கள அடிப்படை வாதத்தை உள்ளீடாகக் கொண்ட இக் கட்சியில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட அனைவரும் மஞ்சள் காவியுடை தரித்த பௌத்த துறவிகளாவர். அவர்களில் ஒன்பது பேர் இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள். அவர்களது பொதுப் பதாகை இலங்கையில் தர்மராஜ்சியம் ஒன்றை உருவாக்குவது என்பதாகும். கௌதம புத்தர் தனது ஆட்சியுரிமை, அரண்மனை வாழ்வு ஆடம்பர ஆடை அணிகலன்கள் யாவற்றையும் துறந்து துறவியானார். தனக்கு மட்டும் ஈடேற்றம் தேடும் துறவியாகவன்றி ஒடுக்கப்பட்டு நலிவடைந்த அடி நிலை மக்களின் துன்பதுயரங்கள் கண்டு ஆழ்ந்து சிந்தித்து தனது சமூகச் சூழலில் சிந்தித்தவர். அத்துன்பங்களுக்கு மாற்று என சில கொள்கைகள் வழி முறைகளை முன்வைத்தவர் புத்தர். அவற்றை முன்னெடுத்துச் செல்ல உருவாக்கப் பட்டவர்களே பௌத்த துறவிகள் எளிமை, இனிமை, தூய்மை, அன்பு, பரிவு, புலனடக்கம், மனஒருமை போன்றக பௌத்த துறவிகளின் அடிப்படை இவற்றை உணர்த்துவதே அவர்களது மஞ்சள் காவி உடையும் அதனுடன் இணைந்த நடைமுறைகளும். வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டிய இத்துறவிகள் பௌத்தத்தினதும் புத்தரினதும் பெயரால் நடந்து கொள்ளும் முறைமைகள் அடிப்படையில் பௌத்ததர்மத்திகே விரோதமானதாகும். பீடாதிபதிகளான மகாநயக்கர்கள் வைத்திருப்பது அதி ஆடம்பர பென்ஸ் கார்களும் மாளிகை வாழ்வும் தான்.

இத்தகைய பீடங்களின் வழிவந்தவர்கள் தான் இன்று ஜாதிக ஹெல உறுமய என்ற பெயரில் பாராளுமன்ற ஆசனங்களை வென்று நிற்கிறார்கள். கடந்த பாராளுமன்றத்தில் ஒரு பௌத்த துறவி தெறிகில் இருந்து தெரிவானார். அவரது பேச்சுக்கள் இனவாதம் கடந்ததாகவும் மக்கள் நலன் சாந்ததாகவும் இருந்தது. ஆனால் அந்த பௌத்த துறவி அண்மைய தேர்தலில் தோல்வி பெற்றுள்ளர். அதேவேளை ஒன்பது பௌத்த துறவிகள் ஹெல உறுமய கட்சியில் வெற்றி பெற்று பாராளுமன்றம் புகுந்துள்ளனர்.

இவர்களது பாராளுமன்றம் பிரவேசம் இலங்கையில் பாராளுமன்ற அரசியலில் இருந்தது. இதே கட்சியின் பெயரை ஜாதிக ஹெல உறுமய என மாற்றி தேர்தல் சின்மாக சங்கும் வழங்கப்பட்டது. இவர்களுக்கு ஏற்கனவே இந்தியத் தூதரகம் முழுமையான ஆதரவும் அரவணைப்பும் அன்பளிப்புகளும் வழங்கி வந்தது அதன் நிழலில் பேரினவாதக் கூச்சல் செய்தனர். இந்தியப் பாணியில் பேரினவாதயாத்திரைகளும், கிறிஷ்தவ எதிப்புப் பிரச்சாரமும் முன்னெடுக்கப் பட்டன.



ஒரு அபாய அறிவிப்பு என்றே கூற வேண்டியுள்ளது. ஏற்கனவே பௌத்த சிங்கள அடிப்படை வாதத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டதே சிஹல உறுமய கட்சியாகும். திரக் கருணாரட்ணா, சம்பிக்கரணவக்க போன்ற பேரினவாதிகள் அதன் தலைமையில் இருந்தனர். அரசியல் கட்சியாகப் பதிவு பெற்று அம்பும் வில்லும் அதன் தேர்தல் சின்னமாகவும் காட்டியது.

அதேவேளை ஜே.வி.பி. யினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் முன்வைத்த புலிகள் விரோதப் பிரச்சாரங்களும் தீர்வு முயற்சிகளுக்கு எதிரான இனவாதமும் பௌத்த சிங்கள உணர்வுகளுக்குத் தீனிபோட்டன. நூற்றி ஐம்பது வரையிலான கிறிஷ்தவ ஆலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டதன் பின்னணி எத்தகையது என்பதை ஹெல உறுமயவின் வெற்றி வெளிச்சமிட்டுக் காட்டியது.

பேரினவாதம் நிறுவனப்படுத்தப்பட்டு வரும் போக்குகளை ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். இவ்வளவு விரைவாக பௌத்த சிங்கள அடிப்படை வாதமாக அது வளர்ந்துள்ளதை இப் பொதுத் தேர்தலில் காண முடிந்தமை சோகமானதாகும். பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் முதல் வடியினை ஹெல உறுமய பிரதிநித்துவம் செய்து நிற்கிறது. இரண்டாவது வடியினை ஜே.வி.பி. பெற்றுள்ளது. மூன்றாவது வடியினை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - ஐக்கிய தேசியக் கட்சியும் கொண்டுள்ளன.

அபாயம் எங்கிருந்து புறப்படுகிறது என்றால் இந்தியாவின் இந்துத்துவா ஃபாசிச சக்திகள் ஆர்.எஸ்.எஸ், பாரதிய ஜனதா உட்பட சங்கப் பரிவாரங்கள் போன்று பௌத்த சிங்களப் பேரினவாதம் ஃபாசிச வடிவத்தைப் பெறப் போகின்றது என்பதில் தான் பாராளுமகன்ற அரசியலும் அதற்குரிய ஆசனங்களுக்கான பரச்சாரங்களும் நாட்டை நாசகாரப்பாதையில் இழுத்து மட்டுமன்றி அதன் இயலாமையும் மக்கள் விரோதமும் இறுதியில் பௌத்த சிங்கள ஃபாசிச சக்திகளின் தோற்றம் வளர்ச்சிக்கே இட்டுச் சென்றுள்ளது. இதனையே ஹெல உறுமயவின் பாராளுமன்றப்பிரவேறம் எடுத்துக் காட்டி நிற்கிறது.

மேலும் அறுதிப் பெரும்பான்மை பற்ற பாராளுமன்ற அரசாங்கத்தில் இந்த ஒன்பது ஆசனங்களைக் கொண்ட ஹெல உறுமயவின் தீர்மானிக்கும் பாத்திரம் முக்கியத்துவம் பெறுகின்றது. அதன் செல்வாக்குச் செலுத்துதல்கள்

ஏற்கனவே வெளிப்பாடு அடைய ஆரம்பித்து விட்டது. அடத்து வரும் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஹெல உறுமய தனது பாத்திரத்தை உரியவாறு பயன்படுத்தவே செய்யும். அதற்கு உள்நாட்டு பேரினவாத சக்திகளும் இந்திய ஆளும் வாக்க இந்துத்துவா சக்திகளினதும் ஒத்துழைப் பும் வழிகாட்டல்களும் முன்னைய விடப்பலமானதாபவே இருக்கப் போகிறன.

எனவே அடுத்துவரும் நாட்களும் வாரங்களும் மாதங்களும் ஹெல உறுமயவின் நிலைப்பாட்டின் பிரதிபலிப்புக்களை எதிர் கொள்ளும் காலமாகவே இருக்கப் போகின்றன. எவ்வாறாயினும் அவை நாட்டிற்கும் மக்களுக்கும் சாதகமானவையாக நாட்டின்டாது. குறிப்பாக நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு என்பது கனவுலகத்தில் வைக்கப்படும் ஒன்றாவே இருக்கப் போகிறது. ஏனெனில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை. என்பதும் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்றும் ஹெல உறுமய நிலைப்பாடு கொண்டிருப்பதால் பிரச்சினைகள் சிக்கலடையவே செய்யும். அது மட்டுமன்றி அபாயக் கட்டங்கள் தோன்றவே செய்யும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கின் நெருக்கடியும் புலிகளின் நிலைப்பாடும்

## தேசியவாதத்திற்குள் பிரதேசவாதம் எவ்வாறு தோன்றியது?

- மோகன் -

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இன்று ஏற்பட்டுள்ள பிளவு கருணா என்ற ஒருவர் பற்றியதா, மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசத் தலைமையும் வன்னித் தலைமையும் முரண்படுவது பற்றியதா என்பது தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கட்கும் எதிர்ப்பாளர்கட்குமிடையே உள்ள விவாதத்தின் அடிப்படை வேறுபாடு.

கருணா எனப்படும் ஒரு தனிமனிதருக்கும் ஒரு இயக்கத்துமிடையிலான முரண்பாடு என்பதன் அடிப்படை துரோகத்துக்குத் துணைபோன ஒருவரைத் தனிமைப்படுத்துவதன் மூலம் முரண்பாட்டைத் தீர்க்க இயலும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலானது. மற்றது இம் முரண்பாட்டின்



அடிப்படை பிரதேசவாதம் என்று நிறுவித் தீர்வையோ முரண்பாட்டின் வளர்ச்சியையோ அந்த அடிப்படையில் மேலும் முன்னெடுப்பது.

எந்த அடிப்படையிலானது என்றாலும், இம் முரண்பாடு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு நல்லதல்ல. அதற்குப் பின்னால் வேறுசக்திகள் செயற்பட்டுள்ளதாகத் தெரிவது அமைதிப் பேச்சுவார்த்தைகட்கு உகந்ததல்ல. அது மட்டுமில்லாமல், அமெரிக்காவும் அதன் முகவராக அரசாங்கத்திற் செயற்பட்டு வந்த ஒரு அமைச்சரும் இதிற் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதும் அதற்கு அமெரிக்கத் தூதரகம் அளித்த வஞ்சகமான மறுப்பும் இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லவையல்ல. இதை வைத்துக் கிழக்கில் ராணுவம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடிவதும் போர் நிறுத்த உடன்படிக்கையின் மீறல் என்றவாறான பிரகடனங்கள் ஜனாதிபதி வாயிலாகவும் ராணுவ அதிகார பீடவாயிலாகவருவதும் இந்தியாவின் பிராமணிய நிறுவனங்களும் சிங்களப் பேரினவாத ஏடுகளும் இதையிட்டுக் கும்மாளமிட்டுச் சிரிப்பதும் இந்த நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு நேரடியான சவால்களையே அடையாளங் காட்டுகின்றன.

அமெரிக்காவையும் இந்தியாவையும் பற்றித் தயக்கமின்றி விமர்சிக்கும் தேவையைத் தட்டிக்கழித்த தமிழ்த் தலைவர்கள் இப்போது அமைதியைக் குலைப்பதிலும் விடுதலைப் புலிகளிடையே பிளவை ஊக்குவித்துப் போராட்டத்தைப் பலவீனப் படுத்துவதிலும் இருநாடுகளதும் பங்கு பற்றி இரகசியமாக ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் பகிரங்கமாகச் சொல்ல மறுக்கிறார்கள்.

எனவே இன்று ஏற்பட்டுள்ள பிளவின் பின்னணியில் கருணா என்பவரின் அதிகார வெறியும் சுயநலமும் அயல் ஊடுருவலும் ஒரு முக்கிய பங்கை ஆற்றியுள்ளன என்பதை மறுக்காமலே வேறு சில விடயங்களையும் கவனிக்க வேண்டியுள்ளது. கருணா மட்டக்களப்பு-வன்னித்தலைமை என்ற அடிப்படையில் கிளறிவிடுவது, பழகிப்போன, மட்டக்களப்பு, யாழ்ப்பாண முரண்பாட்டையே தான்.

யாழ்ப்பாண எதிர்ப்பு என்பது தமிழரசுக் கட்சி அன்று அம்பாறை உட்பட்ட, மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது செல்வாக்கை விரிவுபடுத்த முற்பட்ட போது தமது அரசியல் தளத்தைப் பேண விரும்பிய அரசியல் வாதிகளால் பாவிக்கப் பட்ட ஒரு ஆயுதம். தமிழரசுக் கட்சியால் எட்டப்பன் என்று பட்டஞ் சூட்டப்பட்ட போதும், பட்டிருப்புத் தொகுதியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள எஸ்.யூ.எதிர்மன்னசிங்கத்துக்கு இயலுமாயிருக்கச் சாதி அடையாளமும் பிரதேசவாதமும் அவருக்குப் பயன்பட்டன. 1977ல் செ.ராஜதுரையை ஓரங்கட்ட முயன்ற அமிர்தலிங்கம் பிரதேசவாதக் குற்றச்சாட்டுக்கு உட்படாமலிருக்கும் பொருட்டே காசி ஆனந்தனைப் பயன்படுத்தினார். ஆயினும் தமிழரசுக்கட்சியும் த.வி.கூட்டணியும் பற்றிய பிரதேசவாதக் குற்றச் சாட்டுக்கள் இடையிடையே எழுந்து வந்துள்ளன. ராஜதுரைக்கு எதிரான யாழ் பிரதேசவாதக் குற்றச் சாட்டையும் தமிழ்த் தலைமை யாழ்ப்பாணத்தவர்களிடமிருந்தது என்பதையும் தனக்கு வசதியாக இப்போது கருணா முன்வைக்கிறார். இது அவரது அரசியல் அவலத்தின் ஒரு அடையாளமே.

### கருணா என்பவரின் அதிகார வெறியும் சுயநலமும் அயல் அரவணைப்பும் பிரதேசவாதத்தின் மறைவில் படிந்துள்ளன

யாழ்ப்பாண எதிர்ப்பு என்பது யாழ்ப்பாண மக்களுக்கு எதிரான வெகுசன உணர்வு என்பது உண்மையல்ல. இது மத்தியதர, மேட்டுக்குடி வர்க்கங்களிடையே செயற்படுகின்ற ஒரு சிறு முதலாளியச் சிந்தனையின் அடையாளம் மட்டுமே. இதை யார் பயன்படுத்துகின்றார்கள், எப்போது பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கவனித்தால் இனவாதத்தைக் கிளறிவிடும் விஷமிகள் போன்று தமது சுயநலனுக்காகச் சமூகத்தைக் கூறுபோடுகிற ஆட்களே இதில் மும்முரமாக இருக்கக் காணலாம். வியாபாரம், உயர் பதவி, சமூக அந்தஸ்து, இப்போது என்.ஜி.ஓ. உத்தியோகம் போன்றவற்றுக்கான போட்டிகளின் போது தமது போட்டியாளர்களை ஓரங்கட்ட இனம், மதம், மொழி, சாதி, போன்று பிரதேசவாதமும் பயன்படலாம்.

மட்டக்களப்புத் தமிழரை முன்வைத்து ஆதாயம் தேடுகிறவர்கள் போல வன்னியிலும் திருகோணமலையிலும் மலையகத்திலும் பலர் இருந்து வந்துள்ளார்கள். இவர்களது பிரதேசவாதம் தங்களது சுயலாபத்தையே மையமாகக் கொண்டது. மட்டக்களப்பில் பல்கலைக்கழக உயர்பதவியை யாழ்ப்பாணத்தவரிடமிருந்து பறிப்பதற்காகச் சுவரொட்டிகளை மாணவர்களைக் கொண்டு எழுதுவித்த மனிதசமத்துவம் பேசும் பேராசிரியர் பற்றியும் அறிவோம். தன்னையும் ஒரு விமர்சகர் என்று யாருமே ஏற்காததற்காக யாழ்ப்பாணத்தவர்களது திமிரை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்த ஒரு எழுத்தாளரை அறிவோம். மலையக அடையாளத்தை வற்புறுத்துவதாகப் பேசிக் கொண்டு மலையகத் தொழிலாளரைக் கடுமையாக ஏய்த்துச் சுரண்டுகிறவர்கள் பற்றி ஏதுவுமே எழுதாமல் யாழ்ப்பாணத்து வாத்தியாரை ஒரு பிடிபிடிக்கிற மலையக இலக்கியச் செம்மல்கள் போல எல்லாத் துறைகளிலும் தம்மை உயர்த்துவதற்காகப் பிரதேச வாதத்தைத் துணைக்கழைக்க நிறையப் பேர் உள்ளனர்.

யாழ்ப்பாண மேலாதிக்கம் பற்றியும் யாழ்ப்பாணத்தவரது திமிரும் வஞ்சகமும் பற்றிய கருத்துக்கள் யாவும் அடிப்படையோ ஆதாரமோ அற்றவையல்ல. ஒரு சுரண்டும் வர்க்கம் தனது சாதிய மேம்பாட்டைப் பறை சாற்றிக் கொண்டு அரசாங்க உத்தியோகம், கல்வித்துறை, வணிகம் போன்ற துறைகளில் தான் செயற்படும் பிரதேச மக்கள் பற்றிய அக்கறையோ மதிப்போ இல்லாமல் நடந்து கொண்ட ஒரு காலம் இருந்தது.

தோட்டப் பாடசாலை ஆசிரியரோ, யாழ்ப்பாணத்து மேலாதிகாரியோ, யாழ்ப்பாணத்து வியாபாரியோ நேசத்துக்குரிய மனிதர்களாக இருந்திருக்க அதிகம் இடமில்லை. ஆனால் அவர்கள் தான் யாழ்ப்பாணத்து மக்களை அடையாளப் படுத்துவோர் என்று கூற இயலுமா? அவர்கள் வாழ்ந்த காலம் இப்போது இல்லை. கடந்த அரை நூற்றாண்டுக்குள், அதிலும் முக்கியமாகக், கடந்த கால் நூற்றாண்டுக்குள் யாழ்ப்பாண மக்களின் வாழ்நிலை வெகுவாக மாறி விட்டது. இதைக் கணிப்பில் எடுக்காமல் யாழ்ப்பாணத்தவர் பற்றிய ஒரு படிமத்தை இன்னமும் சிலர் வற்புறுத்துவது ஏன்?

யாழ்ப்பாணத்தவரின் திமிர் என்பது ஒரு வர்க்க நிலைப்பாடு சார்ந்தும் சாதி அதிகார நிலை சார்ந்தும் அமைந்த ஒரு விடயம். சாதிக்குள் சாதிபார்த்தும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே பிரதேச வேறுபாடு பாராட்டுவதுங் கூட அதனுடன் ஒட்டியவை. யாழ்ப்பாணப் பழமைவாத அரசியலுக்கு அதிற் பெரியதொரு பங்குண்டு. ஆனால் இன்று யாழ்ப்பாணச் சமுதாயம் என்ன நிலையில் உள்ளது?

இன்று இந்த மண்ணில் நிலைத்து நின்று போராடுபவர்கள் யார்? 'யாழ்ப்பாணியம்' என்று அடையாளங் காணப்பட்ட



திமிரும் சுயநலமும் கொண்ட ஒரு வர்க்கத்தினரா? அவர்களிற் பெரும்பாலானோர் கடல் கடந்து வெகுதூரம் போய்விட்டார்கள். அவர்களில் எஞ்சியுள்ளவர்களிற் பலரும் குடாநாட்டுக்கு வெளியே தான் வாழ்கிறார்கள். இந்த மண்ணில் வாழ இடமில்லாமல் இந்தியாவில் அகதி முகாங்களில் வாழ்வோர் வேறு வகை. அவர்கள் நாடு திரும்பத் துடிப்பவர்கள். இலங்கையுள் அகதி முகாங்களில் வாழ்பவர்களும் அவர்கள் போன்றவர்களே. இவ்வகையானவர் களிடம் யாழ்ப்பாணத் திமிரும் யாழ்ப்பாண மேலாதிக்க உணர்வும் உண்டா?

உண்மையில் யாழ்ப்பாண விரோதம் என்பது இப்போது சாரமற்ற ஒரு வரலாற்று எச்சம். அதைப்

11ம் பக்கம் பார்க்க...

# பறைமேளக் கலையைப் பாதுகாப்பது யார்?

## அன்புமணியின் சாதிய வக்கிர நோக்கு

"பறைமேளக் கலைஞர்கள் பறையடிக்கும் தொழிலை விட்டுவிட வேண்டுமென அண்மைக் காலமாக பறையர் சமூகத்தில் உள்ள சில இளைஞர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இது அடிப்படையான உண்மைகளை ஆராயாமல் மேலெழுந்த வாரியாக நோக்கிய தாழ்வுச் சிக்கலின் உணர்வு என்பது வெளிப்படை".

இவ்வாறு தொடங்கும் ஒரு கட்டுரையை அன்புமணி என்பார் மல்லிகை சஞ்சிகையின் மார்ச் 2004 இதழில் எழுதியுள்ளார். கலைகளுக்கும் சாதிகளுக்கும் சம்மந்தமில்லை" என்ற மலட்டுத்தனமான கட்டுரையை மல்லிகை வெளியிட்டிருப்பது ஆச்சரியமன்று. ஏனெனில் ஏற்கனவே இலக்கிய விபச்சாரம் புரிவதில் மல்லிகை தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளமை கவனத்திற்குரியதாகும். அந்த வகையில் அன்புமணியின் சாதிய வக்கிரக் கட்டுரைக்கு மல்லிகை பக்கங்கங்கள் வழங்கியுள்ளமை "முற்போக்கு?" இல்லை எனக் கூற முடியாது.

அக் கட்டுரையில் அன்புமணி மூன்று முக்கிய கேள்விகளை முன்வைக்கின்றார்.

1. பறை அடிப்பதை நிறுத்தி விட்டால் இச் சாதியை உயர்ந்த சாதி என மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? அல்லது பறையர் என்ற சாதிப் பெயர் மறைந்து விடுமா?
2. 'பறையர்' என்ற சாதியை "தாழ்ந்த சாதி'' என்று ஏன் கொள்ள வேண்டும்? ஏனைய சாதிகளான 'வேளாளர்' முக்குவர் கரையர் சர்மா, நாயுடு முதலி நாடார் என்பது போல் அதையும் ஒரே சாதியாகக் கொள்ளலாம் அல்லவா?
3. சமூக மட்டத்தில் இவர்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் களை யப் போராடுவதை விடுத்து பறையடிப் பதை நிறுத்த வேண்டும் என்று போராடு வது எந்த வகையில் நியாயமாகும்.?

இம் மூன்று கேள்விகளுடன் தனது சாதியக் கலை நியாயத்தை முன்னிறுத் திச் செல்லும் அன்பு மணி தனது முதலாவது கேள்வி மூலம் பறையர்களே நீங்கள் மேளம் அடிப்பதை நிறுத்தி விட்டால் உயர்சாதியாகி விட முடியுமா? என நளினம் கலந்து சாதியக் குரலில் கேட்டுப் பறையர் பறையர் தான் என்பதை உறுதிப்படுத்திக் கூறுகிறார்.

இரண்டாவது கேள்வியில் நீங்கள் ஏன் உங்களைக் குறைந்த சாதியினர் எனக் கொள்ள வேண்டும். அதாவது உங்களை உயர்ந்த சாதியென நினைத்துக் கொண்டு பறை மேளங்களை அடித்தால் என்ன என்று சாதி இருத்தலுக்கு நியாயம் கற்பிக்கின்றார்.



மூன்றாவதாக நீங்கள் பறையடித்துப் பாரம்பரிய சாதிய வட்டத்தைப் பாதுகாக்க வேண்டுமே தவிர அதனை நிறுத்தும் படி கோராது ஏதாவது குறைநிறை இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்ய மிகப் பணிவுடன் முன்வரவேண்டும் என்றே கூறுகிறார். இந்த அன்பு மணியார்.

இந்தக் குரல் வடக்கில் இருந்து வந்திருந்தால் ஆச்சரியப்படுவதில் அர்த்தமிருக்காது. ஆனால் சாதியம் நெகிழ்வுடன் இருப்பதாகக் கூறப்படும் கிழக்கிலங்கையில் இருந்தல்லவா ஒலிக்கின்றது. சாதியச் சிந்தனையும் செயலாற்றும் திறனும் அங்கும் காணப்படுவதை அன்பு மணி பறையடித்துக் கூறுகிறார்.

மேலும் அக் கட்டுரையில் பறை மேளக் கலையின் வரலாறு, மகத்துவம், மேன்மை என்பனவற்றையும் அதன் சங்ககாலத் தொடர்ச்சி பற்றியும் விளக்கி கூறும் அவர் அப்பறை மேளக் கலையை பல மட்டங்களிலும் பாதுகாக்க வேண்டும் எனக் கூறி கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கும் வேண்டுகோள் விடுக்கிறார்.

பறைமேளக் கலையின் சிறப்புப் பற்றியும் தமிழர் வாழ்வில் அதன் முக்கியத்துவம் பற்றியும் அவர் கூறுவதில் சில நியாயங்கள் இருக்கின்றன. ஆனால் அதற்கும் அப்பால் அக் கலையை பறையர் சமூகம் என்ற சாதிய வட்டத்தினர் மட்டுமே பாதுகாத்துப் பேண வேண்டும். அதற்கு ஏனையோர் ஆதரவு வேண்டும் என்று வற்புறுத்துவதில் தான் அவரது சாதியக் கருத்தியலும் சிந்தனை யூற்றும் வெளிப்படுகின்றது.

தொடர்ச்சி 12ம் பக்கம்..

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# பொது வேலைத்திட்டத்தின் கீழ் பங்களாதேஷ் மக்களின் போராட்டம்

பங்காளதேஷில் அரச எதிர்ப்பு வெகுஜனப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் உக்கிரமடைந்துள்ளன. இதற்கு அடிப்படையாகவும் தூண்டுதலாகவும் இருப்பது பங்காளதேஷ் தேசிய விடுதலை அமைப்புச் சபை (Bangladesh National Liberation Organizing Council) ஆகும். இச்சபை பதுர்தீர் ஓமர் என்ற மாக்ஸிய புத்திஜீவின் முயற்சியிலும் அழைப்பிலும் 24 ஒக்டோபர் 2003 இல் அமைக்கப்பட்டது.

பங்காளதேஷின் மாக்ஸிய, இடதுசாரி முற்போக்கு ஜனநாயக அமைப்புகளிலிருந்து 1800 பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில் உண்மையான மக்கள் ஆட்சியை அமைப்பதற்காக தொழிலாளர்கள் விவசாயிகளையும் முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் ஐக்கியப்படுத்தி நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அம்மாநாட்டில் 700 பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

அந்நாட்டில் மாக்ஸிய லெனினிசக் கட்சிகளினதும், இடதுசாரி அமைப்புக்களினதும் எண்ணிக்கை அதிகம். அவற்றிடையே பிளவுகளும் முரண்பாடுகளும் அதிகமாக இருந்தன. அவ்வமைப்புகளையெல்லாம் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கும் முயற்சியாகவே பங்காளதேஷ் தேசிய விடுதலை அமைப்புச் சபையின் தோற்றம் அமைகிறது. இரண்டு முதலாளித்துவ கட்சிகளுக்கு சவாலாக இவ்வமைப்பு மக்களை அணிதிரட்டும் நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. அவ்வமைப்பின் உடனடி வேலைத்திட்டம் பின்வருமாறு :-

1. ஏகாதிபத்திய சக்திகளும், அவர்களின் கைக்கூலிகளும் வைத்திருக்கும் சொத்துக்களை பறிமுதல் செய்தல்.
2. சிறு உற்பத்தியாளர்களினதும் இடைத்தர விவசாயிகளினதும் நிலங்களை தவிர ஏனையவர்களின் நிலங்களை தேசிய மயமாக்குதல். நிலச்சீர்திருத்தத்தை ஏற்கும் பெரு விவசாயிகளினது நிலவுடமையை கட்டுப்படுத்தி அந்நிலங்களில் வாரத்திற்கு 48 மணித்தியாலத்திற்கு மேல் வேலை செய்பவர் களுக்கென அமைக்கப்படும் கூட்டுறவு சங்கங்கள் அவர்களின் வேதனத்தை தீர்மானிக்கும்.
3. மலைப்பிரதேசங்களில் வாழும் ஆசிவாசிகளுக்கும் ஏனைய சிறுபான்மையினர்களுக்கும் அவர்கள் வசிக்கும் நிலத்தை ஆட்சியுரிமையின் அடிப்படையில் சொந்தமாக்கிக் கொடுப்பது.
4. பெரிய தொழிற்துறைகளை தேசியமயமாக்கி அவற்றை அவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு நடத்துவது.
5. வேலை செய்யக் கூடிய அனைவருக்கும் முழுமையான வேலை வாய்ப்பை உறுதி செய்வது. ஊனமுற்றோர், முதியோர்கள், வீடற்றவர்கள் ஆகியோரின் மீதான அரசின் பொறுப்பை உறுதி செய்தல்.
6. தேசிய இனம், மதம், மொழி போன்றவற்றினிடையே பாரபட்சமின்றி அனைவரினதும் ஜனநாயக, சமத்துவ உரிமைகளை உறுதி செய்தல் மதங்களை அரசியலுக்காக பயன்படுத்தப்படும் சகல நடவடிக்கைகளும் தடை செய்யப்படும்.
7. சமூக, அரசியல், பண்பாட்டு, சம்பள ரீதியாக நிலவும் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் ஒடுக்குமுறைகளை அகற்றுதல்.
8. சகலருக்கும் இலவசக் கல்வியை உறுதி செய்யும் வகையில் நாட்டின் கல்விமுறையை தேசிய மயமாக்குதல்.
9. தேசிய மரபுசார் பண்பாட்டிலுள்ள மனிதாபிமான முற்போக்கு கூறுகளை பாதுகாத்து அதே வேளை அதிலுள்ள பிற்போக்கு பண்பாட்டு அம்சங்களை வேருடன் அழிப்பது, சகல விதமான ஏகாதிபத்திய பண்பாட்டையும் எதிர்ப்பது.
10. எல்லாருக்கும் இலவச சுகாதாரமும் மருத்துவமும் உறுதி செய்யப்படும்.
11. சூழல் மாசடைவதை தடுத்து நிறுத்தல்.
12. சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களை திருப்பி அழைக்கும் உரிமையை கொண்ட கீழ் மட்டம் முதல் மேல்மட்டம் வரையான நிர்வாக முறைக்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்தல்.
13. சர்வதேச ரீதியாக ஜனநாயக சக்திகளையும் புரட்சிகர சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது.



மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தற்போது நடைமுறையில் இருக்கும் பங்காளதேஷ் அரசியலமைப்பு இடமளிக்கப் போவதில்லை. அதற்கு உட்பட்ட அரசியல் நடவடிக்கைகளால் இந்நோக்கங்களை எய்த முடியாது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மக்களுடைய போராட்டங்களினூடாக மக்களின் அதிகாரத்தினூடாக புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்காளதேஷில், இடதுசாரி கட்சிகள், ஜனநாயக அமைப்புகள் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளாலும் இந்திய மேலாதிக்கவாதிகளாலும் என்.ஜீ.ஓக்களாலும் சீரழிக்கப்பட்டன. தற்போது ஒரு பொதுவேலைத்திட்டத்தின் கீழ் சகல இடதுசாரி, ஜனநாயக ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றிணைத்து அமைக்கப்பட்டிருக்கும் பங்காளதேஷ் தேசிய விடுதலை அமைப்புச் சபை ஆரோக்கியமானதாகவே தெரிகிறது.

இது தென்னாசிய நாடுகளுக்கு குறிப்பாக இலங்கைக்கு முன்னுதாரணமாகவும் ஆதாரமாகவும் இருக்கும் என்று நம்பலாம்.

## கிழக்கின்

10ம் பக்க தொடர்ச்சி..

பயன்படுத்து வோர் தமது அரசியல் வங்குறோட்டுத் தனத்தையே புலப்படுத்துகின்றனர். என்றாலும் பிரதேசவாதம் என்பது இல்லாதொழிந்து விட்டது என்று நாம் கூறமுடியுமா?

எவ்வாறு வடக்கில் இடதுசாரிகளை ஓரங்கட்டத் 'தமிழ் உணர்வும்', 'தமிழர் ஒற்றுமையும்' பயன்பட்டனவோ அவ்வாறே மலையகத்திலும் பிரதேச உணர்வு பயன்பட்டுள்ளது. இன்று மட்டக்களப்பில் அது மீளவும் தலை தூக்குகிறது. கருணாவுக்கு ஆதரவான ஒரு குறிப்பிடத்தக்க தொகையினர் இருக்கின்றனர். கருணாவுக்கு ஆதரவானவர்கள் அதிகளவு விருப்பு வாக்குக்களை வென்றுள்ளனர் என்பதை கருணாவிற்கு அஞ்சியே அது இடப்பட்டது என்று தட்டிக்கழிக்க முடியாது. அப்படியானால் பிற மாவட்டத் தேர்தல் முடிவுகளையும் அவ்விதமாகவே நோக்க வேண்டிநேரிரும்.

தமிழ்த் தேசியவாதம் தமிழ் மக்களைச் சாதி, மத, பிரதேச வேறுபாடு கடந்து ஒன்றுபட வைத்துள்ளது என்பது இன்று பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது. இன்றுவரை எட்டப்பட்ட ஒற்றுமை பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு போராட்டச் சூழலில் ஒரு சமூகமாக வாழ்வதற்கான தேவையின் விளைவாக ஏற்பட்ட ஒற்றுமையாகும். ஆயினும் அதனாற் சாதியத்துக்கு எதிராக எதுவும் செய்ய இயலவில்லை. பிரதேச வாதத்தை அதனால் முறியடிக்க இயல வில்லை. விடுதலைப் புலிகளின் அணியிலிருந்தே அது எழுவது இயலு மானால், அதன் தாக்கம் கருணாவின் அரசியல் முடிவிற்குப் பின்னும் தொடரும் என்பதை யாரும் மழுப்ப இயலாது.

இத் தேர்தலில் விடுதலைப் புலிகள் தம்மைத் தொடர்பு படுத்திக் கொண்டதன் விளைவாகத் தமிழ் மக்களுடைய போராட்டத்துக்கும் சமூக நலன்கட்கும் விரோதமான சக்திகட்கே அவர்கள் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். சில காலம் முன்னரே விடுதலைப் புலிகளாலும் மக்களாலும் முற்றாக நிராகரிக்கப்பட்டவர்கள் இப்போது அவர்களுடைய ஆசியுடன் உலா வர இயலுமாகிறது. ஊழற் குற்றச்சாட்டுக்கு உட்பட்ட பிரமுகர்கள் கூட மக்கள் பிரதிநிதிகளாக வர வேண்டி இத் தேர்தலில் மக்கள் ஒன்று பட்டு வாக்களித்துள்ளனர்?

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு ஒருவர், பெண்கள் சார்பாக இருவர் என்ற விதமாகப் பாரளுமன்றத்துக்கு அனுப்பப்படும் பிரதிநிதிகள் மூலம் சாதியமோ ஆணாதிக்கமோ முறியடிக்கப்படப் போவதில்லை. அதற்கான அரசியல் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இது வரை அமைய வில்லை. இன்னுஞ் சொல்வதானால் இன்று வரையிலான விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பான ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் நலனை இப்போராட்டம் முதன்மைப்படுத்தத் தவறிவிட்டது என்ற வருந்தத்தக்க உண்மையையே இப்போது நடந்து முடிந்த தேர்தலின் வேட்பாளர் பட்டியல் நமக்கு எடுத்துரைக்கிறது. வென்றவர்கள் போகப் பழமை வாதியும் இன்றுங் கூடப் பொன்னம்பலம் இராமநாதனின் துரோகத்தையும் சாதிய, ஆணாதிக் அரசியலையும் நியாயப்படுத்துகிற ஈழவேந்தன் பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர்தான் விடுதலை இயக்கத்தின் குரலாக மக்களுக்காக ஒலிக்கப் போகிறாரா?

எந்த அரசியல் நடவடிக்கையும் அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டும். எந்த ஒரு அரசியல் இயக்கமும் எடுக்கும் முடிவுகள் அதன் வர்க்க நிலைப்பாட்டிலிருந்தும் சமூகப் பார்வையிலிருந்தும் சுயாதீனமானவையல்ல. விடுதலைப் புலிகளைப் பாராளுமன்ற அரசியல் சேற்றுக்குள் இழுத்து வந்துள்ள சக்திகள் அதன் மூலம் தமது வர்க்க நலன்களை முன்னெடுக்க முயல்கின்றன. அதற்கு இடங்கொடுத்த தன் விளைவுகட்கு விடுதலைப் போராட்டம் விரைவில் முகங்கொடுக்க நேரிடும்.

பாரளுமன்ற ஆசனக் கணக்குக்களை வைத்து விடுதலைப் போராட்ட அரசியலை முன்னெடுக்க இயலாது என்பது வரலாறு தரும் பாடம். முன்னது பல விதமான தரகு வேலைகளையும் சமரசங்களையும் சந்தர்ப்பவாத அணுகுமுறைகளையும் வேண்டி நிற்பது. பின்னது மக்களைச் சார்ந்து அவர்களையும் அவர்களது பலன்களையும் முதன்மைப்படுத்துவது. சாதி, மத, பிரதேச, வேறுபாடுகள் யாவும் பாராளுமன்ற வாக்கு வங்கிக் கணக்குகளைக் கொண்டு செயற்படுகின்றவை. அவற்றை மறுதலிப்பது விடுதலையின் அரசியல். அது வர்க்க, சாதி, மத, பிரதேச, தேசிய, மத, பால், வேறுபாடுகளின் அடிப்படையிலான சமூக அநீதிகளை எதிர்த்து நிற்பதன் மூலம் தன்னை வலுப்படுத்திக் கொள்வது. எனவே தான் இன்றைய நெருக்கடியை விடுதலைப் புலிகள் எவ்வாறு தீர்த்தாலும் அதன் பின்விளைவுகள் எளிதில் இல்லாமற் போய்விடமாட்டா.

பிரதேச வாதம் ஆயுதங்கள் மூலம் தீர்க்கக் கூடிய முரண்பாடல்ல. அதைத் தீர்ப்பதானால் தமிழ்த் தேசிய அரசியல் தனது அக முரண்பாடுகள் பற்றிய ஒரு தெளிவான பார்வையைப் பெற வேண்டும்.

பிரச்சனைகள் எதுவுமே புறக்கணிப்பதன் மூலம் இல்லாது போவதில்லை. விடுதலைப் புலிகளின் இன்றைய நெருக்கடியின் தீங்கான பக்கம் ஒன்று உண்டு. அதே வேளை ஒரு நல்ல பக்கமும் உண்டு. இந்த நெருக்கடி விடுதலைப் போராட்டமும் மக்கள் மத்தியிலான முரண்பாடுகளும் பற்றிய ஒரு மீளாய்வுக்கும் அதன் மூலம் விடுதலைப் போராட்டத்தைச் சனநாயகப் படுத்து வதற்கும் கொண்டு செல்லுமாயின் அது இன்றைய நெருக்கடியின் சாதகமான ஒரு அம்சம். நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதை அது தெளிவுபடுத்துமாயின், அதுவும் சாதகமான ஒரு அம்சமே. விடுதலைப் போராட்டம் தனது இலக்குகளை மீளவும் ஆராய்ந்து தன்னை நெறிப்படுத்த இந்த நெருக்கடி உதவுமானால் அதன் இழப்புக்களை விட நற்பயன்கள் அதிகமாய் அமையும். மாறாகப் பழைய தவறுகள் தொடர அனுமதிக்கப்பட்டால் அது மேலும் புதிய நெருக்கடிகட்கே இட்டுச் செல்லும். ●

## ஈழத்துக் கனவுகள்

8ம் பக்க தொடர்ச்சி..

இலங்கையில் வாழும் தமிழரிடையே தமிழக அரசியற் கட்சிகள் பற்றிய மனோரீதியானப் படிமங்கள் நீண்டகாலமாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. தேசிய இனப்பிரச்சினை போராக மாறிய பின்பு தமிழகத்தின் ஒவ்வொரு பெரிய கட்சியும் இலங்கைத் தமிழரை ஒவ்வொருவிதமாக ஏய்த்தே வந்துள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திய மாக்ஸிஸ்ட் கட்சியும் இலங்கைத் தமிழ் மக்களுக்குத் துரோகமாகவே நடந்து வந்துள்ளன. மாக்ஸிய லெனினியவாதிகள் மட்டுமே தெளிவான உறுதியான நிலைப்பாட்டை எடுத்துக் குறுகிய தேசியவாதத்துக்கும் அப்பால் நின்று சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கின்றனர். இது தான் தமிழக அரசியலின் யதார்த்தம்.

பாரதிய ஜனதா கட்சி தேர்தலில் தோற்கடிக்கப்படுவது பயனுள்ளது. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் விழுத்தப்படும் ஒரு கட்சியை விட விழாமல் நிற்கும் அதன் சீரழிவான சிந்தனைகள் ஆபத்தானவை. பாராளுமன்ற அரசியல் வேலைகளால் அவற்றை அழிக்க இயலாது. அதற்கான பணி சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இது பாராளுமன்றக் கட்சிகளுக்கு இயலாதது. எனவே இந்தியாவின் எதிர்காலத்தை இப் பாராளுமன்றத் தேர்தலுக்கும் அப்பாற் பார்க்க வேண்டியிருந்தது.

இந்தியாவின் தெரிவு இந்துத்துவ பாஸிசமா அல்லது மக்கள் சனநாயகமா? இதை நல்ல விதமாக முடிவு செய்யக் கூடியவர்கள் நாட்டின் நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகளாக மட்டுமே இருக்க முடியும்.

- நரசிம்மா -

## இலங்கைத்தீவில்

6ம் பக்க தொடர்ச்சி

அவர் அப்படித்தவர்களிடம் தெரிவித்த தகவல்கள் திடுக்கிடவைப்பனவாகும்.

இந்தியத் தூதரக விருப்பப்படி மலையகத்தில் போட்டியிடும் அணிக்கு போதியளவு பணமும் பாதுகாப்பும் தொடர்ந்து வழங்கப்படுமென்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களில் மூவர் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் என்றும் தேர்தலுக்கு பிறகு அம்மூவரும் மலையத்தில் போட்டியிடும் (இந்தியதூதரகத்திற்கு ஆதரவான) அணியினரும் ஒருமித்து இயங்க முடியுமென்றும் ஜனாதிபதி சந்திரிகாவின் கூட்டணியின் ஆட்சியில் இணைந்து கொள்ள முடியும் என்றும் அந்த அறிவிப்பாளர் கூறியுள்ளார்.

அந்த அறிவிப்பாளர் இந்திய தூதரகத்துடனும் இந்திய உளவு பிரிவினருடனும் பாதுகாப்பு பிரிவினருடனும் நெருக்கமாக இருப்பதாக தெரிகிறது. அவர் இந்திய விஷேட பாதுகாப்பு அதிகாரியாக இருந்த கார்த்திகேயன் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதாகவும் அறியமுடிகிறது.

இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையில் ஜனாதிபதி சந்திரிகாவின் அணியே பாராளுமன்றத்தை ஆளவேண்டுமென்பதுடன் எல்லா அரசியல் அணிகளிலும் அதன் செல்வாக்கை செலுத்திவருகிறது. குறிப்பாக ஐ.ம.சு.முன்னணியின் முக்கிய பங்காளி கட்சியான ஜே.வி.பி முன்பு இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டிலேயே இருந்தது. தற்போது அது அளவுக்கு அதிகமான இந்திய தாசனாக மாறிவிட்டது. சிஹல உறுமய என்று இயங்கி தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமய என்ற பௌத்த மத அடிப்படைவாத கட்சியுடன் இந்திய தூதரகத்திற்கு நெருங்கிய உறவு இருப்பதாக தெரிகிறது. (ஹெலஉறுமய 9 பாராளுமன்ற ஆசனங்களை பெற்றிருக்கிறது.)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவை அமெரிக்க விசுவாசியாக கொள்ளும் இந்தியா சந்திரிகாவையே இந்திய ஆளும் வர்க்கம் தனது விசுவாசியாக நம்புகிறது. அமெரிக்க மேற்குலக செல்வாக்கு மிக்க தமிழரான லக்ஷ்மன் கதிர்காமர் என்ற சட்டவல்லுனர் ஐ.ம.சு. முன்னணியின் பிரதமராக நியமிக்கப்படாமல் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டதில் இந்தியத் தூரகத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி என்றே கூறப்படுகிறது.

இவ்வாறு இலங்கையின் உள்நாட்டு அரசியலின் நடவடிக்கைகளில் கைவைத்து இந்தியதூதரகம் செயற்பட்டு வருகிறது. இது நிச்சயமாக இராஜதந்திரமல்ல. இலங்கையின் பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றில் மட்டுமன்றி அரசியலிலும் இந்திய ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கம் மேலோங்கி வருவதையே காட்டுகிறது.

90கள் வரையும் பெரும்பாலும் இந்தியாவின் வெளிவிவகார கொள்கையே இலங்கையின் வெளிவிவகார கொள்கையாக இருக்க வேண்டும் என்பதிலேயே இந்திய ஆளும்வர்க்கம் பெரிதும் ஆர்வம் காட்டி வந்தது. அதற்கான நடவடிக்கைகளையே எடுத்துவந்தது. 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையுடன் ஆரம்பமான அப்பட்டமான 'சட்டரீதியான' தலையீடு தற்போது எக்கட்சி இலங்கையை ஆளவேண்டும், யார் யார் வெல்ல வேண்டும் என்பது பற்றியெல்லாம் தீர்மானம் எடுக்கும் அளவிற்கு இலங்கை மீதான "இந்திய தலையீட்டு இராஜ தந்திரம்" வளர்ச்சியடைந்து விட்டது.

இந்த இராஜதந்திரம் இந்தியாவின் சாதாரணமான மக்களின் நலனுக்கானதல்ல. மாறாக இப்பிராந்தியத்தில் இந்திய ஆளும் வர்க்கத்தின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் அதன் மேலாண்மைக்கும் தேவையானதாகும்.

இலங்கை மக்களின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம் என்பவற்றின் இதயத் துடிப்பிலே கைவைக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தின் இராஜதந்திரத்தை இலங்கை மக்கள் எவ்வளவு காலத்திற்கு சகித்து கொள்வார்கள் என்பது பற்றி இப்போதைக்கு எதுவும் கூற முடியாது. இலங்கை மக்கள் சகித்து கொள்ளாத போது அவர்களின் போராட்டங்களுக்கும் அதன் விளைவுகளுக்கும் இந்திய ஆளும்வர்க்கத்தினரால் தாக்குப்பிடிக்க முடியாது என்பது மட்டும் இப்போதைக்கு சொல்லி வைக்க முடியும்.

2ம் பக்க தொடர்ச்சி

## வடபுலத்து

என்ற சந்தேகம் பல மட்டங்களிலும் நிலவுகின்றது. பழைய மாணவர்கள் அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என்போர் மத்தியில் உள்ள விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் தத்தமது சுய நலத்திற்கும் சுயலாபத்திற்குமாக இவ் இடமாற்ற விவகாரத்தில் செயல் பட்டிருக்கிறார்களா? இதற்கு உயர் கல்வி அதிகாரிகளும் அரசியல் செல்வாக்கு உள்ளோரும் உடந்தையாகச் செயற்பட்டிருக்கிறார்களா?

அதிபர் கு. சண்முகநாதன் தகுதியும் தரமும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையும் கொண்டவராக இருந்து வந்தவர் என்றே கூறப்படுகிறது. அப்படியான ஒருவர் ஏன் திடீர் மாற்றத்திற்கு ஆளாக்கப்பட்டார் என மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மத்தியில் விசனத்துடன் பேசப்படுகிறது. இத்திடீர் இடமாற்றத்தின் நியாய அநியாயம் உரிய விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டு கல்லூரியின் வளர்ச்சி பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை மாணிப்பாய் இந்துக் கல்லூரி சமூகம் வற்புறுத்தி நிற்பதைக் காண முடிகிறது.

யாழ் நிருபர் - வைநந்தன்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 ஏப்ரல்/மே 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 68

## மேல் கொத்மலை திட்டத்தை இரத்து செய்!

**மேல்கொத்மலை திட்டத்தை இரத்து செய் என்ற சுலோகத்தை கொண்ட போஸ்டர் இயக்கத்தை மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நடத்தியுள்ளது.**

**தமிழ், சிங்கள மொழிகளினாலான போஸ்டர்கள் மலையக நகரங்கள் எங்கும் ஏப்ரல் 19ம் திகதி ஒட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

## தர்மராஜ்யத்தின் சாயம் வெளுத்தது

பொதுத்தேர்தல் நடைபெற்றுப் பின் ஏப்ரல் 22ம் திகதி பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் 'ஜாதிக ஹெலஉறுமய' கட்சியின் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகள் நடந்து கொண்ட விதத்திலிருந்து தர்மராஜ்யத்தை உருவாக்கப் போவதாக பிரசாரம் செய்த அவர்களின் சுயரூபம் அவர்களுக்கு வாக்களித்தவர்களுக்கு புரிந்திருக்கும்.

ஆளும் கட்சிக்கோ எதிர்க்கட்சிக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் பதவிகள் எதனையும் பெறப் போவதில்லை என்றும் அவர்கள் பிரசாரம் செய்த போதும் ஹெலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் 9 பிக்குகளில் இருவர் ஆளும்கட்சியின் சபாநாயகர் அபேட்சகரான டீ.ஈ.டபிள்யூ.குணசேகரவிற்கும், மாற்றிருவர் எதிர்கட்சி அபேட்சகரான டபிள்யூ.எம்.லொக்குபண்டாரவிற்கும் வாக்களித்துள்ளனர். ஐந்து பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

பௌத்தபிக்கு ஒருவரை சபாநாயகராக ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து தெரிவு செய்வார்கள் என்று நம்பியதாகவும், அவ்வாறான தெரிவு செய்ய முன்வராதபடியாலேயே ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்று முடிவு செய்ததாக அதன் தலைவர் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் சபாநாயகர் பதவி மீது கொண்டிருந்த மோகம் வெளியாகியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்படுவதையோ தேசிய இனங்களுக்கு சுயாட்சி தொடங்கப்படுவதை ஜாதிக ஹெல உறுமய அபேட்சகர்கள் புத்ததர்ம போதனைகளை செய்து அதன் பௌத்த மதத்தினைப் பின்பற்றுபவர்களை கவர்ந்ததன் மூலம் தேர்தலில் 9 ஆசனங்களை பெற்றது. புத்தர் போதித்த தர்மத்தை தர்மராஜ்யம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் உறுதி செய்யப் போவதாக பிரச்சாரம் செய்தனர்.

இலங்கை பௌத்த நாடு என்பதையும் பௌத்த தர்மமே மேலானது என்பதையும் வலியுறுத்துவதுடன் பாராளுமன்றத்தையும் பௌத்த விகாரையாக்குவதற்கு ஹெலஉறுமய விரும்புகிறது.

மதங்கள் மக்களுக்கு விடுதலையை பெற்றுத்தரவில்லை என்பதும் மதங்களினால் மக்களிடையேயான ஐக்கியம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிந்ததே. ஆளும் வர்க்கம் மதமேலாதிக்கத்தையும் மதங்களுக்கிடையிலான பூசல்களையும் நடாத்துவதற்காக பயன்படுத்துகின்றன என்பது தெளிவானதே.

இலங்கையின் ஆளும்வர்க்கம் பௌத்த மத மேலாதிக்கத்தையும் சிங்கள இன மேலாதிக்கத்தையும் பிரதான வழிமுறையாகக் கொண்டே ஆட்சி நடத்திவருகின்றது. அதன் வளர்ச்சியாகவே பௌத்த மத ஹெலஉறுமயின் பௌத்த மத அடிப்படை வாதமாகவே வளர்ச்சி பெற்றுள்ளது. ஆளும் வர்க்க அரச இயந்திரத்தில் பௌத்த மத அடிப்படை வாதத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சியை ஹெலஉறுமய செய்து வருகிறது. இது மதவாத பாசிச ஆட்சியை நிலை நிறுத்துவதற்கான முயற்சியாகும்.

வெளிநாட்டு சக்திகள் இரண்டு பெரிய கட்சிகளுக்கு மட்டுமன்றி மத அடிப்படைவாத ஹெலஉறுமயவிற்கும் ஆதரவையும், ஆசிர்வாதத்தையும் வழங்கி வருகிறது. குறிப்பாக இந்துத்துவ இந்திய ஆளும் வர்க்கம் ஹெலஉறுமயவை நன்கு ஆசிர்வதித்துள்ளது.

புத்தரின் பெயரைச் சொல்லி புத்த தர்மத்தின் பெயரால் மத அடிப்படை வாதம் வளர்க்கப்படுகிறது. இதனால் இலங்கை மேலும் அமைதியை இழக்கும். மக்களிடையே பிளவும் பூசலும் ஐக்கியமின்மையும் ஏற்படும்.

இதுவரை விகாரைகளிலும் பொது இடங்களிலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் இருந்த பௌத்த மத அடிப்படை வாதம் பாராளுமன்றத்தில் 9 பௌத்த பிக்குகள் இடம்பெறுவதன் மூலம் அரச இயந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது.

தர்மராஜ்யத்தை ஏற்படுத்துவதாக கூறும் ஹெலஉறுமயவின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க தற்போது இருப்பதாக கொள்ளப்படும் அரைகுறை ஜனநாயகமும் இல்லாது போய்விடும்.

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரிலேயே தர்மராஜ்யகாரர்களின் சாயம் வெளுத்துவிட்டது. இவற்றை அவதானித்து அவர்களை முற்றாக நிராகரிக்கும் நிலை பௌத்த மக்களுக்கு ஏற்படுவது உறுதியாகிறது.

---

## பறைமேளக்

10ம் பக்க தொடர்ச்சி..

"மட்டக்களப்பு மாவட்டத்தில் பறைக் குடும்பங்கள் அக்கரைப் பற்று கோணாவில் முதல் வெருகல் வரை செறிந்து வாழ்கின்றன. இதில் கோணாவில் வடக்கில் 400, கழுதாவளையில் 100, புன்னைக்குளத்தில் 35, ஆரையம்பதியில் 30, கல்முனையில் 30, வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இத்தரவுகளைப் பார்க்கும் போது பறைக் குடும்பங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. பல்வேறு தொழில்களில் (அரச உத்தியோகம் உட்பட) அவர்கள் ஈடுபட்டு வருவதை இது எடுத்துக் காட்டுகிறது".

இவ்வாறு கூறி பறையர் சமூக இளைஞர்கள் தமது குலத் தொழிலாகிய பறை மேளக் கலையைக் கைவிட்டு வருவதை மிகுந்த கவலையோடு வெளிப்படுத்துகிறார் அன்பு மணி. நாம் அன்புமணி என்பாரிடம் கேட்பது யாதெனில் பறைமேளக் கலை தமிழர்களின் தனித்துவமானதும், வரலாற்றுப் பெருமை மிக்கதும் இசை நுணுக்கம் கொண்டதும் பாதுகாக்கப்பட வேண்டியதும் என்றால் அதற்கு பறையர் சாதிக் குழுமம் மட்டும் தான் பொறுப்புடையதாக இருக்க வேண்டுமா? அந்தச் சாதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மட்டும்தான் அக்கலை வருமா? உயர் சாதி எனக் கொள்ளப்படும் இளைஞர்களுக்கு பறைமேளக் கலை கைவராத விடயமா? வீணை, மிருதங்கம், வயலின், பரதநாட்டியம் போன்றன உயர்சாதியினர் எனப்படுபவர்களால் கற்கப்பட்டு அவற்றின் வித்துவங்கள் விரிவாக்கப்பட்டும் அரங்கேற்றங்களாக கச்சேரிகளாக இசை அரங்குகளாக முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றாக இப்பறைமேளக் கலையை உயர் சாதியினர், உயர் குலத்தினர், மேட்டுக்குடி இளம் தலைமுறையினர் கற்க வேண்டும் பாதுகாக்க வேண்டும் என அக்கட்டுரையில் அன்புமணி என்பார் ஒரு சொல் தானும் உரைக்கவில்லை. அவரது வற்புறுத் தலும் வேண்டுகோளும் யாதெனில் பறையர் சமூக இளைஞர்கள் பறைமேளக் கலையை பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வந்த சாதிய குலத்தொழில் மரபைப் பேண வேண்டும் என்பது தான். அவ்வாறு பேணுபவர் களுக்கு பட்டங்களும் விருதுகளும் கொடுத்து ஏனையோர் பறையர் சாதியினரை உயர்வானவர்கள் எனக் கூறினால் போதுமானது என்பது தான்.

இந்த அன்பு மணியாரின் தர்க்கம் என்னவென்றால் சாதிய அமைப்பு முறையானது கலையின் பெயரால் தமிழின் பெயரால் குலத்தொழில்களாகத் தளைத்தோங்க வேண்டும். அதேவேளை ஒவ்வொரு சாதியினரும் தாழ்வுச் சிக்கல் இன்றித் தம்மை உயர் சாதியினர் என நினைத்துக் கொண்டால் போதுமானது என்பது தான்.

பின் நவீனத்துவவாதிகள் சாதியக் குலத் தொழில்களுக்கு நவீன பெயரிடுவதன் மூலம் சாதிய அமைப்பில் காணப்படும் முரண்பாட்டிற்கு மறைப்புக் கட்ட முனைகிறார்கள். உதாரணமாக சலவைத் தொழிலாளர்களை "சலவைக் கலைஞர்கள்" என்றும் சவரத் தொழிலாளர்களை "சவரக் கலைஞர்கள்" என்றும் மேன் நிலையாக்க வசனங்களில் சேர்க்கிறார்கள். இதனால் சாதிய முரண்பாட்டைப் பூசி மெழுகிக் கொள்வதுடன் வர்க்கநிலைப்பாட்டில் இவர்களைத் தொழிலாளர்கள் அல்ல எனக் காட்டும் உள்நோக்கமும் உறைந்து காணப்படுவதை பின் நவீனத்துவப் பின்னலிலே காணமுடி கின்றது.

இதுவரை காலமும் தமிழர் நிலவுடமை மேட்டுக்குடி ஆதிக்க வர்க்க சக்திகளின் நலன்களையும் தேவைகளையும், தமிழின் பெயரால் கலைகளின் பெயரால், சமயச் சடங்குகளின் வழியாக பழமை, வழமை, பாரம்பரியம் என்பன வற்றின் ஊடாகப் பாதுகாத்து சாதியப் படி நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களை ஆகக் கீழே வைத்து நசுக்கி ஒடுக்கப்பட்டு வந்த நிலை மாற்றப்பட வேண்டும். அதன் ஒரு அம்சமே மட்டக்களப்பு பறையர் சமூக இளைஞர்கள் பறை மேளமடிக்கும் தொழிலை அதனைச் சாதியக் குலத்தொழில் என்ற அடிப்படையில் கைவிடக் கோருவது முற்றிலும் நியாயமானதாகும். அதற்கு எதிராக அன்புமணி போன்றோர் ஒலம் வைப்பது அவர்களது சாதிய வக்கிரத் தையையே வெளிப்படுத்துகின்றது.

உண்மையில் அன்புமணிக்கு தமிழர்களின் பாரம்பரிய பறைமேளக் கலை மீது பற்றும், பாசமும் இருக்குமாயின் பறையர் எனக் கூறப்படும் சாதிய சமூக மக்களின் வட்டத்திற்கு அப்பால் குறிப்பாக உயர் சாதியினரை உள்ளடக்கிய ஒரு அமைப்பை உருவாக்கி அதில் பறைமேளக் கலை பற்றிய பயிற்சியை வழங்கித் தமிழர் பாரம்பரியத்தைப் பாதுகாத்து ஒரு புதிய முன்னுதாரணத்தை வழங்க முன்வரல் வேண்டும். அதற்கு அன்புமணி போன்றவர்கள் தயாரா?.

---

## ஏகாதிபத்திய...

5ம் பக்க தொடர்ச்சி

கைப்பற்றிக் கொள்ளும் நோக்கில் ஆப்கானிஸ் தானிலும் ஈராக்கிலும் அரபு நாடுகளிலும் கொள்ளைக்கார யுத்தத்தை அமெரிக்கா நடாத்தி வருகின்றது.

விடுதலை யுத்தங்களை ஏகாதிபத்தியம் தமது பிரதான எதிரிகளாகவே கொள்கின்றது. சில விடுதலை இயக்கங்களுக்கு உதவுவது போன்று பாசாங்கு செய்வதுடன் தமது உள்நோக்கங்களுக்காக சில வகை உதவிகளையும் செய்து கொள்கிறது. உதாரணமாக ஈராக்கினதும் அதன் எல்லையோரமாகவும் உள்ள குர்திஷ் இன விடுதலை இயக்கங்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் பணமும் ஆயுதமும் வழங்கி வந்தது. ஆனால் இன்று அந்த விடுதலை இயக்கங்கள் ஈராக்கிய ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அமெரிக்காவின் கைக்கூலி இயக்கமாக மாற்றப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியம் பற்றிய தெளிவும் தூரப் பார்வையும் இல்லாதுவிடின் எத்தகைய வல்லமை மிக்க விடுதலை இயக்கமும் ஏகாதிபத்திய சக்திகளால் சீரழித்து சிதைக்கப்பட்டுவிடும் அபாயம் உலகில் இருந்தே வருகின்றது.

எனவே இன்றைய உலகச் சூழலில் ஏகாதிபத்தியத்தின் உலக மேலாதிக்கத்திற்கான நோக்கையும் போக்கையும் அதன் செயற்திட்டமான உலகமயமாதலின் அபாயத்தையும் விளங்கிக் கொண்டு விடுதலைப் போராட்டங்கள் வழி நடக்க வேண்டிய தேவை ஏற்பட்டு நிற்கின்றது. அதேபோன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டங்கள் புதிய தளங்களில் கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. நாடு, நாட்டு வளங்கள், மக்கள், தேசிய இனங்கள், சுதந்திரம், சுயாதிபத்தியம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தூர நோக்கில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெகுஜன இயக்கங்கள் தோற்றுவிக்கப்படுவதும் அவை விடுதலைப் போராட்டமாக மாற்றப்படுவதும் இன்றைய தேவையாகும்.

---

## பொதுத் தேர்தல்

9ம் பக்க தொடர்ச்சி..

வாக்கு களையும் வாக்களித்த (கள்ள வாக்குகள் உட்பட்ட) தொகையையும் பார்த்தால் 45–50 வீத வாக்குகள் அளிக்கப்படவில்லை. அத்துடன் வேண்டுமென்றே வாக்குகளைப் பழுதாக்கியவர்களின் தொகை கணிச மானதாக இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

மட்டக்களப்பில் கருணாவின் ஆதரவாளர்கள் எனக்கூறப்படும் மூவர் தெரிவானது பிரதேசவாதம் இன்னமும் வலுவான ஒரு சக்தியாக விளங்குவதையே குறிக்கிறது.

தந்தை செல்வா சாதியை ஒழித்தார், தமிழ்ப்பேசும் மக்களை மத வேறுபாடு இல்லாது யாழ்ப்பாணம், மலையகம், மட்டக்களப்பு என்ற வேறுபாடு இல்லாமல் இணைத்தார் என்ற கட்டுக் கதைகளை இன்னமும் சொல்கிறவர்களுக்கு இத் தேர்தல் முடிவுகள் எதையுமே கூறாது. அவர்கள் தமது கனவுகளிலேயே சீவிப்பார்கள்.

பிரதேசவாதத்துக்கு எதிராகச் செயற்பட அவசியமான அரசியற்பார்வை சாதிய வர்க்க ஒடுக்குமுறைகட்கு எதிரானதாகவும் அமைய வேண்டும் தமிழ்த் தேசியம் என்றுமே அதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை.

முஸ்லிம்களின் தலைமைத்துவம் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் ஹக்கீமின் அரசியல் நிலைமை மிகவும் ஆட்டங்கண்டு இருந்தது. அதற்கு முன்பே தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள அவர் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. அவர் பயன்படுத்திய தமிழர் எதிர்ப்பு ஆயுதத்தை அவருடைய எதிரிகள் அவரிலும் திறமையாகப் பாவிக்கத் தொடங்கி விட்டனர். அவர் யூஎன்.பி. குடையின் கீழ் தேர்தலில் நிற்பதே இயலாத ஒரு சங்கடம் ஏற்பட்டது. இதனாலேயே கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது.

திருமதி அஷ்ரஃப் இனவாத ஜே.வி.பி. யுடன் நெருங்கி நிற்க இயலுமானால் அவரால் மற்ற அரசியல் எதிரிகளுடன் சந்தர்ப்பவாத சமரசம் செய்வது சிரம மானதல்ல. ஆளையாள் தூற்றித்திரிந்த யாவரும் ஹக்கீமுக்கு எதிராக ஜே.வி.பி.– ஸ்ரீ.ல.சு.க. அணியில் இணைந்தாலும் தேர்தலில் கடுமையான குழிபறிப்புப் பிராசாரம் நடந்தது. ஹக்கீம் தனது வெற்றியை உறுதிப்படுத்தப் பணத்தை வாரி இறைத்து விளம்பரம் செய்தார். வழமையான தில்லு முல்லுகள் எல்லாத் தரப்பிலும் நடந்தன.

தேர்தல் முடிவுகள் ஹக்கீமுக்குப் பாராளுமன்ற அரசியலில் மறுவாழ்வு தந்தன. ஆனால் அவர் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஐக்கியத்தைக் குலைக்கிற விதமாகவே சென்ற தேர்தலும் அதன் பின் விளைவுகளும் அமைந்துள்ளன.

முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றி வாய்கிழியப் பேசிக் கொண்டவர்கள் முடிவில் அதைக் குலைத்துத் தமது அரசியல் தரகு வேலைக்குத் தளம் அமைக்கவே செயற்படுகின்றனர் என்பது கவலைக்குரிய விடயம். முஸ்லிம் மக்களும் தமிழர்களும் வேற்றுமைகளை மறக்க வேண்டுமானால் அது பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் மட்டுமே இயலுமாகும்.

### மலையகத்தில் மறுபடியும் அரசியல் பித்தலாட்டம்

யூஎன்.பி தனக்குப் போதிய ஆசனங்களை ஒதுக்க மறுத்த காரணத்தை முன்வைத்து நுவரெலிய மாவட்டத்தில் மட்டும் தனித்துப் போட்டியிட்ட சந்திரசேகரனும் காலங்கடந்து ஞானம் பெற்ற சதாசிவமும் தமது சரிவின் மூலம் ஆறுமுகன் தொண்டமானின் கைகளையே வலுப்படுத்தியுள்ளனர்.

சில ஆண்டுகள் முன்னம் இவர்கள் உருவாக்க முயன்ற மலையக ஐக்கியமும் மயில் சின்னமும் மறந்து போன விடயங்களாகி விட்டன. இவர்களுடன் கூட்டுச் சேர்ந்த சந்தர்ப்பவாத உதிரிகள் எல்லோரும் இப்போது புலம்பித்திரிகிறார்கள்.

மலையக மக்களை ஆறுமுகன் ஏலத்தில் விற்பார் என்பது நிச்சயம். எப்போது என்பது தான் இப்போதுள்ள கேள்வி.

மேலும் மலையகத்தில் ஆதிக்க அரசியல் பித்தலாட்டத்திற்கு எதிராக இத் தேர்தலில் புதிய ஜனநாயக கட்சி தனது நிராகரிப்பு – செல்லுபடியற்றதாக்கும் பிரசாரத்தை பரவலாக மேற் கொண்டிருந்தது. பல தோட்டங்களில் தொழிளார்கள் பிரதான கட்சியின் வேட்பாளர்களைத் திருப்பி அனுப்பிய பல நிகழ்வுகள் நடந்தன. அவ்வாறே வாக்குச் சீட்டுக்கள் கணிசமான தொகையில் பழுதாக்கப்பட்டும் இருந்தன. இவை மலையக அரசியல் காணும் சில ஒளிக்கீற்றுக்களாகும்.

### இடதுசாரிகட்கான பாடம்?

ட்ரொட்ஸ்கிய சமசமாஜக் கட்சியும் திரிபுவாதிகளும் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் சாபக் கேடுகள் என்பது பழைய கதை. அவர்களது சிறுபிள்ளைத் தனம் 1977 ல் அவர்கட்குப் பெரும் அவமானமிக்க ஒரு தோல்வியைப் பெற்றுக் கொடுத்தன.

ட்ரொட்ஸ்கியவாதிகள் என்றுமே வரலாற்றைச் சரிவர விளங்கிக் கொள்ள இயலாதவர்கள் என்பதைக் கடந்த தேர்தலை விட இந்தத் தேர்தல் வலிதாக உணர்த்தியுள்ளது.

இடதுசாரி ஐக்கியத்துக்கு வாய்ப்பளிக்க மறுத்த விக்கிரமபாகுவும் அவரிடம் பணிந்து போன வாசுதேவவும் இம் முறை மேசைச் சின்னத்தில் பெற்ற வாக்குக்களை வட அதிக வாக்குகள் ஐக்கிய சோசலிசக் கட்சிக்குக் கிடைத்துள்ளன.

ஐக்கிய சோசலிசக் கட்சி 1990ல் உருவான புதிய இடதுசாரி முன்னணியில் ஒரு கூட்டாளியாயிருந்தது. விக்கிரமபாகுவின் திமிர்த்தனமும் சுயநலமும் காரணமாக விலகிச் சென்றது. அக்கட்சி புதிய இடதுசாரி முன்னணி என்ற போரிற் போட்டியிட்ட விக்கிரமபாகுவின் வேட்பாளர்களை முந்தியது எப்படி? ஐக்கிய சோஷலிசக் கட்சிக்கு விக்கிரமபாகுவுக்கோ வாசுதேவவுக்கோ கிடைத்த விளம்பரமோ ஊடக ஆதரவோ இல்லை. ஆனால் கீழ் மட்டத்தில் ஆதரவாளர்கள் செயற்பட்டனர்.

இத்தேர்தலில் விக்கிரமபாகுவின் வேடத்தை இன்னும் பலர் நன்றாக அறிந்து விட்டனர் என்பதையே விளக்குகிறது. தனது தகுதியும் தலைமைத்துவமும் பற்றிய பகட்டான பேச்சுக்களைச் கை விட்டு அவர் மற்றவர்களுடன் நேர்மையாக ஒத்துழையாது போனால் அவர் அரசியல் அநாதையாகி அழிவது அவரை நிராகரிப்பவர்கள் கூட எதிர்பாராத வேகத்தில் நடக்கும்.

இந்த பாராளுமன்றத் தேர்தலில் காலத்தையும் உழைப்பையும் வீணடித்ததற்குப் பதிலாக நாட்டின் முக்கியமான பிரச்சனைகள் பற்றி மக்களிடையே பிரசாரம் செய்திருந்தால் அது நாடு எதிர்நோக்கும் பிரச்சனைக்கு முகங்கொடுக்க வல்ல ஒரு வெகுஜனத் தளத்தை உருவாக்க உதவியிருக்கும். இதைக் கடந்த பத்தாண்டுகளாகத் தவறவிட்டு வெறும் தேர்தல் களத்தில் மட்டும் முகம் காட்டமுற்படுவதும் அதில் தோல்வி காண்பதும் மக்களை அணிதிரட்ட உதவ மாட்டாதவைகளாகும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.